வெளியீடு 20-9-2003 Issued 20-9-2003

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 3, 2003 – தொகுதி 39 – எண் 1

Thursday the 3rd April, 2003 – Volume 39 – No. 1

...மன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...tive Assembly Secretariat, Chennai - 600 009

D
V211,31'P03
P03.39.1
184531

[Price Rs. 3.00

3-4-2003

உள்ளடக்கம்

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	iii-vii
Governor and Council of Ministers	ix-xii
பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xiii-xvi
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xvii-xxvii
1. இரங்கற் குறிப்பு—	
முன்னாள் உறுப்பினர் மறைவு	1-2
2. வினாக்கள்-விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	2-37
3. தகவல் கோரல்—	
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்பு	38-39
4. கவன ஈர்ப்பு—	
மாயனூர் சிமெண்ட் பைப் தொழிற்சாலைக் குழாய்களை குடிநீர் வடிகால் வாரியம் வாங்குதல்	39-42
5. அறிக்கை அளித்தல்—	
பொது நிறுவனங்கள் குழு	42-43

6. **அறிவிப்புகள்—** பக்கங்கள்

(அ) மானியக் கோரிக்கைகள், 2003-2004, அவையில் முன்மொழிதல் குறித்து (ஆசெ) 43

(ஆ) பத்திரிகையாளர்களுக்கு அறிவுரை 110-111

7. **மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—**

கோரிக்கை எண் 18 - மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை 43-123

மாண்புமிகு திரு. செ. செம்மலை 44, 57-58, 59, 62, 63-64, 65-66, 82-83, 84-86, 87,88,97,106-107, 109,115-116,123

திரு. மீ.அ. வைதியலிங்கம் 58-72

*திருமதி தமிழ்மொழி ராஜதத்தன் 72-79

*திரு. எச்.எம். ராஜு 79-82, 83, 84, 86-89

டாக்டர் ஆர். கோவிந்தசாமி 90-98

*திரு. ஏ. பூவராகமூர்த்தி 99-104

*திரு. டி. மணி 104-110, 111

திரு. சோ. இராசேந்திரன் 112-117

*திரு. எச். ராஜா 117-123

8. **அரசினர் தீர்மானம்—**

விதி 32-ஐத் தளர்த்தல் 124

9. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** 125

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் திரு. பெ. ஸ்ரீ. ராமமோகன் ராவ்

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

3. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. **சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**
இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன், கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப் பட்டோர்.

7. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:**
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:**
தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

9. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

தமிழ்நாடு ஆவண சுவடி அப்பகம்
184531
சென்னை 600 008
நூலகம்

10. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

11. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**
ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

12. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

13. மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**
மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

14. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**
வணிக வரிகள்.

15. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:**
கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

16. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு எம்.சி. சம்பத்:** *நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.*

17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** *கால்நடை பராமரிப்பு.*

18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** *குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.*

19. வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.*

20. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** *வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.*

21. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** *பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.*

22. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு.

23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** *கைத்தறி மற்றும் துணித் தொழில்.*

24. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** *மீன்வளம்.*

25. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:** *சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister**	..	**The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare.
2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue**	..	**The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor Irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports.
3. **Minister for Finance**	..	**The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies.
4. **Minister for Law and Information Technology**	..	**The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology.
5. **Minister for Hindu Religious and Charitable Endowments**	..	**The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments.

6. Minister for Health and Education	..	**The Hon. Thiru S. Semmalai:** Health, Medical Education and Family Welfare, Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.
7. Minister for Backward Classes	..	**The Hon. Thiru A. Papasundaram:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities.
8. Minister for Labour	..	**The Hon. Thiru A. Anwer Rhazza:** Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.
9. Minister for Agriculture	..	**The Hon. Thiru R. Jeevanantham:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.
10. Minister for Social Welfare	..	**The Hon. Tmt. B. Valarmathi:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.
11. Minister for Adi-Dravidar Welfare	..	**The Hon. Thiru C. Karuppasamy:** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.
12. Minister for Transport	..	**The Hon. Thiru R. Viswanathan:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

13. Minister for Electricity and Industries	..	**The Hon. Thiru Nainar Nagenthran:** Electricity, Non-conventional Energy Development, Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.
14. Minister for Commercial Taxes	..	**The Hon. Thiru Se.Ma. Velusamy:** Commercial Taxes.
15. Minister for Co-operation, Food & Civil Supplies & Consumer Protection	..	**The Hon. Thiru P. Mohan:** Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.
16. Minister for Local Administration	..	**The Hon. Thiru M.C. Sampath:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.
17. Minister for Animal Husbandry	..	**The Hon. Thiru P.V. Damodaran:** Animal Husbandry.
18. Minister for Rural Industries	..	**The Hon. Thiru R. Vadivel:** Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.
19. Minister for Forests and Environment	..	**The Hon. Thiru R. Vaithilingam:** Forests & Environment and Pollution Control.
20. Minister for Housing and Urban Development	..	**The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

21. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development.

22. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru K.K. Balasubramanian:** Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control.

23. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles.

24. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries.

25. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation.

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

மாற்றுத் தலைவர்கள்*

திரு. கே. பாண்டுரங்கன்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. லா. சந்தானம்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

* *28-1-2003* அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல்.	- கூடுதல் செயலாளர்
திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல்.	- இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல்.	- இணைச் செயலாளர்
திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல்.	- இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. வே. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல்.	- துணைச் செயலாளர்
திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ.	- பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர்.
திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.	- துணைச் செயலாளர்
திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல்.	- துணைச் செயலாளர்
திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல்.	- துணைச் செயலாளர்
திரு. இல. மாரியப்பன், பி.ஏ.	- துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல்.	- துணைச் செயலாளர்
திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல்.	- துணைச் செயலாளர்
திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி.	- துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (விடுப்பு)
திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல்.	- துணைச் செயலாளர்

திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல்.	- குழு அலுவலர்
திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல்.	- குழு அலுவலர்
திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ.	- துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. மா. ரவிச்சந்திர ராஜ், பி.ஏ.,	- குழு அலுவலர்
திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ.	- சார்புச் செயலாளர்
திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல்.	- சார்புச் செயலாளர்
திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல்.	- சார்புச் செயலாளர்
திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல்.	- சார்புச் செயலாளர்
திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல்.	- சார்புச் செயலாளர்
திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல்.	- சார்புச் செயலாளர்
திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.	- தலைமை நிருபர்
திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல்.	- சார்புச் செயலாளர்
திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல்.	- தலைமை நிருபர்
திரு. தி. உமாபதி, பி.ஏ.	- தலைமை நிருபர்
திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல்.	- சார்புச் செயலாளர்
திரு. கோ. தேவராஜன், பி.ஏ.	- சார்புச் செயலாளர்

திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ.	- தலைமை நிருபர்
திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல்.	- சார்புச் செயலாளர்
திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ.	- சார்புச் செயலாளர்.
திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ.	- சார்புச் செயலாளர், பேரவைத் தலைவரின் தனிச் செயலர் (பொறுப்பு)
திரு. க. கிருஷ்ணன், பி.ஏ.	- சார்புச் செயலாளர்
செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ.	- சார்புச் செயலாளர்
திருமதி சீ. நிர்மலா, பி.காம்.	- தலைமை நிருபர் (விடுப்பு)
திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல்.	- தலைமை நிருபர்
திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ.	- தலைமை நிருபர் (பொறுப்பு)

பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1.	அசோகன், திரு. அ.	- திருவாரூர் (செ.வ.)
2.	அண்ணாதுரை, திரு. செ.	- ஜெயங்கொண்டம்
3.	அண்ணாமலை, திரு. கு.	- தென்காசி
4.	அண்ணாவி, திரு. ப.	- தொட்டியம்
5.	அப்பாவு, திரு. மு.	- ராதாபுரம்
6.	அய்யாறு வாண்டையார், திரு. கே.	- திருவையாறு
7.	அரசன், திரு. ப.	- அறந்தாங்கி
8.	அருணாசலம், திரு. அ.	- வரகூர் (செ.வ.)
9.	அருள், திரு. பி.எஸ்.	- புவனகிரி
10.	அழகம்மாள், திருமதி வி.	- தலைவாசல் (செ.வ.)
11.	அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு.	- திருச்செந்தூர்
12.	அன்பழகன், திரு. ஆ.கு.சீ.	- பெரணமல்லூர்
13.	அன்பழகன், திரு. கு.	- நிலக்கோட்டை (செ.வ.)
14.	அன்பழகன், திரு. கே.பி.	- பாலக்கோடு
15.	அன்பழகன், திரு. ஜெ.	- தியாகராய நகர்
16.	அன்பழகன், பேராசிரியர் க.	- துறைமுகம்
17.	அன்பில் பெரியசாமி, திரு.	- திருச்சிராப்பள்ளி-2
18.	அன்வர் ராஜா, திரு. அ.	- இராமநாதபுரம்
19.	ஆண்டிவேல், திரு. ப.	- வேடசந்தூர்
20.	ஆறுமுகம், திரு. கே.	- செங்கல்பட்டு

21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
31. இராமு, திரு. ந .. உளுந்தூர்பேட்டை(செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத் தமிழன், திரு. இரா. தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ)

43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
64. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

65. காளிமுத்து, டாக்டர் கா.	திருமங்கலம்
66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே.	அரூர் (செ.வ.)
67. கிருஷ்ணன், திரு. ஆர்.	அந்தியூர் (செ.வ.)
68. குமாரதாஸ், டாக்டர் தே.	கிள்ளியூர்
69. குரு என்கிற குருநாதன், திரு. ரெ.	ஆண்டிமடம்
70. கோதண்டராமன், திரு. ஜி.	முகையூர்
71. கோபிநாத், திரு. கே.	ஓசூர்
72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர்.	விருத்தாசலம்
73. கோவிந்தராஜ், திரு. வெ.	கிருஷ்ணகிரி
74. கோவை தங்கம், திரு.	வால்பாறை (செ.வ.)
75. சக்திவேல் முருகன், திரு. எம்.	அம்பாசமுத்திரம்
76. சக்ரபாணி, திரு. ஆர்.	ஓட்டன்சத்திரம்
77. சசிகலா, திருமதி ஆர்.	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
78. சண்முகநாதன், திரு. எஸ்.பி.	ஸ்ரீவைகுண்டம்
79. சண்முகம், திரு. சி.	பூந்தமல்லி
80. சண்முகம், திரு. சி.வி.	திண்டிவனம்
81. சண்முகவேலு, திரு. சி.	உடுமலைப்பேட்டை
82. சந்தானம், திரு. லா.	உசிலம்பட்டி
83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ்.	இராணிப்பேட்டை
84. சந்திரமோகன், திரு. நா.	சீர்காழி (செ.வ.)
85. சந்திரன், திரு. வீ.	சிவகங்கை
86. சம்பத், திரு. எம்.சி.	நெல்லிக்குப்பம்
87. சரவணன், திரு. துரை. கி.	சிதம்பரம்

88. சரோஜா, திருமதி இரா.	உப்பிலியாபுரம் (ஆ.வா.)
89. சாமி, திரு. ஆர்.	மேலூர்
90. சாமிநாதன், திரு. மு.பெ.	வெள்ளக்கோவில்
91. சிதம்பரம், திரு. ப.	பவானிசாகர்
92. சிவகாமி, திருமதி வி.	தாராபுரம் (செ.வ.)
93. சிவசாமி, திரு. கே.கே.	அருப்புக்கோட்டை
94. சிவசாமி, திரு. சி.	திருப்பூர்
95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என்.	கரூர்
96. சிவபுண்ணியம், திரு. வை.	மன்னார்குடி
97. சிவபெருமாள், திரு. அ.	ஓட்டப்பிடாரம் (செ.வ.)
98. சிவராஜ், திரு. சு.	ரிஷிவந்தியம்
99. சின்னசாமி, திரு. மா.	பழனி (செ.வ.)
100. சீனிவேல், திரு. எஸ்.எம்.	திருப்பரங்குன்றம்
101. சுதர்சனம், திரு. கே.	கும்மிடிப்பூண்டி
102. சுதர்சனம், திரு. டி.	திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர்.	ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ.	மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ.	கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம்.	கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம்.	குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ.	ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ.	மருங்காபுரி

110. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

111. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்

112. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்

113. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்

114. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

115. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்

116. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்

117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்

118. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)

119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்

120. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்

121. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்

122. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி

123. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)

124. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்

125. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு

126. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்

127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி

128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்

129. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)

130. துரைமுருகன், திரு. .. காட்பாடி

131. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி

132. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு

133. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்

134. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி

135. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்

136. நடராசன், திரு. வ.து. .. இளையான்குடி

137. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி

138. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு

139. நளினி மனோகரன், திருமதி .. போளூர்

140. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு

141. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு

142. நீலமேகவர்ணம், திரு. லெ. .. சாத்தான்குளம்

143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்

144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்

145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்

146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-I

147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)

148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)

149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை

150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

151. பழனிப்பன், திரு. பெ. .. மொரப்பூர்

152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்

154. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
155. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை
156. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
168. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
169. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
170. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
171. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
172. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
173. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
174. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
175. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு

176. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
177. மணி, திரு. டி. - விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
179. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. - கூடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. - தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆ.கு. - ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. - சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. - ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப் பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
194. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
195. ராமசாமி, திரு. பி.சி. - மொடக்குறிச்சி
196. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
197. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
198. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி

199. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
200. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
201. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
202. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
203. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்
205. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்சி
207. வடிவேல், திரு. ஆர். .. வாணியம்பாடி
208. வளர்மதி, திருமதி பா. .. ஆலந்தூர்
209. வளர்மதி ஜெபராஜ், திருமதி .. மதுரை மேற்கு
210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. .. காட்டுமன்னார் கோவில் (செ.வ.)
211. வாசுதேவன், திரு. பெ. .. மதுராந்தகம்
212. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
213. வில்வநாதன், திரு. இரா. .. சோளிங்கர்
214. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. .. பூங்கா நகர்
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. புதுக்கோட்டை
216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. .. பனமரத்துப்பட்டி
217. வீரபாண்டியன், திரு. ஜெக. .. மயிலாடுதுறை
218. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
219. வெங்கடாஜலம், திரு. செ. .. சேலம்-1

220. வேதரத்தினம், திரு. எஸ.கே. .. வேதாரண்யம்
221. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
222. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
223. வேல் முருகன், திரு. தி. .. பண்ருட்டி
224. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
225. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
226. ஜீவானந்தம், திரு. இரா. .. நாகப்பட்டினம்
227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. .. ஆரணி
228. ஜெயக்குமார், திரு. கு. .. நாமக்கல் (செ.வ.)
229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
230. ஜெயராமன், திரு. வி. .. பொள்ளாச்சி
231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
233. ஹக்கீம், திரு. எம்.ஏ. .. மதுரை மத்தி
234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு
235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி .. (நியமனம்)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. என்.ஆர். சந்திரன் .. தலைமை வழக்கறிஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 20, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

2003 ஏப்ரல் 3, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து"

நோய் இல்லாமல் இருத்தல், சிறந்த செல்வம், விளைபொருள் வளம், இன்பமயமான வாழ்க்கை, நல்ல பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டிற்கு அணிகலன்களாக விளங்குவன.

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர் திரு. பி. பொன் சொக்கலிங்கம் அவர்கள் 27-2-2003 அன்று மறைவுற்றதைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. பொன் சொக்கலிங்கம் அவர்கள் 1971 முதல் 1976 வரை சிதம்பரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினரின் மறைவினால் அவரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 161, திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

161—

இரயில்வே மேம்பாலம்

***207—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர், திருப்பாதிரிப்புலியூர் இரயில்வே மேம்பாலம் கட்டுமானப் பணிகள் எப்பொழுது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர், திருப்பாதிரிப்புலியூர் இரயில்வே மேம்பாலம் கட்டுமானப் பணிக்கு ஒப்பந்தக்காரர் தேர்வு செய்யப்பட்டு வேலை துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் இரயில்வே மேம்பாலத்திற்கான ஆரம்பக் கட்டப் பணிகள், திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த நேரத்தில் சுமார் 1 கோடி

ரூபாய் செலவில் நில ஆர்ஜிதப் பணிகள் முதலில் முடிவடைந்தன. பிறகு கழக அரசு மத்திய அரசை வலியுறுத்தியதன் காரணமாக இரயில்வே துறை அங்கே தங்களுடைய பணியாக அந்த மேம்பாலக் கட்டுமானப் பணிகளைத் தொடங்கியது. ஆனால் அதைத் தொடர்ந்து மாநில அரசினுடைய பங்காக அதனுடைய இணைப்புச் சாலைகளும், பாலத்திற்கான பிற வேலைகளையும் செய்ய வேண்டிய அந்தப் பணிகள் இப்போது தொடங்கப்பட்டு விட்டனவா? தொடங்கப் பட்டிருக்குமேயானால் எப்போது அவை முடிவடையும்? அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்கிற விவரங்களை அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட மேம்பாலப் பணிக்காக ரூ.1,400 இலட்சத்திற்கு 5-10-2000-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான தொழில்நுட்ப களப் பணிகள் முடித்து தேவையான வடிவமைப்புகள் தலைமைப் பொறியாளர், வடிவமைப்பு மற்றும் ஆய்வு அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ளன. இப்பணிக்கு தொழில்நுட்ப அங்கீகாரம் ரூ. 1,540 இலட்சத்திற்கு 1-11-2002 அன்று வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பரிசீலனை செய்து குறைந்த தொகை கோரிய திருவாளர்கள் பி & சி கட்டுமான நிறுவனத்திடம் அவர்களுடைய மாற்று வடிவமைப்பின்படி பணியைச் செய்து முடித்திட 27-2-2003 அன்று ஒப்படைக்கப்பட்டது.

ஒப்பந்தக்காரரிடம் செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்படி இப்பணி 26-2-2005-க்குள் முடிக்கப்பட வேண்டும். மேற்கண்ட மேம்பாலப் பணிக்கான வேலை தளம் 27-2-2003-ல் ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டு அன்று முதல் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. பாலத்தின் ஒவ்வொரு தூணின் அடித் தளத்தில் மண்ணின் வகையினை உறுதிப்படுத்துவதற்கு ஆழ்துளை இயந்திரங்கள் மூலம் துளையிடப்பட்டு மண் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அது முடிவடையும் தருவாயில் உள்ளது. மேலும் துளையிட்ட கீழ் தூண் அடித் தளம் அமைப்பதற்கான சோதனை அடித் தள கான்கிரீட் தூண்கள் test piles இரண்டு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் தாங்கும் திறன் அறிவதற்காக பளு ஏற்றி சோதனை செய்யப்பட உள்ளது. ஒப்பந்தக்காரரிடமிருந்து மாற்று வடிவமைப்பு விவரங்களும், வரைபடங்களும் பெறப்பட்டுள்ளன. தலைமைப் பொறியாளர் வடிவமைப்பு மற்றும் புலன் ஆய்வு, சென்னை

அவர்களிடமிருந்து அவற்றிற்கான ஒப்புதல் பெறப்பட்டவுடன் கட்டுமான வேலைகள் தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெறும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாக கடலூர் மக்களுடைய முக்கியக் கோரிக்கையாக இருக்கின்ற அந்த மேம்பாலப் பணிகளில் சாலையில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலைக் குறைப்பது என்பது அடிப்படையான ஒன்றாகும். அந்த வகையில் இப்போது கடலூர் - சிதம்பரம் சாலையிலிருந்து கடலூர்-வண்டிப்பாளையம் போகின்ற அந்தச் சாலையை இணைப்பதற்கு ஏற்ற வகையில் அந்தப் பாலம் இப்போது அமைக்கப்படுகிற சூழல் இருக்கிறது. அந்தப் பாலத்தையொட்டி அருகில் பேருந்து நிலையம் இருக்கிறது. ஆக, பாலத்திலிருந்து கிளைப் பாதையாக பேருந்து நிலையத்திற்கும் வழிநிலை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பது அவ்வூர் மக்களுடைய கோரிக்கையாகும். அதை அரசு செய்து தர முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த பஸ் நிலையத்திற்குண்டான அணுகுசாலை அமைக்கும் பணி ஆய்வு செய்யப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 162, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

162—

வேகத் தடை

•16759—திரு. தி. வேல் முருகன்:

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்திலுள்ள கெடிலம் ஆற்றுப் பாலம் மற்றும் பழைய பாலத்தின் இரண்டு சாலைகள் சந்தித்துப் பிரியும் இடத்தில் விபத்தினைத் தடுக்க வேகத் தடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது நெடுஞ்சாலைத் துறையின் நடைமுறைகளின்படி அரசுச் சாலைகளில் வேகத் தடை அமைப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. தி. வேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, கும்பகோணம், தஞ்சாவூர் செல்வதற்கு பண்ருட்டி வழியாக அதிக வாகனங்கள் செல்கின்றன. அந்த வகையில் கடந்த தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்ட புதிய பாலத்தின் வழியாகச் செல்கின்றன. அதற்கு முன்பாக நடைமுறையில் இருந்த பாலத்தின் வழியாகவும் வண்டிகள் செல்கின்றன. ஆக, இந்த இரண்டு வழிகளில் வருகின்ற வண்டிகள் ஒரே இடத்தில் சந்திக்கின்ற இடத்தில், இணைகின்ற இடத்தில் விபத்துகள் ஏற்பட்டு உயிர்ச்சேதம் அதிக அளவில் ஏற்பட்டு வருகின்ற காரணத்தினாலும் தொடர்ந்து பண்ருட்டி மக்களின் நீண்ட நாளையக் கோரிக்கையான ஒரு புறவழிச் சாலை அதாவது இரயில்வே மேம்பாலத்துடன்கூடிய புறவழிச் சாலையும் கோரியிருக்கிறார்கள். அந்த வகையில் அதிகமான உயிர் சேதங்களைத் தடுக்கின்ற வகையில் நம்முடைய அரசு புறவழிச் சாலையுடன்கூடிய, வேகத் தடையுடன் கூடிய - அதாவது இரண்டு சாலைகளில் வருகின்ற வண்டிகள், வாகனங்களில் ஓட்டுநர் ஒருவர்கூட வேகத்தைக் குறைப்பதேயில்லை, அப்படிச் செல்கின்றபோது விபத்து ஏற்பட்டு அடிக்கடி உயிர்ப்பலி ஆகின்ற காரணத்தினால் பண்ருட்டி நகரத்திற்கு இரயில்வே மேம்பாலத்துடன் கூடிய ஒரு புறவழிச் சாலையை அமைத்து, வேகத் தடை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

[2003 ஏப்ரல் 3

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள விக்ரவாண்டி, கும்பகோணம், தஞ்சாவூர் சாலை மாநிலச் சாலை கிலோ மீட்டர் 30/2-ல் உள்ள பாலம் 106 பாலங்கள் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட பாலமாகும். சாலையும் புதிய பாலத்தின் அணுகுச் சாலையும் சந்திக்கும் இடத்தில் வேகத் தடை அமைக்க தற்போது நெடுஞ்சாலைத் துறையின் நடைமுறைகளின்படி அரசுச் சாலைகளில் வேகத் தடை அமைப்பது தடை செய்யப்பட்டிருக்கிறது. எனினும் வாகன வேகத்தைக் கட்டுப்படுத்தவும் விபத்துகளைத் தவிர்க்கவும் தேவையான இடங்களில் எச்சரிக்கைப் பலகைகள் மற்றும் rumbler stripes அமைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே ஒரு மேம்பாலத்துடன்கூடிய பை-பாஸ்—புறவழிச் சாலை கேட்டார்கள். அதற்கு அவர்கள் தனி வினா தொடுத்தால் பதில் வழங்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேகத் தடை அமைக்கின்ற நேரத்தில் இரண்டு சக்கர வாகனங்களில் செல்லக்கூடியவர்கள் பலர் அதிலே தெரியாமல் விழுந்து உயிர் இழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இங்கே அமைச்சர் அவர்கள் வேகத் தடை அமைப்பதற்கு அரசு தடை செய்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அது தேசிய நெடுஞ்சாலைகளில் மட்டுமா அல்லது மாநில நெடுஞ்சாலைகளிலும் தடை செய்யப்பட்டிருக்கிறதா? இல்லாவிட்டால் இப்படி அமைக்கப்பட்ட அந்த வேகத் தடைகளை எடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா அல்லது அது தெரிகின்ற வகையில் மஞ்சள் கலர் வெள்ளைக் கலர் வண்ணம் அடித்து அது இரண்டு சக்கர வாகன ஓட்டிகளுக்கு நல்ல முறையில் தெரியக்கூடிய வகையிலே அந்த வேகத் தடைகள் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலக் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்துச் சாலைகளிலும் தடை செய்யப்பட்டிருக்கிறது. தேவையான இடங்களில்—இரயில்வே குறுக்கிடுகின்ற அந்தப்

2003 ஏப்ரல் 3]

பாதைகளில் இரயில்வே துறைக்கு சிறிதாக வேகத் தடை அவர்கள் போட்டுக்கொள்ளலாம் என்று அனுமதி அளித்திருக்கிறோம். மற்றபடி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது இடத்தில் வேகத் தடை வேண்டுமென்று விரும்பினால் அந்த இடத்தில் எச்சரிக்கைப் பலகைகள் மற்றும் rumbler stripes அமைத்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 163, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

163—

சட்டப் படிப்பு

***30063—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலுள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் 3 ஆண்டுகள் மற்றும் 5 ஆண்டுகள் சட்டப் படிப்பை மீண்டும் கொண்டுவரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு நல்ல பதிலை எதிர்பார்த்தேன். All India Bar Council மாலை நேர சட்டக் கல்லூரியை மூடுவது என்று முடிவு எடுத்தது. அதன்படி நாடு முழுவதும் இன்றையதினம் மாலை நேர சட்டக் கல்லூரிகள் நிறுத்தப்பட்டுவிட்டன.

முற்பகல் 10-10

பெங்களூரிலே சிறப்பு சட்டக் கல்லூரி ஒன்று இருக்கிறது. National Law College தேசிய சட்டக் கல்லூரியில் அங்கே இருக்கின்ற அந்தப் பட்டப் படிப்பைப் போலவே இங்கேயும் ஒரு சிறப்பான திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்கிற நோக்கத்தோடு இந்த 3 ஆண்டு, 5 ஆண்டு பட்டப் படிப்புகளை இங்கே நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அந்த 1-வது ஆண்டு, 2-வது ஆண்டு படித்துக்கொண்டிருந்த மாணவர்களை எல்லாம் மதுரை, திருச்சி, திருநெல்வேலி போன்ற அரசு சட்டக் கல்லூரிகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். இதை எதிர்த்து அன்றையதினம் மாணவர்கள் போராடியிருக்கிறார்கள். திருச்சியிலோ, மதுரையிலோ அல்லது திருநெல்வேலியிலோ இருக்கின்ற சட்டக் கல்லூரிகளிலே விடுதி வசதி கிடையாது என்று சொல்கிறார்கள். எனவே மிகவும் சிரமத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இவ்வளவு அவசரமாக முடிவு எடுக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? மீண்டும் அந்த 3 ஆண்டு, 5 ஆண்டு சட்டப் படிப்பைத் தொடங்குவதிலே என்ன சிரமம் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியினுடைய திறனை உயர்த்தியும், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தினுடைய School of Excellence சிறப்பு சட்டப் பள்ளியும், National Law School தற்போது பெங்களூரில் இயங்கி வருகின்ற அந்த School of Excellence அந்தச் சிறப்பு சட்டப் பள்ளியைக் காட்டிலும் தரம் மேலான ஒரு பள்ளியை நிறுவி அதன்மூலம் சட்ட அறிவு. முழுமையாகப் பெற்றிருக்க வேண்டும், எல்லாவற்றையும் தெரிந்து இருக்க வேண்டும் என்கிற உயர்ந்த மனப்பான்மையோடு ஆரம்பிக்கப்பட்டது. School of upgradation நம்முடைய சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியிலே 80 இடங்கள் தோற்றுவிக்கப்பட்டு தரம் உயர்த்தியிருக்கிறார்கள். எனவே அங்கே மறுபடியும் அந்த 3 வருடம், 5 வருடம் நீடித்து வைக்கும்போது அந்த நோக்கம் சிதைந்துவிடும் என்கிற ஓர் அடிப்படையிலேதான் இங்கே 5 வருடம் பட்டப் படிப்பிற்கான 241 இடங்களும், 3 வருடம் பட்டப் படிப்பு படிக்கின்ற 321 இடங்களும் எல்லாக் கல்லூரிகளிலும்—

தமிழ்நாட்டிலுள்ள 3 அரசு சட்டக் கல்லூரிகளுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கின்றன. எனவே ஒரு வாதத்திற்காக எடுத்துக் கொண்டாலும்கூட, சட்டப் படிப்பு படிக்கின்ற அந்த இடங்கள், ஏறக்குறைய 80, + 40 திறன் உயர்த்தப்பட்டதால் 80 இடங்களும், 40 இடங்கள் நம்முடைய அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் இயங்குகின்ற காரணத்தாலும், 120 இடங்கள் நமக்கு அதிகமாக கிடைத்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் உச்ச நீதிமன்றத்திலே வழக்கு இருப்பதன் காரணமாக இதுபற்றி மேலும் நாம் விவாதிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவப் படிப்பு, பொறியியல் படிப்பு போல இப்போது சட்டம் பயில வேண்டுமென்று சொல்லி பட்டப் படிப்பை முடித்தவர்கள் எல்லாம் அதிகமாக சட்டப்படிப்பு படிப்பதற்கு முன்வருகிறார்கள். இப்படி சட்டக் கல்லூரிகளை, பொறியியல் கல்லூரிகளை எல்லாம் அதிக அளவு தொடங்குவதைப் போல, கூடுதலாக இப்போது 3 ஆண்டுகள், 5 ஆண்டுகள் சட்டப் படிப்பை நம்முடைய அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியிலேயும் கொண்டுவரலாம். அப்படி வரவில்லையென்று சொன்னாலும்கூட இப்படி கர்நாடக மாநிலத்திலே, பெங்களூரிலே, மற்ற இடங்களிலேயும் நிறைய தனியார் சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. தமிழ்நாட்டிலே அப்படி அல்ல. எனவே மாணவர்களுக்கு அதிகமாக சட்டம் படிப்பதற்கு வாய்ப்பு இருக்கக்கூடிய வகையிலே தனியார் சட்டக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, தற்போது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து வருகின்ற நடவடிக்கைகளின் காரணமாக அதிகமான அளவிற்கு சட்டப் படிப்பைப் படிக்க வேண்டுமென்கிற ஒரு மேலான ஆர்வம் வெளிப்படுகிறது என்கிற அந்தத் தகவலை நம்முடைய மாண்புமிகு

[2003 ஏப்ரல் 3

உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள். ஒரு புள்ளிவிவரத்தை எடுத்துக்கொண்டாலும்கூட வருடத்திற்கு 22,000 பேர் சட்டப் படிப்பிற்காக விண்ணப்பிக்கிறார்கள். எனவே ஒட்டுமொத்தமாக நம்முடைய M.B.B.S., B.V.Sc., அதற்குப் பிறகு B.E., என்று சொன்னால், ஏறத்தாழ 2 லட்சம் பேர் இருக்கின்ற சூழ்நிலையில் இப்போது அதை ஒப்பிடும்போது மிகவும் குறைவாக இருக்கின்ற ஒரு நிலைமை தெரிகிறது. எனவேதான் 120 இடங்கள் இப்போது அதிகமான அளவிற்கு சட்டப் படிப்பு படிக்கின்றவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுத்திருக்கின்றோம். தனியார் சட்டக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால்—அதுவும் சேலத்தில் இப்போது ஒரு கல்லூரி இயங்கிக் கொண்டிருக்கிறது. அவர்களும் உச்ச நீதி மன்றத்தினுடைய ஆணையைப் பெற்றுத்தான் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கல்லூரிகள்மீது கூட சில புகார்கள் எல்லாம் வந்து அதையெல்லாம் விசாரிக்கச் சொல்லியிருக்கிறோம். எனவே உச்ச நீதிமன்றத்தினுடைய அந்த முடிவு என்னவாகும் என்பதைப் பொறுத்து வருங்காலத்தில் ஆரம்பிக்கப்படுவது குறித்து யோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 164, திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

164—

கோயில் திருப்பணிகள்

***19938—திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை அழகிய மன்னார் ராஜகோபாலசுவாமி திருக்கோயில் திருப்பணியை நடத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

2003 ஏப்ரல் 3]

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அழகிய மன்னார் ராஜகோபாலசுவாமி திருக்கோயில் மிகக் குறைவான வருவாய் உள்ள கோயிலாகும். திருப்பணிக்கு ரூ.50 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான உபயதாரர்கள் கிடைக்காத நிலையில் இப்போது திருப்பணிகள் மேற்கொள்ளாமலே உள்ளது. உபயதாரர்கள் கண்டறியப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை தொகுதியிலே, பாளையங்கோட்டை நகரத்திலே நடுநாயகமாக அமைந்துள்ள அழகிய மன்னார் ராஜகோபாலசுவாமி திருக்கோயில் கிட்டத்தட்ட 1,200 ஆண்டுகளுக்கு முந்தைய பழமைவாய்ந்த கோயில். மன்னர் காலத்தில் கட்டப்பட்ட அந்தக் கோயிலில் திருப்பணி நடந்து முடிந்து கிட்டத்தட்ட 500 ஆண்டுகள் இருக்கும் என்று கருதுகிறார்கள். அங்கே சோழன், பல்லவன், பாண்டியன் ஆகியோரது சிற்பங்களை, அந்த மன்னர்களுடைய சிற்பங்களை தன்னகத்தே கொண்ட ஒரு சிறப்பு வாய்ந்த திருக்கோயில். அந்தக் கோயிலுக்கு இதுவரையில் திருப்பணி செய்யப்படாமல் இருப்பது அந்தப் பகுதி மக்களுடைய மனதை மிகவும் வேதனைப்படுத்துவதாக இருக்கிறது.

பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்த வரையிலே அது ஒரு மத நல்லிணக்கம் உள்ள தொகுதி. இந்து சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், இஸ்லாமியச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், கிறிஸ்துவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் பெருவாரியாக வாழ்கின்ற ஒரு தொகுதி. மத நல்லிணக்கத்தைப் பற்றி நாம் எல்லோரும் இங்கே பேசுகிறோம். அதை மனதிலே கொண்டு, அந்தத் தொகுதியிலே, அந்தப் பக்தர்களுடைய நீண்டநாள் கோரிக்கையான இந்தக் கோரிக்கையை இந்த அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே 2000 ஆம் வருடத்தில் அந்தத் திருக்கோயிலிலே அம்மன் சன்னதி கோபுரமும், மூலக் கோபுரமும் பக்தர்களால், உபயதாரர்களால் அவற்றுக்குத் திருப்பணி செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ராஜகோபுரம் மட்டும்தான் மீதி இருக்கிறது. இங்கே அமைச்சர் அவர்களும் உபயதாரர்களைப்

பற்றிச் சொன்னார்கள். நான் விசாரித்த அளவிலே, எனக்குத் தெரிந்த அளவிலே ஓரளவிற்கு அங்கே உபயதாரர்கள் திருப்பணி செய்யத் தயாராக இருப்பதாகத்தான் நான் கேள்விப்பட்டேன். அரசு அதிலே நல்ல ஒரு முயற்சியைச் செய்யுமானால், கண்டிப்பாக அந்தத் திருக்கோயிலிலே திருப்பணி உறுதியாக நடைபெறும் என்கின்ற அந்த எண்ணம் மட்டுமல்லாமல், இதில் ஏதோ விதியை மட்டும் சொல்லாமல், நான் கேட்பது ஒரு இஸ்லாமியச் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் மத நல்லிணக்கத்தை மனதிலே வைத்து, இந்த அரசு திருப்பணியைச் செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இஸ்லாமியச் சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், இந்து மதத்தினுடைய கோயிலுக்காக இவ்வாறு பயன்படக்கூடிய ஒரு நல்ல கேள்வியைக் கேட்டதற்காக முதலிலே அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேநேரத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கட்சி ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டில் ஆட்சியில் இருந்த நேரத்திலேதான், 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அங்கே இந்தப் பணி தொடங்கப்பட்டது. ஆனால் பிப்ரவரி 2001-ல் அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு, தமிழ்நாட்டில் எங்கெங்கு 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருப்பணிகள் நடைபெறாமல் இருக்கின்றனவோ, அவையெல்லாம் கண்டறியப்பட்டு திருப்பணிகள் நடத்த வேண்டும் என்ற அடிப்படையில் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதனுடைய அடிப்படையிலேதான் நெல்லையிலே இருக்கின்ற நெல்லையப்பர் கோயிலில்கூட இப்போது 1½ கோடி ரூபாய் அளவிற்குத் திருப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

தாங்கள் இஸ்லாமியச் சமுதாயத்தைச் சேர்ந்தவர். இந்து மதத்திற்காக இப்படிப் பாடுபடுகின்ற உங்களுக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கூடியவிரைவில் உபயதாரர்களைத் தேர்வு செய்து, திருப்பணிகள் தொடங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது உபயதாரர்களைத் தேடிப் பிடித்து, இலட்சக்கணக்கிலே பணத்தைக் கொண்டுவந்து, இந்த அழகிய மன்னார் ராஜகோபாலசுவாமி திருக்கோயில் போன்றவற்றிலே எல்லாம் திருப்பணிகள் செய்வதிலே உள்ள சிரமங்களை எடுத்துரைத்தார்கள். அந்த அளவிற்கு அரசு மிகச் சிரமத்தோடு உபயதாரர்களை எல்லாம் தேடிப் பிடித்து இந்தக் கோயில் திருப்பணிகள் செய்வதில் இருக்கக்கூடிய இடர்ப்பாடுகளை உணர்ந்திருக்கிற காரணத்தாலே, எங்களுடைய வேலூரிலே இருக்கக்கூடிய ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலைகூட 30 ஆண்டுகளாக ஒரு தனியார் ஸ்தாபனம் நிர்வாகம் செய்துகொண்டு வந்தது. அவர்களே பல உபயதாரர்களைத் தேடிப் பிடித்து இப்போதுதான் மிக உயரிய அளவிலே சிறப்பாகப் பாராட்டப்படுகிற அளவிலே, அங்கே கும்பாபிஷேகம் எல்லாம் நடத்தி முடித்தார்கள். இப்போது பொற்கலசத்தைப் பொருத்துகிற அளவிற்கு பொற்கோயிலாகவே மாற்றியிருக்கிறார்கள். சிலையே இல்லாத கோயில்; நீரே இல்லாத ஆறு பாலாறு என்றெல்லாம் எங்களுடைய வேலூருக்கு என்று சில பெருமைகளைச் சொல்வார்கள். அந்தப் பெருமைகளை உடைத்தெறிந்து அங்கே இருக்கின்ற மக்கள் கொதிப்படைந்து, சிலையைக் கொண்டுபோய் 1981 ஆம் ஆண்டிலே கோயிலிலே கொண்டுபோய் வைத்து இப்போது வழிபாடு நடந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில், நேற்றைக்கு முன்தினம், 31 ஆம் தேதி...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முடியுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியை.

முற்பகல் 10-20

திரு. சி. ஞானசேகரன்: சிறப்பாக தனியார் மூலம்—அது தனியார் ஸ்தாபனம். டிரஸ்ட் மூலம் நடத்தி வந்த திருக்கோயிலை மாண்புமிகு

அமைச்சர் அவர்களுடைய துறை, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை இப்பொழுது திடீரென்று அந்தக் கோயிலை சுவாதீனம் எடுத்துக்கொண்டு, இப்பொழுது அங்கே உங்களுடைய அறநிலையத் துறை அலுவலரைப் போட்டுவிட்ட காரணத்தாலே மக்கள் கொதிப்பு அடைந்து நாளைக்கு மறுநாள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் - முதலமைச்சர் அவர்களிடத்திலேகூட மனு தந்திருக்கிறேன்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, இல்லை, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது.

திரு. சி. ஞானசேகரன்: இல்லை, இல்லை, குற்றச்சாட்டே இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம்கூட மனு கொடுத்திருக்கிறேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து எங்களுடைய ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலை, மீண்டும் அந்த ஜலகண்டேஸ்வரர் தர்மஸ்தாபனத்தை அங்கே ஒப்படைப்பதற்கு ஆவன செய்வாரா, கொந்தளிப்பை அடக்குவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய வேலூர் மாவட்டம், வேலூர் நகரில் ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் உண்டியல் வைத்து அதன்மூலம் அவர்கள் வசூல் செய்ததால் கோயில் நிர்வாகத்தில் முறைகேடு நடந்துள்ளதாக எழுந்த புகாரைத் தொடர்ந்து கோயிலின் அசையாச் சொத்து, வருவாய், விக்கிரகங்கள் மற்றும் எல்லாவிதமான கணக்கு விவரங்களுடன் ஆஜராகுமாறு கோயில் நிர்வாகிகளுக்கு கடந்த 20-3-2003 அன்று நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இந்த ஆலயத்தில் ஏழு உண்டியல்கள் முன் அனுமதி பெறாமல் வைத்துள்ளார்கள் என்பது கண்டறியப்பட்டு, அறநிலையத் துறை முத்திரை பதிக்கப்படாமல் இருக்கும் உண்டியல்களில் செலுத்தப்படும் பணம் அதிகாரிகள் முன்னிலையில் திறந்து கணக்கிடப்படாமலும், தன்னிச்சையாக நிர்வாகம் நடந்துகொள்வதாகவும், அங்கீகாரம் பெறாமலேயே கட்டணச் சீட்டுகள் அச்சிடப்பட்டு பணம் வசூலிக்கப்பட்டு வருவதாகவும் அறநிலையத் துறைக்குத் தெரியவந்தது. ஆன்மீக பக்தர்கள் பலர் தகவல் கொடுத்ததன் காரணமாக இந்தக் கோயிலின் எல்லாவிதமான கணக்குகளையும், அசையாச் சொத்து, வருவாய், விக்கிரகங்கள் விவரங்கள் மற்றும் ஆவணங்களுடன் ஏப்ரல்

மாதம் 7 ஆம் தேதி வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. மார்ச் 27 ஆம் தேதி கோயில் உண்டியலுக்கு முத்திரை வைக்கப்பட வேண்டும் என்றும், இதற்குக் கோயில் நிர்வாகம் ஒத்துழைப்புத் தர வேண்டும், அப்படி தாங்கள் ஒத்துழைப்பு கொடுக்காவிட்டால் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நிர்வாகத்திற்குத் தகவல் அனுப்பப்பட்டது. ஆனால் ஆணையரிடமிருந்து இதற்குத் தகவல் கிடைக்கப்படாததால் 27-3-2003 அன்று இதன்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆணையர் அனுமதியுடன் 31-3-2003 ஆம் தேதி அதிகாலை 6-30 மணிக்கு ஜலகண்டேஸ்வரர் கோயில் திறக்கப்பட்டபோது எந்தப் பிரச்சினையும் ஏற்படாத வகையில் வேலூர் டவுன் D.S.P. திரு. காளி அவர்கள் தலைமையில் போலீஸ் பாதுகாப்புடன் இந்து சமய அறநிலையத் துறையின் உதவி ஆணையர் திரு. தாமோதரன் மற்றும் வேலூர் R.D.O. திரு. சந்திரமோகன், தாசில்தார் திரு. சங்கரன், துணை தாசில்தார், உமாமகேஸ்வரி, வருவாய் ஆய்வாளர் திரு. சுந்தரராஜன், கிராம நிர்வாக அலுவலர் திரு. ஹபிபுல்லா உள்பட வருவாய்த் துறை அதிகாரிகளுடன் சென்றனர். ஆனால் கோயிலில் இருந்த 7 உண்டியல்களும் அப்போது திடீரென்று காணாமல் போய்விட்டன. உடனடியாகப் போய் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மீண்டும் 10.00 மணிக்கு மூன்று உண்டியல்கள் அங்கே வைக்கப்பட்டு முத்திரையிடப்பட்டு 31-3-2003 ஆம் தேதியிலிருந்து அறநிலையத் துறையின்கீழ் எடுக்கப்படும் என்று அங்கு அருகில் இருக்கும் தோட்டப்பாளையம் தாரகேஸ்வார் கோயில் செயல் அலுவலராக பணியாற்றிக் கொண்டிருக்கும் திரு. சுந்தரராஜன் அவர்கள் இந்தக் கோயில் தக்கார் ஆக நியமிக்கப்படுவார் என்று ஆணையிடப்பட்டது. அப்படி அறநிலையத் துறையின் பொறுப்பில் இருந்தாலும், அங்கு உள்ள மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மற்றும் ஆன்மீகத்தில் பற்றுள்ளவர்கள் சிறந்த முறையில் திருவிழா நடத்துவதற்கும், தற்சமயம் எப்படி அங்குள்ள மக்கள் அங்கு வந்து ஆண்டவனை வழிபடுகிறார்களோ, அதைவிட மிகச் சிறப்பாக பக்தர்கள் வந்து வழிபட புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா என் 165, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

165—

மாணவர் விடுதி

•12787—திரு. எஸ். நடராஜன்:

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, நத்தம் ஊராட்சியில் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு விடுதி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ். பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) புதிய விடுதிகள் திறக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எனவே இந்தக் கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதிக்கு உட்பட்ட நத்தம் கிராமத்திலே அரசு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அதைச் சுற்றிலும் உள்ள பல ஊர்களிலே பள்ளி வசதியே இல்லை. நீண்ட தூரத்திலிருந்து மாணவர்கள் எல்லாம் அங்கு வந்து படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே, இப்படி மிக பின்தங்கிய பகுதி, போக்குவரத்து வசதி இல்லாத பகுதி, நீண்ட தூரம் மாணவர்கள் எல்லாம் சென்று படிக்க வேண்டிய காரணத்தினாலேயே அங்கே அரசு மாணவர் விடுதி அவசியம் தேவைப்படுகிறது என்பதை அரசு உணர்ந்து இப்படிப்பட்ட பிற்படுத்தப்பட்ட பகுதியினுடைய ஏழையெளிய மாணவர்கள் கல்வியிலே அக்கறைகொண்டு நமது அரசு விதியைத் தளர்த்தி பின்தங்கிய பகுதிகளுக்கு சிறப்பு முன்னுரிமை அளிக்க கூடிய வகையிலே அங்கு பிற்படுத்தப்பட்ட

மாணவர் விடுதியைத் தொடங்க அரசு விதியைத் தளர்த்தியாவது ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அரசு தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகளுடன் அரசின் சொந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கும், அரசின் சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் அரசின் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு புதிய விடுதிகள் திறப்பது குறித்த திட்டம் ஏதும் தற்போது ஆய்வில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவிப்பதோடு, இதற்குப் பின்னால் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல விடுதிகள் கட்ட வேண்டுமென்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட பிறகு நாட்ராம்பள்ளியில் அவர் சொல்கின்ற இடத்திலே அந்த விடுதியைக் கட்டுவதற்கு இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்தில், இந்த ஆண்டு...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பதவி உயர்விற்காக நன்றி. பேரவைத் துணைத் தலைவர் என்று சொல்லுங்கள்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு பதில் கூறுகின்ற நேரத்தில் இந்த விடுதிகள் எல்லாம் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக்கொண்டிருப்பதை அரசுக் கட்டடங்களாக மாற்ற வேண்டுமென்று இந்த அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்திருக்கிறது என்பதைச் சொன்னார்கள். அதேபோல இந்த அரசு சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று விடுதி கட்டுவதற்கு நிதி ஒதுக்கியதில் சென்ற ஆண்டு வறட்சியின் காரணமாக அந்த நிதியிலே ஒரு விடுதிக்கு ரூ.12 இலட்சம் என்று ஒதுக்கியிருந்ததில், 7 இலட்சம்

[2003 ஏப்ரல் 3

ரூபாயை குடிநீர் ஆதாரத்திற்காக வழங்க வேண்டுமென்று சொல்லிவிட்ட நிலையில், வெறும் 5 இலட்சம் ரூபாயில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து விடுதிக் கட்டடங்கள் கட்ட முடியுவில்லை என்கிற நிலையில், அப்படி அந்த 5 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கிய இடங்களுக்கு இந்த ஆண்டிலே கட்டப்படுகின்ற விடுதிகளிலே முன்னுரிமை அளித்து அது செயல்படுத்தப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு ரூ. 5 இலட்சத்தில் மட்டும் கட்டினால் போதாது. மேற்கொண்டு அரசு ரூ. 26.50 இலட்சம் போட்டுதான் ரூ. 31 இலட்சம் என்ற அளவில் விடுதிகள் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே சென்ற ஆண்டு புரட்சித் தலைவி அரசு 114 கட்டடங்களைக் கட்ட ஆணை பிறப்பித்து தற்போது கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பல விடுதிகள் முடியும் நிலையில் இருக்கின்றன. வருகின்ற ஆண்டுகளில் விடுதிகள் கட்ட வேண்டுமென்று புரட்சித் தலைவி ஆணையிட்டிருக்கிறார்கள். வருகின்ற ஆண்டுகளில் அனைத்து அரசு வாடகை விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையிலே நல்ல போதிய வசதிகளுடன் கூடிய விடுதிகள் கட்டித் தரப்படும் என்பதை நான் உங்கள் மூலமாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 166, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

166—

மதுரை விமான நிலையம்

***11353—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2003 ஏப்ரல் 3]

மதுரை விமான நிலையத்தை விரிவுபடுத்தி பன்னாட்டு விமான நிலையமாக மாற்றியமைக்க மைய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மதுரை விமான நிலையத்தின் ஓடுபாதையை விஸ்தரிப்பு செய்வதற்காக 24.610 எக்டேர் புஞ்சை நிலத்தினைக் கையகப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை விமான நிலையம் பன்னாட்டு விமான நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டால், தென் மாவட்டங்களின் தொழில் வளம் மற்றும் சுற்றுலா வளம் ஆகியவை மேம்பட வாய்ப்புள்ளது. ஆகவே மதுரை விமான நிலையத்தில் உள்ள ஓடு தளத்தை Run way 6,000 சதுர அடியிலிருந்து 7,500 சதுர அடியாக நீட்டிப்புச் செய்ய வேண்டும் என்பதால் இந்த விமான நிலையத்திற்குத் தேவையான சுமார் 60 ஏக்கர் நிலத்தை மத்திய அரசுக்கு வழங்க நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூடுதல் பொது மேலாளர், இந்திய விமான நிலையக் கட்டுப்பாட்டுக் குழுமம் Airport Authority of India, புதுடெல்லி அவர்கள் தனது 23-2-2002 நாளிட்ட கடிதத்தில் பி 737, 803 மற்றும் ஏ.பி. 320 ரக விமானங்களை இயக்குவதற்கு ஏற்ப விமான ஓடு பாதையை 6,000 சதுர அடியிலிருந்து 7,500 சதுர அடி வரை உறுதிப்படுத்தவும் மற்றும் விரிவு செய்யவும் இந்திய விமான நிலையக் கட்டுபாட்டுக் குழுமம், புதுடெல்லி திட்டமிட்டுள்ளது என்றும், அதற்காகத் தேவைப்படும் கூடுதல் 60 ஏக்கர் நிலத்தினை தமிழக அரசிடம் கேட்டுள்ளதாகவும், இதற்கான நஷ்டஈட்டுத் தொகை மதுரை மாவட்ட ஆட்சியரிடம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், இதுவரை நிலம் இந்திய விமான நிலையக் கட்டுப்பாட்டுக் குழுமத்திடம் ஒப்படைக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். தவிர ஒரே நேரத்தில் 400 பயணிகள் பயன்படுத்துவதற்கு ஏற்றாற்போல் தற்போது

[2003 ஏப்ரல் 3

இருக்கும் கட்டடத்தைக் கட்ட இந்திய விமான நிலையக் கட்டுப்பாட்டுக் குழுமம் திட்டமிட்டுள்ளது என்றும், போக்குவரத்து மேம்படுவதைப் பொறுத்து இவ்வேலைகளை 10-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முற்பகல் 10-30

எனினும் விமான நிலையத்தை மேம்படுத்துவது என்பது, விமான ஓடு பாதையை 7,500 சதுர அடி வரை விரிவுபடுத்துவதைப் பொறுத்தே அமையும் என்பதையும் அவர் தெரிவித்துள்ளார். மதுரை விமான நிலையத்தின், ஓடு பாதையை விரிவுபடுத்துவதற்காக 24.610 எக்டேர் நிலத்தைக் கையகம் செய்ய 8 கிராமங்களில் நில எடுப்புச் சட்டம், அவசரப் பிரிவு 1894-ன்கீழ் 4(1) அறிவிக்கை மற்றும் 6-ன்கீழான விளம்பல் வெளியிடப்பட்டு அவை தமிழ்நாடு அரசிதழ் மற்றும் தமிழ் நாளேடுகளிலும் பிரசுரம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 5 பிரிவிற்கு மட்டும் நில மதிப்புப் பிரேரணைகள், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையருக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டுவிட்டதாகவும், மீதமுள்ள 3 பிரிவிற்கு மதுரை மாவட்ட வருவாய்க் கோட்டாட்சியரிடமிருந்து நில மதிப்புப் பிரேரணைகள் இன்னமும் பெறப்படவில்லை என்றும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். நில மதிப்புப் பிரேரணைகள் அனுப்பப்பட்ட 5 பிரிவுகளில், ஒன்றுக்கு மட்டும் ஒப்புதல் அளிக்கப்பட்டு தீர்ப்புரை award வழங்கப்பட்டு 11-10-2002 ஆம் நாளன்று நிலம் இந்திய விமான நிலையக் கட்டுப்பாட்டுக் குழுமத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றுமுள்ள நில எடுப்பு நடவடிக்கைப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, Airport Authority of India—விடம் பன்னாட்டு விமான நிலையம் அமைக்கும் முன்மொழிவுகள் proposals இருக்கிறது என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே மதுரை விமான நிலையத்தைப் பன்னாட்டு விமான நிலையமாகத் தரம் உயர்த்த நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசு வலியுறுத்துமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2003 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த நடவடிக்கையால்தான் 6,000 அடி நிலத்தினை, 7,500 அடி ஓடு பாதையாக மாற்ற வேண்டுமென்று Airport Authority தெரிவித்திருக்கிறது. அந்த நடவடிக்கையை ஒட்டிதான் இன்றைக்கு நில எடுப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நில எடுப்புப் பணிகள் முடிவடைந்ததற்குப் பின்பு, நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று அவருடைய முயற்சியின் பேரில் மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கு மாநில அரசு, மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்திவரும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை நீண்ட நெடுங்காலமாக மதுரை மக்களுடைய எதிர்பார்ப்பை உள்ளடக்கிய கோரிக்கை. தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் மோகன் அவர்களும் நாடாளுமன்றத்தின் வாயிலாக இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் நீண்டகாலக் கோரிக்கையாகவும் இது இருக்கிறது. நான் சட்டமன்ற உறுப்பினரான பிறகு இதுகுறித்து கடிதங்களை அனுப்பியிருக்கின்றேன். வினாவையும் எழுப்பியிருக்கிறேன். தற்பொழுது அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய பதிலுக்கு எனது நன்றியறிதலை மதுரை மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேசமயத்தில் இந்தப் பணியின் விவரங்கள்பற்றி தெரிவித்ததை, எந்த இடத்தில் இப்பொழுது நிற்கிறதோ, அதிலிருந்து மீண்டும் தொடர்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்பதையும் வற்புறுத்தி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் மோகன் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் எங்களுடைய சட்டமன்றப் பேரவைத் தலைவர் மற்றும் மதுரையிலே இருக்கின்ற எங்களுடைய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் ஹக்கீம் உட்பட, உறுப்பினர் அவர்கள் பக்கத்திலே இருக்கின்ற அவரும் இதற்காக என்னிடம்

பலமுறை வலியுறுத்தியிருக்கிறார்கள். கடிதம் மூலமாகவும் தெரிவித்திருக்கிறார்கள். இப்பொழுது அவருடைய கோரிக்கையை ஏற்றுத்தான் தமிழகத்தினுடைய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு துரிதமான நடவடிக்கைகளை எடுத்து நிலம் கையகப்படுத்தப்படுகின்ற வேலையை விரைவாகச் செய்து வருகிறது. அதனுடைய முதல் கட்டப் பணியாக அயன்பாப்பாக்குடி கிராமத்திலே 4.98.5 எக்டேர் நிலத்தினை அரசு ரூ.1,04,69,297க்கு நில நிர்ணயம் கொடுத்து இன்றைக்கு அந்த நிலத்தினை எடுத்திருக்கிறது. எடுத்து விமான நிலைய கட்டுப்பாட்டுக் குழுமத்திடம் அந்த நிலம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. ஆக, மீதமுள்ள நிலங்கள் பெருங்குடி கிராமத்திலே, 4.26 எக்டேர் நிலம், அதேபோல பெருங்குடி பகுதி 2, பெருங்குடி பகுதி 3, பெருங்குடி பகுதி 4, பெருங்குடி பகுதி 5, பெருங்குடி பகுதி 6, பெருங்குடி பகுதி 7 இந்த 7 நில எடுப்புப் பிரேரணைகளும் இப்பொழுது தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதில், ஒரு சென்ட் நிலத்திற்கு ரூ.2,931 என அரசு விலை நிர்ணயம் செய்து, அதற்குரிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. நில மதிப்பீடு, அதுசம்பந்தமாக இந்த மாதத்திலேயே 16, 18, 19, 21 ஆகிய தேதிகளில் விசாரணை நடைபெற உள்ளது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அந்த விசார்ணை அறிக்கைகள் எல்லாம் பெறப்பட்டவுடன் தொடர்ந்து இந்த நில எடுப்புப் பணி முடிவடைந்ததற்குப் பின்பு அந்த விமான நிலைய விரிவாக்கப் பணிகளை விரைவாகச் செய்ய வேண்டுமென்று மாநில அரசு மைய அரசைத் தொடர்ந்து வலியுறுத்திவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வளர்மதி ஜெபராஜ்.

திருமதி வளர்மதி ஜெபராஜ்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, மதுரை விமான நிலையத்தை பன்னாட்டு விமான நிலையமாக மேம்படுத்துவதற்காக நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதிதீவிர முயற்சி செய்து

கொண்டு வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பு மதுரையிலே இருக்கக்கூடிய வர்த்தகர்களுக்கும் தென் மாவட்ட மக்களுக்கும் மகிழ்ச்சியைத் தரக்கூடிய செய்தி. இப்பொழுது நான் சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயிருந்து அறிய விரும்புவது, நம்முடைய அரசின் சார்பாகக் கையகப்படுத்தப்பட எண்ணிய இடத்தினுடைய மொத்த மதிப்பையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கடந்த ஒரு வருட காலமாகவே நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகின்றது. பணிகள் துரிதமாக, அதாவது அந்த இடத்தைக் கையகப்படுத்துவதற்கு அரசு என்ன முயற்சி செய்துகொண்டிருக்கிறது? இன்னும் எவ்வளவு காலத்திற்குள் கையகப்படுத்தப்பட வேண்டிய இடங்கள் கையகப்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விரிவாகச் சொல்லியிருக்கிறேன். 8 பகுதிகளாக இந்த நிலம் கையகப்படுத்துகின்ற பணி நடைபெற்று வருகிறது. அந்த 8 பகுதிகளில் ஒரு பகுதி, அயன்பாப்பாகுடி கிராமத்தைச் சேர்ந்த அந்தப் பகுதி நில எடுப்புப் பணி முடிவடைந்து இப்போது விமான நிலைய கட்டுப்பாட்டு குழுமத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. மீதி 7 பகுதிகளுக்கான நடவடிக்கைகளும் இப்போது தொடர்ந்து விரைவாக நடைபெற்று வருகின்றன. அதைத்தான் சொன்னேன். இப்போது ஆரம்பித்துள்ள ஏப்ரல் மாதத்திலேயே 16 ஆம் தேதி, 18 ஆம் தேதி, 19 ஆம் தேதி மற்றும் 21 ஆம் தேதி ஆகிய தேதிகளில் அதைப்பற்றிய விசாரணையெல்லாம் நடைபெறவிருக்கிறது என்பதை ஏற்கெனவே தெரிவித்திருக்கின்றேன். ஆகவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதில் தொடர்ந்து விரைவான நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 167, திரு. ந. கணபதி, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

167—

கல் மெருகூட்டும் தொழிற்சாலை

•18823—திரு. ந. கணபதி:

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதி, குன்னம் கிராமத்தில் மிகவும் தரமான சிறந்த கருப்புக் கல் அதிகமாகக் கிடைப்பதால் அங்கு கல் மெருகூட்டும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) கருப்புக் கல் மெருகூட்டும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தமிழ்நாடு கனிம நிறுவனத்திடம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ந. கணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய வானூர் தொகுதியில் உலகிலேயே மிகச் சிறந்த தரமான கருப்புக் கல் குன்னம் கிராமத்திலேதான் கிடைக்கிறது. இக்கிராமத்தில் மட்டுமல்லாமல், அருகிலிருக்கின்ற பெரும்பாக்கம், கரசானூர், பரங்கனி, எறையூர், பாகுடி போன்ற கிராமங்களில் மிகுதியாக கருப்புக் கல் கிடைக்கிறது. அரசு நிறுவனமான TAMIN மற்றும் சில தனியார் நிறுவனங்கள் அங்கு கிடைக்கும் கருப்புக் கற்களை கருப்பு வைரமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. எனவே அப்பகுதி வேலையில்லா இளைஞர்களுக்கும், அங்குள்ள கல்லுடைக்கும் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்கும் —தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் அப்பகுதியில் அதிகமாக உள்ளதால் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்—அப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மறுபரிசீலனை செய்து கல் மெருகூட்டும் தொழிற்சாலையை அடுத்த ஆண்டிலாவது அரசு அமைக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில் கருப்புக் கல் மெருகூட்டும் தொழிற்சாலை அமைக்க கீழ்க்கண்ட அடிப்படை வசதிகள் அமையப் பெற வேண்டும்:—

அமைக்க உத்தேசிக்கும் தொழிற்சாலையைச் சுற்றி, 50 அல்லது 60 கிலோமீட்டர் வரம்பிற்குள் தரமுள்ள ஏற்றுமதிக்கு உகந்த பல்வேறு வகையான கிரானைட் பாறைகள் அமையப் பெற்றிருக்க வேண்டும்; அப்பகுதியில் எப்போதும் அதிக அளவு தண்ணீர் கிடைக்கப்பெற வேண்டும்; சரியான போக்குவரத்து வசதி கொண்ட ரயில் நிலையத்தையும் தேசிய நெடுஞ்சாலையையும் இணைக்கின்ற வகையில் தொழிற்சாலை அமையப் பெற வேண்டும்; மேலும், ஒரு பகுதியில் கிரானைட் மெருகூட்டும் தொழிற்சாலை அமைப்பதற்குமுன் கிரானைட்டைச் சார்ந்த பொருள்களுக்கான சர்வதேசத் தேவையினை நன்கு ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். ஆகவே இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் தொழிற்சாலை அமைக்க முடியும். தற்சமயம் அந்தத் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 168, திரு. ஆர். சாமி, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

168—

துணை மின் நிலையம்

•19521—திரு. ஆர். சாமி:

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டியில் 110 மெகாவாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் பணி நடப்பாண்டில் துவக்கப்படுமா?

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[2003 ஏப்ரல் 3

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டியில் 110/11 கே.வி. மின் நிலையம் அமைப்பதற்கு நடப்பாண்டிலே பணிகள் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருண்டு கிடந்த தமிழகத்தை வெளிச்சப் பாதையில் கொண்டு வந்து, நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்தில் என்னுடைய தொகுதியான மேலூர் தொகுதியிலுள்ள கொட்டாம்பட்டிப் பகுதியில், மலைப் பகுதியைச் சார்ந்த கிராமங்கள் அதிகம் இருக்கின்ற காரணத்தினால், இதுவரை அந்தப் பகுதி மக்கள் இருட்டிலேயே இருந்துகொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பகுதியில் ஏழைக் கூலித் தொழிலாளர்கள் அதிகம் வாழ்ந்து வருகின்றார்கள். பகல் நேரங்களிலே வேலைக்குச் சென்றுவிட்டு, இரவு நேரங்களில் கடைகளுக்குச் சாமான் வாங்கப் போனால்கூட, அந்தப் பகுதியில் மின்சார வசதி இல்லாத காரணத்தினால், இரவில் அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஏழையெளிய மக்களுக்காக ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், 110 மெகாவாட் கொண்ட மின் நிலையத்தை இந்த ஆண்டிலே அமைச்சர் அவர்கள் முடித்துக்கொடுப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே முடித்துக்கொடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 169, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

169—

நியாயவிலைக் கடை

•4768—திரு. கு. அண்ணாமலை:

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2003 ஏப்ரல் 3]

கீழப்பாவூர் ஒன்றியம், செட்டியூரில் புதிதாக நியாயவிலைக் கடை எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

செட்டியூர் கிராமத்தில் நியாயவிலைக் கடை திறப்பது அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கடை இந்த ஆண்டே திறக்கப்படுமா என்பதை நான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செட்டியூரைப் பொறுத்தமட்டில் திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்தில், செட்டியூர் கிராமத்தில் 204 கார்டுகள் உள்ளன. இவற்றை பக்கத்திலே இருக்கின்ற கடையோடு இணைத்து இப்போது பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க செட்டியூரில் ஒரு முழு நேரக் கடை அமைக்க பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த அட்டைகளையெல்லாம் ஒருங்கிணைத்து செட்டியூர், கீழவிளையூர், வேல்மயில்நாடார்பட்டி, பனையடிப்பட்டி ஆகிய கிராமங்களை இணைத்து இங்கே முழு நேரக் கடை ஒன்றை அமைக்க ஆலோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 170, டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

170—

குடிநீர் வசதி

•3975—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, கொள்ளக்காட்டுப்பட்டி, வேலூர் மற்றும் மேலசின்னப்பழனிப்பட்டிக்கு குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியிலுள்ள கொள்ளக்காட்டுப்பட்டி, வேலூர் மற்றும் மேலசின்னப்பழனிப்பட்டி கிராமங்களில் தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவு நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு முறையே 15 லிட்டர், 50 லிட்டர் மற்றும் 50 லிட்டர் ஆகும். வேலூர் குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் புதிய மின்னிறைப்பான்கள் அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பகுதி அளவு குடிநீர் வசதி பெறும் மற்ற இரண்டு குடியிருப்புகளுக்கு தகுதி, தேவை மற்றும் நிதி ஆதார வசதியினைக் கருத்திற்கொண்டு ஊரகக் குடிநீர்த் திட்ட கோட்பாடுகளின்படி வரும் நிதியாண்டுகளில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் அடிப்படைத் தேவைகளில் தொடர்ந்து தனிக் கவனம் செலுத்தி, போர்க்கால அடிப்படையில் குடிநீர் வழங்கி வரும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைக் காணிக்கையாக்குகின்றேன். குளத்தூர் தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், கொள்ளக்காட்டுப்பட்டியில் ஒரேயொரு அடி பம்ப்தான் உள்ளது. அந்தப் பகுதியில் 500-க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எனவே கொள்ளக்காட்டுப்பட்டியில் ஒரு சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

வேலூர் கிராமத்திலே சுமார் 1000-க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கிராமத்திலே ஏற்கெனவே ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியானது அமைக்கப்பட்டு, அந்த ஆழ்குழாய்க் கிணற்றில் போதிய தண்ணீர் வசதி இல்லாமல் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. எனவே வேலூர் கிராமத்திற்கும் மாற்று ஆழ் குழாய்க் கிணறு ஒன்று அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் ஊரகப் பகுதியின் மக்கள்தொகை, 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1,180 ஆகும். வேலூரில் தற்சமயம் 7 கையிறைப்பான்கள் பயனில் உள்ளன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக 2001-2002 ஆம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்ட, 60,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின் விசைத் திட்டமும், டிசம்பர் 2002-ல் முடிக்கப்பட்டு பயனில் உள்ளது. இவை மூலமாக தற்போது நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 50 லிட்டர் வீதம் தினமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. போதுமான அளவு தண்ணீர் கிடைத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, கொள்ளக்காட்டுப்பட்டியின் தற்போதைய மக்கள்தொகை, 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 200 ஆகும். கொள்ளக்காட்டுப்பட்டியில் 2 கையிறைப்பான்கள் பயனில் உள்ளன. இவை மூலம் தற்போது தினம் நபர் ஒன்றுக்கு 15 லிட்டர் வீதம்தான் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. இது மிகவும் குறைவு. அந்த அடிப்படையிலே, வரும் நிதியாண்டிலே 2003-2004 ஆம் ஆண்டில், முன்னுரிமை அடிப்படையில் மின் விசைத் திட்டம் மூலமாக தண்ணீர் தருவதற்கு செயல் நடவடிக்கை எடுக்கப்படும். முழுமையாக தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி.

டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 171, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

171—

மருத்துவர் நியமனம்

•32721—திருமதி மல்லிகா சின்னசாமி:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, கோட்டாத்தூரிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு நிரந்தரமாக ஒரு மருத்துவரை நியமனம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 ஆண்டுகளாக சுல்தான்பேட்டை ஒன்றியக் கழகச் செயலாளராகத் தொடர்ந்து பணியாற்றும் நல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்து, பொங்கலூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற வினாக்களுக்கு விடையளிக்கின்ற வகையில், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் என்ற பொறுப்பையும் ஏற்படுத்திக் கொடுத்த அன்புள்ளம் கொண்ட அம்மா அவர்களை, தாயுள்ளம் கொண்ட தாயை, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, அவர்களுடைய பொற்பாதங்களில் எங்கள் குடும்பத்தின் சார்பாகவும், எங்கள் தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, மாண்புமிகு அம்மா அவர்களை மீண்டும் வணங்கி, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வினாவிற்கான விடையை அளிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையளிக்க அனுமதி வேண்டுகிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கோட்டாத்தூரில் ஒரு கால்நடை பார்வைக் கிளை நிலையம் செயல்பட்டு வருகின்றது. இக்கால்நடை பார்வைக் கிளை

நிலையத்தின் பணிகள், கரட்டாம்பட்டி கால்நடைக் கிளை நிலைய கால்நடை ஆய்வாளரால் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் கவனிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் அன்புடன் தெரிவித்துக்கொள்வதோடு, மீண்டும் அங்கே நிரந்தரமாக ஒரு கால்நடை ஆய்வாளரை, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, நியமனம் செய்ய ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடும், மகிழ்ச்சியோடும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி மல்லிகா சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் ஆயிரம் சோதனைகள் வந்தாலும், அவற்றை எதிர்த்து நிற்கும் அஞ்சாமை, ஏழையெளிய மக்களுக்கு காலமறிந்து உதவுகின்ற கருணை உள்ளம் கொண்ட எங்கள் அன்னையே, திருச்சி மாவட்டத்திற்கு மெருகூட்டும் வண்ணம் நலத் திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்திய எங்கள் அம்மாவே, தங்களை வணங்குகிறேன்.

எனது தொகுதியைச் சேர்ந்த ஒரு ஏழை ஊனமுற்ற சகோதரிக்கு பணி நியமன ஆணை வழங்கி, அவர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்தமைக்கும், முசிறி தொகுதிக்கு மகளிர் காவல் நிலையம் அமைத்துத் தந்தமைக்கும் இந்த மாமன்றத்தின் வாயிலாக, தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினை தங்கள் பாத மலர்களில் சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவுப்படி கோட்டாத்தூர் கால்நடை மருத்துவமனைக்கு நிரந்தர கால்நடை ஆய்வாளரை பணியமர்த்த இருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *10-50*

முசிறி பேரூராட்சியிலுள்ள கால்நடை மருந்தகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகிறது. அதை அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கச் செய்ய அரசு முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 3

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசின் நிதி நெருக்கடி காரணமாக, புதிய கால்நடை மருந்தகக் கட்டடங்கள் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற முசிறியில் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்ட, அவர்களின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதி அளிக்க முன்வந்தால், இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, அங்கே கால்நடை மருந்தகக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 172, செல்வி க. பாலபாரதி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

172—

வாசனைத் திரவியத் தொழிற்சாலை

***15846—செல்வி க. பாலபாரதி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டத்தில் பூக்கள் அதிகம் விளைவதால் அங்கு வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி அருகிலுள்ள சம்மந்திக்குப்பம் கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை அளித்து, சிறுபான்மையினர் அதிகம் வாழும் வாணியம்பாடி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக்கி, அம்மாவின் பொற்கால ஆட்சியில் ஊரகத் தொழில் துறை அமைச்சர் பொறுப்பையும் தந்து, இந்த மாமன்றத்தில் உரையாற்றப் பணித்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு பல கோடி நன்றியினைக் காணிக்கையாக்கி எனது பதிலினை அளிக்கிறேன்.

2003 ஏப்ரல் 3]

திண்டுக்கல் மாவட்டத்தில் வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

செல்வி க. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், பூக்களின் மாவட்டம் என்று சொல்லலாம். திண்டுக்கல் தொகுதியில் ஏ. வெள்ளோடு, சிறுநாயக்கன்பட்டி, பித்தளைப்பட்டி, அனுமந்தராயன்கோட்டை, நிலக்கோட்டையில் சிலுக்குவார்பட்டி போன்ற பகுதிகளில் பூக்கள் அதிகமாக உற்பத்தியாகின்றன. இந்தப் பூக்களை ஒரு சில மணி நேரத்திற்குள் விற்பனை செய்யாவிட்டால் அந்தப் பூக்கள் வீணாகிவிடுகின்றன. ஆகவே இப்பொழுது இருக்கக்கூடிய அழகுசாதனப் பொருட்களிலிருந்து, பல்வேறு நுகர்வுப் பொருட்கள், இந்த வாசனைத் திரவியத்தை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்படுகின்றன. நாம் பூக்களை ஏற்றுமதி செய்து, வாசனைத் திரவியத்தை இறக்குமதி செய்துகொண்டிருக்கிறோம். ஆகவேதான் திண்டுக்கல் மாவட்டத்தில் இந்தப் பூக்களைக் கொண்டு வாசனைத் திரவியத் தொழிற்சாலையை அமைக்க, எதிர்காலத்தில் ஒரு கருத்துருவை உருவாக்கி செயல்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா? இதற்கு சுய நிதி குழுக்களுக்கான இடம், கடன் உதவி வழங்கி பெண்களையே இத்தொழிலில் ஈடுபடுத்த அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு வட்டாரப் பகுதியிலும் குறைந்தபட்சம் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் வேளாண் சார் தொழிற்சாலைகளைத் தொடங்க ஆர்வம் உள்ள தனியார் தொழில் முனைவோர்களின் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இந்தத் திட்டத்தின்கீழ் திண்டுக்கல் மாவட்டத்தில் 15 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அதில் ரூபாய் 150 இலட்சம் செலவில் ஆத்தூர் வட்டாரத்தில் வாசனைத் திரவியத் தொழிற்சாலையை அமைப்பதற்கான ஒரு விண்ணப்பம் தேர்வு செய்யப்பட்டு வங்கிக்கு பரிந்துரை செய்யப்பட்டு, விண்ணப்பம் வங்கியின் ஆய்வில் உள்ளது.

[2003 ஏப்ரல் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி பாலபாரதி.

செல்வி க. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோன்று திண்டுக்கல் தொகுதிக்குள்ளும், நிலக்கோட்டை பகுதியிலும், மதுரை, சோழவந்தான் பகுதியை உள்ளடக்கிய பகுதியிலும் ஒரு தொழிற்சாலையை உருவாக்க அரசு முன்வருமா எனக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்: திண்டுக்கல் மாவட்டத்தில் மொத்த வட்டாரங்கள் 14. பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்கள் 185. மாவட்ட அளவில் பரிசீலனை செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 90. மாவட்ட அளவில் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 70. தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 20. மாநில ஒருங்கிணைப்புக் குழுவிற்கு அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் 20. குழுவால் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 15. குழுவால் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 5. ஒருங்கிணைப்புக் குழுவால் மாவட்டத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டு திருப்பியனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் 15. வாசனைத் திரவியத் தொழிற்சாலை தொடங்குவதற்கான விண்ணப்பம், இந்த 15 விண்ணப்பங்களில் ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி பாலபாரதி, திண்டுக்கல்லோடு நில்லுங்கள். சோழவந்தானுக்குத் தனிக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 173, திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்.

173—

T.A.P. திட்டம்

***18974—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2003 ஏப்ரல் 3]

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், வங்கனூர் கிராமத்தில் வனத் துறைமூலம் நிறைவேற்றப்படுகிற T.A.P. திட்டம் இவ்வாண்டு தொடங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2002-2003-ல் வங்கனூர் கிராமத்தில் காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம், கிராம நலப் பணிகளும், வங்கனூர் காப்புக் காட்டில் 100 எக்டேரில் மரம் வளர்ப்புப் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. வரும் ஆண்டிலும், அதாவது 2003-2004 ஆம் ஆண்டிலும் வங்கனூர் காப்புக் காட்டில் காடு வளர்ப்புத் திட்டத்தின்மூலம் மரம் வளர்ப்புப் பணிகள் நிறைவேற்றப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகக் கூற விரும்புகிறேன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறைமூலம் செயல்படுத்தப்படுகிற T.A.P. திட்டத்தின்மூலம் காப்புக் காட்டில் தடுப்பணைகள், கழிவுநீர்க் குட்டைகள் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுமா எனவும், மேலும் இந்த வனப் பகுதியைச் சுற்றியுள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிற அடித்தளத்து மக்களுக்கு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் மானியத்துடன் கூடிய கடன் வசதி செய்து கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கசிவுநீர்க் குட்டை, அந்த மக்களுக்குத் தேவையான குடிநீர் வசதி, ஏழை மக்கள் பயன்பெறுவதற்கு கறவை மாடு வாங்க கடன், பெட்டிக் கடை வைக்கக் கடன், தையல் இயந்திரம், சலவைப் பெட்டி வாங்க கடன் போன்றவை காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 174, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

174—

தமிழ்த் திரைப்படங்கள்

***11100—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் தமிழ்த் திரைப்படங்கள் திரையிடாத திரையரங்குகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை நகரிலுள்ள அனைத்துத் திரையரங்குகளிலும் தமிழ்ப் படங்கள் முறையாகத் திரையிடப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு திரையரங்குகள் விதிகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் எங்கும் தமிழ் பரவிட, அறிவியல் தமிழை அறிவித்து, தமிழுக்குப் பெருமை சேர்த்து தமிழன்னையாக வீற்றிருக்கின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி, வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறினார். சென்னை மாநகரில் எங்கு பார்த்தாலும் ஆங்கிலப் படங்களும், வடமொழிப் படங்களும்தான் ஆண்டு முழுவதும் அதிகமாக ஓடிக்கொண்டிருக்கின்ற நிலையை மாற்றிட, ஏற்கெனவே நடைமுறையில் இருந்த, கட்டாயம் திரையரங்குகளில் வருடத்திற்கு 12 வாரங்கள் தவறாமல் தமிழ்ப் படங்களைத் திரையிட வேண்டும் என்ற உத்தரவை மீண்டும் வலியுறுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்ா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு திரையரங்குகள் ஒழுங்குமுறைச் சட்டம் 1955, 'சி' படிவ உரிமை நிபந்தனை 7(ஏ)-ன் அடிப்படையில், ஓர் ஆண்டில் 12 வாரங்களுக்குக் குறையாமல், தமிழ்த் திரைப்படங்கள் திரையிடப்பட வேண்டும் என்ற விதிமுறைகளை மீறும் திரையரங்கின்மீது, உரிமம் வழங்கும் அலுவலரால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட விதியை எதிர்த்து, சென்னையிலுள்ள மெலோடி திரையரங்கம் மற்றும் மதுரையில் உள்ள மாணிக்க விநாயகர் மற்றும் மாப்பிள்ளை விநாயகர் திரையரங்க உரிமையாளர்கள், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்து, 9-3-2001 நாளிட்ட உயர் நீதிமன்றத் தீர்ப்பில் அவர்களுடைய வழக்கினைத் தள்ளுபடி செய்து ஆணையிடப்பட்டது. உயர் நீதிமன்றத் தீர்ப்பினை எதிர்த்து இத்திரையரங்க உரிமையாளர்கள் புதுடெல்லியிலுள்ள உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளனர். அவ்வழக்கிற்குத் தேவையான எதிர் வாதுரை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு புதுடெல்லியிலுள்ள தமிழ்நாடு வழக்கறிஞருக்கு அனுப்பப்பட்டு அரசு சார்பாக வாதிடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரின் பதில் முடிகிற வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

முற்பகல் 11-00

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்: உச்ச நீதிமன்றத்தில் மேற்குறித்த வழக்குகள் தற்போது நிலுவையில் உள்ளன. உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல சென்னை மாநகரத்தில் தமிழ்ப்படங்கள் ஓடாத திரையரங்குகள்மீது புகார்கள் வருமேயானால், நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(<u>குறிப்பு</u>: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

[2003 ஏப்ரல் 3

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானம் இன்றும், நாளையும் இல்லை. (குறுக்கீடு) பெரிய மானியக் கோரிக்கைகள். அதனால் இன்றும் நாளையும் ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படவில்லை. நாளைய மறுநாள் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. துரைமுருகன்: முக்கியமான பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முக்கியமான பிரச்சினை சரி, எல்லாமே முக்கியமான பிரச்சினைதான். இன்றும் நாளையும் மானியக் கோரிக்கைகள் பெரியதாக இருக்கிற காரணத்தால் நேரத்தினுடைய அவசியம் கருதி எடுத்துக்கொள்ளப்படவில்லை. நாளை மறுநாள் எடுத்துக்கொள்ளப்படும். திரு. ஞானசேகரன் அவர்கள். (குறுக்கீடு)

* **திரு. துரைமுருகன்:** நேரத்தின் அவசியம் கருதி நாளை மறுநாள் எடுத்துக்கொள்ளலாம், அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆனால் ஏற்கெனவே மூன்று நாட்களாகக் கடைகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு அவர்களுடைய தலைவர், வியாபாரிகள் சங்கத்தினுடைய தலைவர் வெள்ளையன் கைது செய்யப்பட்டிருக்கிறார். மீண்டும் வியாபாரிகள் மத்தியிலே ஒரு பெரும் பிரச்சினை, கொந்தளிப்பு உண்டாகி, சட்டம்—ஒழுங்குக்குப் பாதகம் வந்துவிடுமோ என்கிற காரணத்தால்தான் இன்றைக்கே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2003 ஏப்ரல் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, இன்றைக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இல்லை.

4. கவன ஈர்ப்பு

மாயனூர் சிமெண்ட் பைப் தொழிற்சாலைக் குழாய்களை குடிநீர் வடிகால் வாரியம் வாங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு.

திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுத் துறையில் நிறுவப்பட்ட கரூர் மாவட்டத்தில் உள்ள மாயனூர் சிமெண்ட் பைப் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் I.S.I. முத்திரை உள்ள தரமான குழாய்களை குடிநீர் வடிகால் வாரியம் வாங்க வேண்டிய அவசியம்" குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்பான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தீர்மான எண் 3, 4 நாள் 27-10-1998—ன்படி 1-4-1999 முதல் குடிநீர் வடிகால் வாரிய பணிகள் அனைத்தையும் ஒட்டுமொத்த ஒப்பந்த முறையில் குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தி வருகிறது. இந்த முறையில் ஒப்பந்தக்காரரே பணிகளுக்குத் தேவையான தளவாடப் பொருட்களையும் கொள்முதல் செய்து பணிகளை குறித்த காலத்திற்குள் முடிக்க வேண்டும். பணி முடிந்த பின் குறிப்பிட்ட காலம் வரை திட்டத்தைப் பராமரிக்கவும் வேண்டும். எனவே குடிநீர்த் திட்டம் செயல்படுத்துதல் மற்றும்

குறிப்பிட்ட காலம் வரை பராமரித்தல் ஆகிய முழுப் பொறுப்பும் ஒட்டுமொத்த ஒப்பந்தப்புள்ளி முறையில் ஒப்பந்தக்காரரையே சேர்ந்தது. எனவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 1-4-1999 முதல் திட்டத்திற்குத் தேவையான எந்தப் பொருட்களையும் கொள்முதல் செய்வதில்லை.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவா அறிக்கையைப் படித்தேன். அதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரசுத் துறையிலே 1984 ஆம் ஆண்டு இந்த அரசு நிறுவிய, கரூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய மாயனூர் சிமெண்ட் பைப் தொழிற்சாலை மூலமாகத் தயாரிக்கப்பட்ட பைப்புகளை எல்லாம் குடிநீர் வடிகால் வாரியம் முன்பு வாங்கிக்கொண்டிருந்தன. அப்போதெல்லாம் நல்ல லாபத்தில் அந்தத் தொழிற்சாலை இயங்கிக்கொண்டிருந்தது. அந்த மாயனூர் சிமெண்ட் பைப் தொழிற்சாலை ஏற்கெனவே TANCEM சிமெண்ட் தொழிற்சாலையினுடைய sister concern ஆக இருந்துகொண்டிருக்கிற காரணத்தால், வரவு செலவுக் கணக்குகள் எல்லாம் அந்த, TANCEM-சிமெண்ட் கம்பெனி வரவு செலவுத் திட்டக் கணக்கோடு, இதனுடைய கணக்குளையும் சேர்த்து தொடர்ந்து நிலுவையில் இருந்துகொண்டிருந்தன. 1998 ஆம் ஆண்டு முந்தைய ஆட்சிக் காலத்தில் ஓர் அரசாணை 75 பிறப்பிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், விளக்கம் சொல்லக் கூடாது. கேள்விதான் கேட்க வேண்டும்.

திரு. சி. ஞானசேகரன்: கேள்விதான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அறிக்கையை வைத்துக்கொண்டு படிக்கக்கூடாது.

திரு. சி. ஞானசேகரன்: கேள்விதான் கேட்கிறேன். இதிலே 75 என்ற G.O.-வைப் போட்டதனாலே, அந்த G.O.-வைப் போட்டு Turn Key System கொண்டு வந்து, அரசுத் துறையிலே நிறுவப்பட்ட நிறுவனம் தயாரிக்கும் இந்த பைப்புகளைக்கூட வாங்காமல் வெளியிலே அந்த கான்ட்டிராக்டர்கள், குடிநீர் வடிகால் வாரியம் எல்லாம் தனியாரிடம் வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லி

அரசாணை 75 கொண்டு வந்ததால்தான், இந்த அரசுத் தொழிற்சாலை மூடப்பட்டு ஓர் ஆண்டுக்கு 3 கோடி ரூபாய் அளவிற்கு 222 தொழிலாளர்களுக்கு இப்போது தண்டச் சம்பளம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். வேலையில்லாமல் சம்பளம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே போட்ட அரசு G.O.-வை cancel பண்ணிவிட்டார்கள். G.O. 75-ஐக் cancel பண்ணிவிட்டதனாலே இப்போது மீண்டும் retrospective effect கொடுத்து...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை நீங்கள் கேட்கிறீர்களா? அல்லது நான் கேட்கவா? (சிரிப்பு)

திரு. சி. ஞானசேகரன்: நானே கேட்கிறேன். அதனாலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் மீண்டும் இந்தக் குடிநீர் வடிகால் வாரியம், I.S.I. முத்திரை பதித்த தரமான பைப்புகளைத் தயாரிக்கிற மாயனூர் தொழிற்சாலை பைப்புகளை வாங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதோடு, மீண்டும் அந்த ஆலைக்கு ஒரு புனர்வாழ்வு கொடுத்து 222 தொழிலாளர்களுக்கு 3 கோடி ரூபாய் தண்டச் சம்பளம் கொடுத்துக்கொண்டிருப்பதை பயனுள்ள முறையில் பெறுவதற்கு ஆவன செய்யுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Turn-key System என்பது கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கொண்டுவந்த அரசு ஆணை 75. அந்த அரசு ஆணை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும், மறுபரிசீலனை செய்யப்படும். சிமெண்ட் தொழிற்சாலை முதலாளிக்காக குழாய்கள் தயார் பண்ணும் திட்டமா அல்லது குழாய்க் கிணறுகளுக்காக அந்தத் தொழிற்சாலையா என்ற அடிப்படையில் அங்கே ஒரு முதலாளிக்காக - சிமெண்ட் தொழிற்சாலை முதலாளிக்காக இந்த Turn-key System என்ற அரசாணை 75-ஐக் கொண்டு வந்திருக்கிறார்கள். நிச்சயமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

[2003 ஏப்ரல் 3

முற்பகல் 11-05

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய இந்தச் சாதகமான பதிலுக்கு நன்றி. இதிலே நம்முடைய தொழில் துறைச் செயலாளர், இதற்காகப் பெரும்பாடுபட்டுக் கொண்டு, எப்படியோ வாதிட்டு, எப்படியெல்லாம் ஒரு வழக்கறிஞர் வாதாட வேண்டுமோ அப்படியெல்லாம் வாதாடிக் கொண்டிருக்கிறார். ஆனால் நம்முடைய குடிநீர் வடிகால் துறையினுடைய செயலாளர் அவர்கள்தான் இன்னும் அந்த Turn-key system-ல் இருந்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது பதில் தந்திருக்கிற காரணத்தினாலே, மீண்டும் இந்த 222 தொழிலாளிகளுக்கு வேலைவாய்ப்பு மட்டுமல்ல, I.S.I. முத்திரை பதித்த தரமான ஓர் அரசு நிறுவனத்தினுடைய பைப்புகள் வாங்கப்படுவதற்கு கூடியவிரைவில், இந்த ஆண்டே அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதுபோல், தற்சமயம் ஒப்பந்தக்காரர்கள் முழுமையாக தளவாடச் சாமான்களை வாங்கி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய பைப்புகளைப் பதித்து, ஓராண்டு காலத்திற்கு அவர்கள் முழுமையாக அதைப் பராமரிக்க வேண்டும் என்ற கட்டாயம் ஏற்படுத்தப்பட்டு செயல்படுத்திக்கொண்டிருக்கிறது. எனவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்ட விவரங்களும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.

2003 ஏப்ரல் 3]

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. என். நன்மாறன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2001-2003* ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் *89* முதல் *91* வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அறிவிப்புகள்

(அ) மானியக் கோரிக்கைகள், 2003-2004, அவையில் முன்மொழிதல் குறித்து (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2003-2004* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of clause (3) of Article 203 of the Constitution of India, I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for grants for the Financial Year 2003-2004."

7. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்

கோரிக்கை எண் 18—மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2003-2004* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் *18*, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை குறித்த மானியக் கோரிக்கையை மீண்டும் இப்பேரவையில் அளிக்க எனக்கு வாய்ப்பளித்த இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கை எண் 18-ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.35,27,01,000/- ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 109, திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன்மொழிகிறேன் என்றுதான் சொல்ல வேண்டும். திரு. ஐ. கணேசன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 814, டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1498, திரு. கி. பாரிமோகன்.

***திரு. கி. பாரிமோகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2015, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

***திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2336, திரு. ஆர். கிருஷ்ணன்.

திரு. ஆர். கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2445, திரு. க. முருகவேல் ராஜன்.

திரு. க. முருகவேல் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2793, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3638, திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3715, திரு. அ.இரா. மலையப்பசாமி.

திரு. அ.இரா. மலையப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 250, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 538, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை. கோபித்துக்கொண்டு போய்விட்டார்களா?

வெட்டுத் தீர்மானம் எண் 1130, திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3496, திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3818, திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2169, திரு. சு. சிவராஜ்.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2548, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4169, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3051, திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3861, திரு. ஏ.எஸ். கண்ணன்.

***திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4122, திரு. ஜெக. வீரபாண்டியன்.

திரு. ஜெக. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 661, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 936, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1015, திரு. சோ. இராசேந்திரன்.

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், திருவேங்கடம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. சோ. இராசேந்திரன்] [2003 ஏப்ரல் 3

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1357, திரு. கே.வி. முரளிதரன்.

திரு. கே.வி. முரளிதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தளி தொகுதி, அஞ்செட்டியில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1445, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1841, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1885, திரு. மே.ப. காமராஜ்.

திரு. மே.ப. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பாப்பம்பாடி ஊராட்சியில் 10,000-க்கு மேற்பட்ட மக்கள் வசிப்பதால் பாப்பம்பாடி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1971, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3204, திருமதி காசாம்பு பூமாலை.

2003 ஏப்ரல் 3]

திருமதி காசாம்பு பூமாலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சங்கராபுரம் தொகுதியில் உள்ள மூங்கில்துறைப்பட்டு நகருக்குப் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3307, திரு. கோ. இரவிராஜ்.

திரு கோ. இரவிராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், மாதவரம் நகராட்சி, இலட்சுமிபுரம் பகுதியில் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது போல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3783, திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 786, திரு. தி. வேல் முருகன்.

திரு. தி. வேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களிலும் பொது சுகாதார நிலையம் அமைப்பதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1275, திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வால்பாறை சட்டமன்றத் தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி அரசு மருத்துவமனையை உடனடியாக விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3534, திரு. மு.பெ. சாமிநாதன்.

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஈரோடு மாவட்டம், முத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் காச நோய் சிகிச்சைப் பிரிவு தொடங்க வேண்டியது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1970, திரு. அ. அசோகன்.

திரு. அ. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரியில் நெடுஞ்சாலைத் துறைப் பகுதியில் அவசர விபத்துப் பகுதி மருத்துவமனை தொடங்கப்படுவது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2722, திரு. க. பாரமலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1692, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3802, திரு. டி.கே. ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 356, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்ட மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக விரிவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1211, செல்வி க. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2014, திரு. கு. ஜெயக்குமார்.

திரு. கு. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாமக்கல் மாவட்டத்தில் உள்ள சில ஆரம்ப சுகாதார நிலையங்களை முழுநேர மருத்துவமனைகளாக மாற்ற வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3172, திரு. அன்பில் பெரியசாமி.

திரு. அன்பில் பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்கள் மிக அவசர சிகிச்சை பெற வேண்டிய அவசியம் கருதி ஆரம்ப சுகாதார மையங்கள் இரவு, பகல் செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 320, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகள் வாங்கிப் பொருத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1787, திருமதி எஸ். மகேஸ்வரி.

***திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவை, அரசு மருத்துவமனையில் இருதய மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை ஆகியவற்றை செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3079, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாம்பரம் தொகுதி, தாம்பரம் சானடோரியம் தொழுநோய் மருத்துவமனையில், அறுவை அரங்கிற்கு குளிர்பதன இயந்திரம், மின் தூக்கி (Lift) ஆகியவை அமைக்கவும், ஆட்கொல்லி நோயான எய்ட்ஸ் நோயாளிகளின் உறவினர்கள் தங்குவதற்கும் வசதி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1010, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சென்னை, பூங்காநகர் தொகுதியில் உள்ள அரசினர் பொது மருத்துவமனையில் Reverse Osmosis Plant மூலம் நோயாளிகளுக்கு சுத்தமான குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 157, திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம், கோத்தகிரி அரசினர் மருத்துவமனைக் கட்டடங்கள் பழுதடைந்துள்ளதால் புதிய கட்டடங்கள்கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1187, திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு போதிய இடவசதி இல்லாததால் மாவட்ட மருத்துவமனை அந்தஸ்தைப் பெற பல அடுக்குமாடிக் கட்டடங்கள் படுக்கை வசதியுடன் கட்டித் தருவதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3101, திரு. இரா. திருமாவளவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3476, திரு. ஆ. ராஜகோபால்.

*** திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிவகாசி அரசு மருத்துவமனையில் காலியாகவுள்ள பணியிடங்களை உடன் நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3116, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'குறிஞ்சிப்பாடியில் உள்ள வட்டம் சாரா மருத்துவமனைக்குக் கூடுதலாகக் கட்டடம் கட்ட வேண்டியது குறித்தும், மருத்துவர்கள், செவிலியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும்', விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2943, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி, சுப்பிரமணியபுரம் அரசு மருத்துவமனைக்கு ஓட்டுநருடன் கூடிய ஆம்புலன்ஸ் வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1345,01,88,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.35,27,01,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு முன்னதாகவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப்

@ 127 முதல் 181 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளன.

பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன். இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளையும் ஆலோசனைகளையும் தெரிவித்த பிறகு என்னுடைய பதிலுரையில் அதற்கான விளக்கங்களையும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவிக்கச் சொல்லியிருக்கின்ற புதிய அறிவிப்புகளையும் வெளியிட இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மீ.அ. வைதியலிங்கம்.

முற்பகல் 11-15

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 18, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியத்தின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளை எடுத்துவைக்க வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

என்று வள்ளுவர் குறிப்பிட்டிருக்கிறார். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது முதுமொழி. எனவே இது முக்கியத்துவம் வாய்ந்த, மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கிற துறை என்று சொன்னால், அது மிகையாகாது. இந்தத் துறைக்கு 1995-96 ஆம் ஆண்டில், ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 688.85 கோடி ரூபாய் என்கிற அளவிலே இருந்தது. 2001 ஆம் ஆண்டுவரை, நான்கரை ஆண்டுக் காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அது படிப்படியாக உயர்ந்து, 1311 கோடி ரூபாயாக ஒதுக்கப்பட்டது. நான்கரை ஆண்டுக் காலத்தில், ரூ.1311 கோடியாக உயர்த்தி ஒதுக்கப்பட்டது. ஆனால் இப்போது 2003-2004 ஆம் ஆண்டில் ஒதுக்கியிருப்பது, 1380.48 கோடி ரூபாய். ஆக, ஐந்தாண்டுக் காலத்தில், ஒதுக்கப்பட்ட வகையில், சற்றொப்ப இரண்டு பங்காக ஒதுக்கப்பட்டது. இரண்டாண்டுக் காலத்தில், மூன்றாவது நிதிநிலை அறிக்கை அளிக்கிற இந்த நேரத்தில், நீங்கள் அதிகமாக உயர்த்தி ஒதுக்கியிருக்கிற தொகை, ரூ.69.50 கோடி என்பது மிகக் குறைவானதுதான் என்பது, இந்த நேரத்திலே குறிப்பிடத்தக்கது.

நிதிநிலை அறிக்கை, பக்கம் 53-ல், கோரிக்கை எண் 18-ல், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வைதியலிங்கம், அமைச்சர் ஏதோ பதில் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறைக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில், ஏதோ அதிகம் நிதியை ஒதுக்கியது போலவும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அந்த நிதி கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் போலவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. வைதியலிங்கம் அவர்கள் இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டிருக்கிறார். நான் ஒன்றை அவருக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் ஆட்சிப் பொறுப்பிலேயிருந்து இறங்குகிற அந்த ஆண்டு, மொத்த ஒதுக்கீட்டில் ஒதுக்கிய தொகை 5.10 விழுக்காடுதான். ஆனால் நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, அந்தத் தொகை சென்ற ஆண்டு 5.18 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. இந்த ஆண்டு 5.51 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது. எனவே இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில், ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டு போகிறது என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திலே அ.தி.மு.க. ஆட்சியிலே குறைந்துகொண்டு போவதுபோல நான் சொன்னதாகச் சுட்டிக்காட்டினார்கள். அப்படி நான் சொல்லவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் என்னுடைய பேச்சைக் கவனிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அ.தி.மு.க. ஆட்சியிலே, அது முடிகிறபோது ஒதுக்கப்பட்டிருந்த தொகை 688.85 கோடி ரூபாய். திராவிட முன்னேற்றக் கழகம், நான்கரை ஆண்டுக் காலம் ஆட்சியை ஆண்டு இறங்குகிறபோது ஒதுக்கப்பட்ட தொகை 1311 கோடி ரூபாய். ஐந்தாண்டு காலத்திலே, உயர்த்தப்பட்ட தொகை, சற்றொப்ப இருமடங்காக உயர்த்தியிருக்கிறோம். ஆனால் இப்போது நீங்கள் இரண்டாண்டு காலத்திலே உயர்த்தியிருக்கிற தொகை — நான் குறைத்து என்று சொல்லவில்லை; உயர்த்தியிருக்கிற

தொகை ரூ. 69.50 கோடி ரூபாய்தான் என்பதை நான் சுட்டிக்காட்டினேன்.

நிதிநிலை அறிக்கை பக்கம் 53-ல், கோரிக்கை எண் 18-க்காக, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கு 1380.48 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆனால் கொள்கைக் குறிப்பு பக்கம் 5 மற்றும் 6-ல், கோரிக்கை எண் 18-க்கு 1380.29 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நான் இதைச் சுட்டிக்காட்டுவது- ஒரு மன்றத்திலே மானியக் கோரிக்கைகள் வருகிறபோது சிறு சிறு தவறுகள் என்று சொன்னால்கூட, அது நிதிநிலை அறிக்கைக்கும், கொள்கைக் குறிப்புக்கும், கொள்கை விளக்கத்திற்கும் மிகப் பெரிய வேறுபாடாக, பல இடங்களிலே வந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக இதை நான் எடுத்துக் கூறியிருக்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் மொத்தம் 1,411. அதிலே சொந்தக் கட்டடங்களிலே உள்ளவை 1,347; நிலுவையிலே உள்ளவை 26; தனியார் கட்டடங்கள் 38 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தச் சொந்தக் கட்டடங்கள் 1,347-ல், 1989-1990-லேயும், 1996-2001-லேயும் மொத்தம் 749 கட்டடங்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மட்டும் கட்டப்பட்டவை. சற்றொப்ப 60 சதவிகிதம், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில், எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்டவை என்பது இங்கே சுட்டிக்காட்டப்பட வேண்டியது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நான்கரை ஆண்டுகளில் 200 துணை சுகாதார நிலையங்கள் எடுத்துகொள்ளப்பட்டு, அதிலே 196 துணை சுகாதார நிலையங்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கட்டி முடிக்கப்பட்டன. புதிய சுகாதார நிலையங்கள் 18 ஆரம்பிக்கப்பட்டன. 24 மணிநேரம் இயங்குகிற ஆரம்ப சுகாதார நிலையங்களாக நிலை உயர்த்துவதற்கு 298 திட்டமிடப்பட்டு, 250 ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிலை உயர்த்தப்பட்டன என்பதும் பாராட்டத்தக்கதாகும்.

முற்பகல் 11-20

மருத்துவமனைகளைப் பொறுத்தவரையில் அ.தி.மு.க. ஆட்சியில் 1991-96 வரை 142 கட்டடங்கள் கட்டித் தரப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில், 4 ஆண்டுக்காலத்தில் 261 கட்டடங்கள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. நிதிநிலை அறிக்கை

2002-2003-ல் பககம் 24-ல் ரூ.8 கோடி செலவில் 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்டதாக நிலை உயர்த்தி எடுத்துக்கொள்ளப்பட உள்ளன என சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் 2003-2004-ல் பக்கம் 54-ல் 35 தொடக்க சுகாதார நிலையங்கள் நிலை உயர்த்த கருதப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இதுவரை 58 தொடக்க சுகாதார நிலையங்கள் நிலை உயர்த்துவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன எனவும் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கொள்கை விளக்கக் குறிப்பிலே 32 ஆம் பக்கத்தில் 58 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2002-2003-ல் மேம்பாடு செய்யும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன என உள்ளது. 2003-2004-ல் எத்தனை என்பது கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்படவில்லை. செயல்முறைத் திட்டப் புத்தகத்திலே பக்கம் 93-ல், 2002-2003-ல் 20 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ரூ.1030 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் அதிலே சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறது. இதிலே எது உண்மை? செயல்முறைத் திட்டப் புத்தகம், 42, 44 மற்றும் 82 ஆம் பக்கங்களில் 1411 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தாய்-சேய் மற்றும் குடும்ப நலப் பணிகள் செயல்படுத்தப்படுகிறது என உள்ளது. ஆனால் பக்கம் 97-ல், அதுவே 1409 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தாய்-சேய் மற்றும் குடும்ப நலப் பணிகள் வழங்கப்படுகிறது என உள்ளது. இந்த முரண்பாடு எப்படி வருகிறது?

அடுத்து, மருத்துவ சிகிச்சை நிதியை அளிக்கிறோம். இது அதி முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. ஏழையெளிய மக்கள், நடுத்தர மக்கள், அரசு எவ்வளவுதான் அரசினுடைய மருத்துவமனைகளிலே வசதி வாய்ப்புகள் செய்து இருந்தாலும், இப்போது அதை ஏழையெளிய, நடுத்தர மக்கள் அனுபவிக்க முடியவில்லை என்பதனை பலரும் அறிவார்கள். ஏனென்றால், ஆப்பரேஷன் தியேட்டர் காலியாக இல்லை அல்லது மயக்க மருந்து கொடுக்கிற மருத்துவர்கள் இல்லை, இப்படி வரிசையிலே இருக்கிறோம் என்று காலம் தாழ்த்துகிற காரணத்தால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியிலிருந்து ஏழையெளிய மக்களுக்கு நிதி ஒதுக்கி அவர்களுக்கு அளிக்கிறோம். இந்த நிதியை சட்டமன்ற உறுப்பினர்கள் சான்று வழங்கி, வேகமாகக் கொடுப்பதன் மூலமாக தி.மு.க. ஆட்சியிலே சற்றொப்ப 4774 பேருக்கு, ரூபாய் 25,000 வீதம், 8 கோடியே 16 இலட்சத்து, 36 ஆயிரம் ரூபாய்

வழங்கப்பட்டது. ஆனால் இந்த ஆட்சியில், 2 ஆண்டுக்காலத்திலே பல பேருக்கு, எனது தொகுதியிலே நான் பரிந்துரை செய்து அனுப்பியிருப்பதற்கு எனக்கு வந்திருக்கிற பதில் என்னவென்றால், இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் அவர்களுக்கு அது பரிந்துரை செய்யப்பட்டு அந்தக் கடித நகல் வருகிறதே தவிர, இதுவரையில் எனது தொகுதியில் நான் சிபாரிசு செய்த ஒருவருக்குக்கூட 2 ஆண்டுக்காலத்திலே தரப்படவில்லை. இதை காலதாமதப்படுத்தினால், இருதய அறுவை சிகிச்சை செய்து கொள்கிறவர்கள், அதேபோல சிறுநீரகக் கோளாறு ஏற்பட்டு, மாற்று அறுவை சிகிச்சை செய்துகொள்கிறவர்கள் எல்லாம் ஆண்டுக்கணக்கிலே காத்திருக்க முடியுமா என்பதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். எனவே இந்தத் திட்டத்தை விரைந்து அளிப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். 2002-2003 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பக்கம் 25-ல்......

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருதய அறுவை சிகிச்சைக்கு, ஏழையெளிய மக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் நிவாரணத் தொகையிலிருந்து வழங்கப்படுகிற நிதியில், அதேபோல சிறுநீரக அறுவை சிகிச்சை செய்துகொள்கிறவர்களுக்கு அளிக்கப்படுகிற அந்த நிதியில் எந்தவித தடங்கலும் அல்லது தாமதமும் ஏற்படவில்லை. விண்ணப்பதாரர்கள் முறையான விளக்கங்களை, கேட்கிற தகவல்களை சரியாகக் கொடுப்பார்களேயானால், அவர்களுக்கு உரிய நேரத்தில் அந்தத் தொகை நிச்சயமாகக் கிடைக்கும். அவர் சிபாரிசு செய்து அனுப்பியிருக்கிற அந்த விண்ணப்பத்திலே ஏதாவது, குற்றம் குறை இருக்குமேயானால் அல்லது வேண்டிய தகவல்களைக் கேட்டு இருப்பார்களேயானால், அதை அவர் முறைப்படுத்தி அனுப்புவாரேயானால் நிச்சயமாக அந்தத் தொகை தாமதமின்றி வழங்கப்படும். காரணம், அவர் உறுப்பினர் என்ற முறையிலே சொல்கிறார், நான் அமைச்சர் என்ற முறையிலே சொல்கிறேன்; மாதத்திற்கு 10, 15 பேருக்கு நானும், நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் கையெழுத்திட்டு, தாமதமின்றி அந்த நிதியினை வழங்கிக் கொண்டுதான் இருக்கிறோம்.

முற்பகல் 11-25

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தன்னுடைய பதிலுரையிலே இதுவரையிலே எத்தனை பேருக்கு வழங்கி இருக்கிறார்கள் என்று சொல்லட்டும், அது வேறு. நான் சுட்டிக்காட்டுவது, பொதுவாக, நான் சிபாரிசு செய்கிறேன் என்று சொன்னால், எனக்கு அனுபவம் இருக்கிற காரணத்தால் அதிலே சரியான ஆவணங்கள் இருந்தால்தான் சிபாரிசு செய்து இருக்கிறேனே தவிர சரி இல்லாமல் இருந்தால் சிபாரிசு செய்வது இல்லை. இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில், நான் சிபாரிசு செய்த எந்த ஏழைக்கும் வழங்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து, எடுத்துச் சொல்லி இருப்பது.

அடுத்து, 2002-2003 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பக்கம் 25 பத்தி 59-ல் அரசு தனியார் பங்கேற்புடன் இந்திய முறை மருத்துவ அடிப்படையில் உலகத் தரம் வாய்ந்த மருத்துவமனையை சென்னையில் ஏற்படுத்த இவ்வரசு கருதி உள்ளது என்று சுட்டிக்காட்டி இருந்தீர்கள். இப்போது என்ன நிலை? இந்த பட்ஜெட்டிலே அதுபற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை. அது ஏதாவது செயல்முறையில் வளர்ந்து இருக்கிறதா, அதற்கான வாய்ப்புகள் இருக்கிறதா என்பதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.....

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட இந்தக் கேள்வி ஏற்கெனவே அவருடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினரால் எழுப்பப்பட்டு பதில் சொல்லியிருக்கிறேன். மீண்டும் அதற்கு விளக்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற ஆண்டு அறிவித்த அறிவிப்பில் தெளிவாக அவர் பார்ப்பாரேயானால் 22-வது அறிவிப்பாக அது அறிவிக்கப்பட்டுள்ளது. அதையேதான் மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்களும் வேறு ஒரு நாளிலே கேட்டார். அதிலே இவ்வரசு தனியார் பங்கேற்புடன் இந்திய மருத்துவ அடிப்படையில் உலகத் தரம் வாய்ந்த மருத்துவமனை ஒன்றை நிறுவ உள்ளது. அந்த உலகத் தரம் வாய்ந்த மருத்துவமனை கட்டுவதற்குத் தேவையான நிலம் அரசால் வழங்கப்படும். எனவே இந்த மருத்துவமனை கட்டுவதற்கான வழிமுறைகளை வகுத்திடவும். நெறிப்படுத்தவும் Steering Committee ஒன்று விரைவில்

அமைக்கப்படும். இதுதான் நாங்கள் கொடுத்த வாக்குறுதி. உடனடியாக இந்த ஆண்டே மருத்துவமனையை அமைத்துவிடுவோம் என்று நாங்கள் சொல்லவில்லை. நாங்கள் இதிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். Steering Committee அதற்காக அமைக்கப்படும். முழுக்க முழுக்க அரசாங்கமே அமைக்கக்கூடியது அல்ல. தனியார் பங்கேற்புடன் அமைக்கப்படுவதாகத்தான் நாங்கள் சொல்லியிருக்கிறோம். எனவே அரசின் சார்பிலே, அரசின் பங்கீடாக நிலத்தை ஒதுக்குவதற்கு இருக்கிறோம். தனியார் யாராவது முன் வரவேண்டும் என்பதற்காக தனியார் பங்கேற்பிற்காக நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே நாங்கள் எங்களுடைய புதிய அறிவிப்பிலே சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றுகிற வகையில், அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டு, அந்த வாக்குறுதியிலே சொல்லப்பட்டு இருப்பதுபோல நெறிமுகப்படுத்தும் குழு Steering Committee அமைக்கப்பட்டுவிட்டது. தனியார் பங்கேற்பை ஏற்படுத்துவதற்கு இப்போது அரசு முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது. அரசு அதற்கான நிலத்தை வழங்குவதற்குத் தயாராக இருக்கிறது.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டு இந்த ஆண்டு ஏன் ஆரம்பிக்கவில்லை என்று நான் கேட்கவும் இல்லை. அப்படிக் கேட்கும் அளவுக்கு நான் அரிச்சுவடி தெரியாதவனும் இல்லை. நான் கேட்பது எல்லாம் நீங்கள் அப்படிச் சொல்லி இருக்கிறீர்களே, Steering Committee அமைப்பதற்கே ஓர் ஆண்டு ஆகிறது என்று நீங்கள் சொன்னால், அந்த மருத்துவமனையை ஆரம்பிப்பதற்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் வேண்டும்; என்ன வளர்ச்சி என்பதை நீங்கள் ஏன் குறிப்பிடவில்லை என்றுதான் சுட்டிக்காட்டினேனே தவிர, இந்த ஆண்டே ஏன்.....

மாண்புமிகு திரு. செ. செம்மலை: தனியார் பங்கேற்பிற்காக நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். அப்படி தனியார் யாராவது அதற்கு முன்வருவார்களேயானால், அரசின் பங்கேற்பாக நிதியை ஒதுக்கி விரைவிலே அந்த மருத்துவமனை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதுபோல தனியார் யாராவது முன்வருவார்களேயானால் அவரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்களுக்கு அறிமுகப்படுத்தி, சிபாரிசு செய்தால் உடனடியாக அதை ஆரம்பிப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மணித்துளிகள் என்னுடைய நேரத்திலே இப்போது முடிந்துவிட்டது என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வரிக்கு வரி. குறுக்கிட்டுக்கொண்டு இருக்கிறார்கள். என்னுடைய நேரத்தை அதிலே குறைத்துக்கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நீங்கள் குறிப்பிட்டு இருப்பதுபோல், 2003-2004 நிதிநிலை அறிக்கை பக்கம் 56-ல் அடிப்படை சுகாதாரக் குறியீடுகளில் விரைந்த முன்னேற்றத்திற்கு உதவி செய்ய சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த, ரூ.650 கோடி செலவில் உலக வங்கி நிதி உதவியுடன் மருத்துவ அமைப்புகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு, இந்த ஆண்டு, மைய அரசின் ஒப்புதல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என சுட்டிக்காட்டி இருக்கிறீர்கள். எனக்குத் தெரிந்து, இது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தரப்பட்ட வரைவு. அப்போது தி.மு.க. ஆட்சியிலே, இதற்கு மத்திய அரசு நிதி இலாகாவினுடைய அனுமதியைக்கூடப் பெற்றாகிவிட்டது, எனக்குத் தெரிந்து. ஆனால் இதுவரையில் அதற்காக எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம், எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறோம் என்று சொன்னால் இப்போது நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன, யாரை அணுகி இருக்கிறீர்கள், இப்போது உங்கள் நிலை என்ன என்பதையெல்லாம், அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே...

முற்பகல் 11-30

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிவிடுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் உலக வங்கியினுடைய நிதியைக் கேட்டு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது ஏதோ உண்மைதான். ஆனால் உங்களுடைய முன்மொழிவுகள் சரியான தகவல்களைத் தரவில்லை என்று சொல்லி அந்த முன்மொழிவுகள் நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுவிட்டன. எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, நாங்கள் புதியதாக முன்மொழிவுகளைத் தயார் செய்து, இந்த ஓராண்டுக் காலம் மத்திய அரசோடு தொடர்புகொண்டு, உலக வங்கியோடு தொடர்பு கொண்டு இன்றைக்கு அந்த உலக வங்கி, அதுவும் நம்முடைய மாண்புமிகு

உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் இங்கே அடிக்கடி சொல்வதைப்போல, நாங்கள் அவர்களுடைய நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டதாலே அவர்கள் அந்த நிதியைக் கொடுக்க முன்வரவில்லை. எங்களுடைய ஆட்சிக் காலத்தில் மருத்துவத் துறை, குறிப்பாக சுகாதாரத் துறை சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை அந்தக் குழுவினரே வந்து கண்டறிந்து, ஆய்வுசெய்து (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அதை வழங்குவதற்கு ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள். நான் வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினருக்கு ஒரு தகவலைச் சொல்கிறேன். The World Bank has gone on record appreciating the high level of commitment of Government of Tamil Nadu in their aide-memoire என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தினுடைய high level of commitment என்றே சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்தக் குழுவினரே இங்கே வந்து ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் சென்று, துணை சுகாதார நிலையத்திற்கும் சென்று, மருத்துவமனைக்கும் சென்று ஆய்வு செய்து, அந்தச் சேவைகள், அதுவும் குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு தமிழக அரசு செய்து வருகிற மருத்துவ சேவைகள், செய்து தருகிற சுகாதார வசதிகள் மிகச் சிறப்பாக இருக்கின்றன என்பதை நேரிலே பார்த்து ஒத்துக்கொண்டு இன்றைக்கு அந்தத் தொகையைக் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அனுப்பிய அந்த முன்மொழிவுகள் உலக வங்கியினாலே நிராகரிக்கப்பட்டுவிட்டன என்பதுதான் உண்மை. இது நாங்கள் அனுப்பிய முன்மொழிவு. அந்த முன்மொழிவுகளுக்குப் பிறகு எங்களுக்குக் கிடைத்த வெற்றி, அதுவும் நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்துக்கொண்ட தனிப்பட்ட முயற்சியின் காரணமாக இன்றைக்கு உலக வங்கி நமக்கு 650 கோடி ரூபாயைக் கொடுப்பதற்கு முன்வந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே வரைவு அனுப்பப்பட்டது என்பதை ஒப்புக் கொண்டதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலுரை அளிக்கப் போவதே இல்லையா? வரிக்கு வரி இப்படியே சொல்லிவிட்டு, பதிலுரை சொல்லாமல் போய்விடப் போகிறாரா என்பதை நான் எண்ணிப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

பெரம்பலூரிலே மத்திய அரசினுடைய செலவிலே ரூ.1.15 கோடி செலவிலே விபத்து சிகிச்சைப் பிரிவுப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மத்திய அரசு நிதி ஒதுக்கியும்கூட அந்தப் பணி ஆமை வேகத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதை விரைவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே 1991-96 வரை அ.தி.மு.க. ஆட்சியில் நியமிக்கப்பட்ட மருத்துவர்களுடைய எண்ணிக்கை 1,327 பேர். 1996 முதல் 4 ஆண்டுகள் மட்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியால் நியமிக்கப்பட்ட மருத்துவர்கள் எண்ணிக்கை 2,641 பேர். அ.தி.மு.க. வினுடைய ஆட்சியில் 1991-96-ல் செவிலியர்கள் நியமனம் 786 பேர். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் 4 ஆண்டு காலத்தில் 1,570 பேர்களை நியமித்தோம். இதை நான் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், டாக்டர்கள் பற்றாக்குறை இருக்கிறது என்று வருகிறபோது நீங்கள் மருத்துவர்களை நியமிப்பதற்கு, பொதுவாக M.B.,B.S. பட்டப்படிப்பிற்கு எண்ணிக்கையை உயர்த்துகிறீர்கள். ஆனால் M.D., M.S. போன்ற மேல் படிப்புகளுக்கு எண்ணிக்கையை உயர்த்தித் தருவதில்லை என்பதனை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே மலைவாசஸ்தலங்களிலே இருக்கிற மருத்துவமனைகளிலே நியமிக்கப்படுகின்ற மருத்துவர்கள் அங்கே தங்கி இருக்க முடியாமல் அங்கேயிருந்து எப்படியாவது மாறுதல் பெற்றுக்கொண்டோ, விடுமுறையிலோ வந்துவிட வேண்டும் என்று விரும்புகிறார்கள். அரசு அங்கேயே பயின்ற, தகுதியுள்ள மருத்துவர்கள் இருந்தால், அவர்களை நியமித்தால் அவர்கள் அங்கே பணியாற்றுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதனையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் பெரும்பாலும் M.B.,B.S. டாக்டர்களை நியமிக்கிறபோது M.D., M.S. போன்ற மேல் படிப்பு படிப்பதற்காக மீண்டும் அவர்கள் அங்கிருந்து எந்த முறையிலாவது நகரங்களுக்குத் திரும்பி வந்துவிட வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்பதுதான் நிதர்சனமான உண்மை.

தொழுநோய்பற்றி நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே, கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் நான் சுட்டிக்காட்ட விரும்புவது எல்லாம், இந்தியாவிலே மொத்தம் 6 இடங்களிலே மத்திய அரசினுடைய உதவியோடு தொழுநோய் மருத்துவமனைகள்

ஆரம்பிக்கப்பட்டு, அவை 5 இடங்களிலே மூடப்பட்டு விட்டன; நடைபெறவில்லை. ஓரிடத்திலேதான், தாம்பரத்திலே, கடப்பேரியிலே அது மிகச் சிறந்த முறையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதன் பெயரைக்கூட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலோ அல்லது கொள்கைக் குறிப்பிலோ மருத்துவமனையினுடைய பட்டியலிலேகூட குறிப்பிடவில்லையே, ஏன் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, அங்கே மருத்துவர்கள் பற்றாக்குறை இருக்கிற காரணத்தினாலே Doctors-Senior Civil Surgeon-Ortho இல்லை. அந்த இடத்திலே மயக்க மருந்து தரும் டாக்டர் இல்லை. இது பல்வேறு மருத்துவமனைகளில் இருக்கிற குறைபாடு. மருத்துவமனைகளிலே மயக்க மருந்து தருகிற மருத்துவர்கள் இல்லாத காரணத்தாலே பல அறுவை சிகிச்சைகள் இன்றைக்குத் தாமதப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுபோலவே Pharmacists இல்லை. நர்ஸ் பணியிடம் ஒன்று காலியாக இருக்கிறது. M.B.,B.S. டாக்டர் பணியிடம் ஒன்று காலியாக இருக்கிறது. மருத்துவப் பணியாளர்கள் பணியிடம் இன்னும் மூன்று இடங்கள் காலியாக இருக்கின்றன. அங்கே அன்றாடம் 10-லிருந்து 50 வரை புற நோயாளிகள் வருகிறார்கள். இந்த நிலையில் இன்றைக்கு அங்கே 45 பேர் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்கள். மிகச் சிறந்த முறையிலே அங்கே அறுவை சிகிச்சை நடைபெறுகிறது. ஆனால் அந்த அறுவை சிகிச்சை அரங்குகள் இரண்டுக்கும் A.C. கிடையாது. அங்கே Lift கிடையாது; X-ray Unit கிடையாது. அது மிகச் சிறந்த மருத்துவமனை என்பது மட்டுமல்ல, அந்த மருத்துவமனையை அரசு விரும்பினால், பயிற்சி பெறுகிற நிலையமாகக்கூட மாற்றலாம். இப்போது D.D. (Leprosy) அனுமதி அளித்து, இராமச்சந்திரா மருத்துவமனையிலேயிருந்து சில பேர் வந்து பயிற்சிகூட பெற்றுச் செல்கிறார்கள். இன்னும்கூட, பொது மருத்துவமனையாக நிலை உயர்த்தினால் பலபேர் பயன் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் இரண்டு மணித்துளிகளில் பேசி முடியுங்கள்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: நான் 5 மணித்துளிகள்தான் பேசியிருக்கிறேன். அமைச்சர் குறுக்கிட்டதையெல்லாம் என் நேரத்தில் எப்படிச் சேர்க்கலாம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுக்கிட்டதையெல்லாம் கழித்துத்தான், உங்களுக்கு 10 நிமிடம்தான். இப்போது 15 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன். இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள். திரு. வைத்தி, இரண்டு மணித்துளிகளில் முடியுங்கள்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் 3 மணித்துளிகள், 4 மணித்துளிகள் கொடுங்கள். பேசி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, 3 மணித்துளிகள் கொடுக்கிறேன்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: பொதுவாக அறுவை சிகிச்சை செய்தால் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் செய்கிறபோது, ரூ.750 ஒவ்வொன்றுக்கும் நம்முடைய State Health Society நிதியிலிருந்து தருகிறோம். இந்த மருத்துவமனைகளில் செய்தால் அந்தச் செலவு கிடையாது. அதனால் அதை ஊக்குவிக்க வேண்டுமென்பதற்காக நான் சுட்டிக்காட்டுகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் மாண்புமிகு அமைச்சரவர்கள் என்னுடைய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும்போது சொன்னார்கள். ஈஞ்சம்பாக்கம் புறநகர் மருத்துவமனை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் உதாரணங்கள் எல்லாம்கூடச் சொன்னார்கள். நீங்கள் மாடு வாங்குவதற்கு முன்பாக கலயம் வாங்கிவிட்டீர்கள், அதனால் கெட்டுப் போயிற்று. இப்போது நீங்கள் நிதி ஒதுக்கித் தந்தீர்கள் என்றால், அதை நான் கட்டிவிடுவேன், அரசு நிலத்தையெல்லாம் நானே வாங்கிக்கொள்வேன், அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை, என்றெல்லாம் சொன்னார். இதுவரையில் இதற்கு என்ன நடவடிக்கை? அரசு நிலத்தை கையகப்படுத்திவிட்டீர்களா? அல்லது அதில் போகிற உரிமைகளையாவது பெற்றிருக்கிறீர்களா? அந்தப் புறநகர் மருத்துவமனைக்காக, மாண்புமிகு அமைச்சர் சொன்னதுபோல, எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு டி.ஆர். பாலு, மத்திய அமைச்சர் தொகுதி நிதியிலிருந்து ரூ.25 இலட்சத்தை நான் பெற்றுத் தந்து இருக்கிறேனே, மாண்புமிகு அமைச்சர்

அவர்களிடம் அந்த நகலைக்கூட நான் அனுப்பி வைத்திருக்கிறேன். அமைச்சர் ஒரு கடிதம் அனுப்பினார். மருத்துவமனையையெல்லாம் சுற்றிப் பார்த்து, என்னென்ன கோரிக்கைகள் என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்தால், நான் அதை எடுத்துக்கொண்டு சீராக்குவதற்கு வழி இருக்கும் என்று சொன்னார். நான் எல்லா மருத்துவமனைகளையும் போய்ப் பார்த்து, அமைச்சர் அவர்களிடம் அனுப்பி வைத்தேன். ஆனால் எங்கே என்ன செய்தார் என்பதை அமைச்சர் எனக்கு ஒரு பதில்கூடச் சொல்லவில்லை. என்ன செய்தார் என்று எனக்குத் தெரியாது. நான் நேரடியாகக் கேட்டுக்கொள்கிறேன். இந்த பெரிஃபெரல் மருத்துவமனையில் இதுவரையில் எந்தவிதமான சிறிய உதவியும் இல்லாதது மட்டுமல்ல, 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்பதைப் போல நேற்றைக்கு நம்முடைய வருவாய்த் துறை அதிகாரிகள் வந்து அங்கே கிராம நல அதிகாரிகளுடைய அலுவலகம் கட்டுவதற்கு mark பண்ணிவிட்டுப் போகிறார்கள் அந்த இடத்திலே. எந்த இடத்தை மருத்துவமனைக்கு நாம் எடுத்துக்கொள்ளப் போகிறோம் என்று வரைவு அனுப்பி இருக்கிறோமோ, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் நிலம் வாங்குவதைப் பார்த்துக்கொள்கிறேன், நீங்கள் நிதி கொடுத்தால் போதும் என்று சொன்னாரோ, அந்த இடத்தில் நேற்றைக்கு வருவாய்த் துறை அதிகாரிகள் வந்து கிராம நிருவாக அலுவலகம் கட்டப் போகிறோம் என்று சொல்லி, mark பண்ணுகிறார்கள். அங்கிருக்கிற ஊராட்சித் தலைவர், என்னங்க, இது மருத்துவமனைக்கு ஒதுக்கப்பட்ட இடம் ஆயிற்றே என்று சொல்கிறார். எங்களுக்கு எந்தக் கடிதமும் வரவில்லை. நாங்கள் ஒப்புக்கொள்ளமுடியாது என்று சொல்லி mark பண்ணிவிட்டுப் போகிறார்கள். எனவே அமைச்சர் தலையிட்டு அதை நிறுத்த வேண்டுமென்பதற்காக நான் இந்த அவையிலே இதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

அதைப்போல கொசுக்கடியால் மிகப் பெரிய வியாதி வருகிறது. கொசுக்களை ஒழிப்பதற்காக சென்னையைச் சுற்றி இருக்கிற நதிகளை எல்லாம் சுத்தப்படுத்துகிற திட்டம் என்னவாயிற்று என்று எனக்குத் தெரியவில்லை. மத்திய அரசு மூலமாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பெறப்பட்ட மிகப் பெரிய திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது. அது எந்த அளவில் இருக்கிறது என்று தெரியவில்லை. கொசுக்கடியால் வரும் யானைக்கால், விரைவீக்கம் போன்றவற்றுக்கு ஊசி மருந்து கிடையாது. மாத்திரைதான் கொடுக்கிறார்கள். ஊசி போடுவது இல்லை. அதுமட்டுமல்ல.

மருத்துவமனையில் இப்போது பிறக்கிற குழந்தைகளுக்கு அம்மைகூட குத்துவது கிடையாது. குழந்தைகள் பிறந்தவுடனே வெளியில் வருவதற்கு முன்பே அம்மை குத்துவார்கள். அந்த அம்மைகூட இப்போது குத்துவது கிடையாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல, பல்வேறு மருத்துவமனைகளிலே—இராயப்பேட்டை மருத்துவமனையிலேகூட என்னுடைய நண்பர் ஒருவர் இருந்தார். பார்க்கப் போயிருந்தேன். அவரை ஸ்ட்ரெக்சரில் வைத்து மேலே கொண்டு செல்கிறார்கள். என்னவென்று கேட்டேன். அங்கேயிருக்கிற lift சரியாக இல்லை அதை replace செய்ய வேண்டும்; (மணியடிக்கப்பெற்றது) ஒரே மணித்துளியில் பேசி முடித்துவிடுகிறேன். *15* லட்சம் ரூபாய் கேட்டிருக்கிறோம். இன்னும் நிதி வரவில்லை என்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதைப்போலவே, Medical Gastero-Enterology-க்கு video endoscopy எடுப்பதற்காக ரூ.*10* இலட்சம் கேட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். Gastero-Enterology-க்கு laparoscopy வசதி செய்வதற்காக ரூ.*8* இலட்சம் கேட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

அண்ணா நகர் புறநகர் மருத்துவமனை மிகப் பெரிய மருத்துவமனை என்பது உங்களுக்குத் தெரியும். அதில் குடல் செரிமானப் பகுதி, அந்த Department-ஐத் தரம் உயர்த்துவதற்கு அரசிடம் அணுகியிருக்கிறார்கள். உலகத்தரம் வாய்ந்த மருத்துவமனையோடு போட்டியிடக்கூடிய அளவிற்கு இருக்கிற அந்த மருத்துவமனையின் அந்தத் துறை மிகவும் தகுதி படைத்ததாக இருக்கிற காரணத்தால், அதற்கும் மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலுரையைச் சொல்கிறபோது விளக்கமாகக் கூறினால் பயனுள்ளதாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் *11-40*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி தமிழ்மொழி ராஜதத்தன். (குறுக்கீடு)

திரு. மீ.அ. வைதியலிங்கம்: ஒரு நிமிஷம், முடித்துவிடுகிறேன். ஒரே ஒரு செகண்ட் கொடுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேச்சை முடியுங்கள்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுகிறபோது சுட்டிக்காட்டிய இந்தக் குறைகள் எல்லாம் எப்படி இருக்கிறது என்று சொன்னால், யாராவது படிக்கிறவர்கள் புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு நிதிநிலை அறிக்கையும் கொள்கை விளக்கக் குறிப்புகளும் இருக்கின்றன என்பதனை, அது வெண்டைக்காயைக் குழம்பு வைத்து அதிலே வேண்டுமென்றால் கற்றாழைச் சாறையும் போட்டுக் குழப்பின மாதிரி இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்போது பேசுகின்றபோது, மருத்துவமனைகளில் பிறக்கின்ற குழந்தைகளுக்கு அம்மை குத்தப்படுவது இல்லையென்று குறிப்பிட்டார். முன்பெல்லாம் அம்மை குத்தப்பட்டதற்குக் காரணம், small pox அப்போது இந்த மாநிலத்தில் பரவலாக இருந்தது. அம்மை குத்துவது என்பது small pox-க்கான vaccine ஆகும். இப்போது small pox அடியோடு தமிழகத்தில் ஒழிக்கப்பட்டுவிட்டது. அதனால்தான் அம்மை குத்த வேண்டிய அவசியம் இல்லை. அதனால்தான் குத்துவது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்.

***திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். பாரதியார் கண்ட புதுமைப் பெண்ணாக, மனிதருள் மாணிக்கமாக, தமிழகப் பெண்களுக்கெல்லாம் ஒரு கலங்கரை விளக்கமாக, நல்வழிப்பாதையிலே எங்களை நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கு முதற்கண் எனது வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதி நெருக்கடியிலே சீரழிந்த தமிழகத்தை, இந்தியாவின் முதன்மை மாநிலமாக நிறைவேற்றிக் காட்டுவேன் என சபதமிட்டு, அதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுவரும் 'இரும்புத் தேவதை'

டாக்டர் அம்மா அவர்களின் தலைமையிலே சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி வருவதை எண்ணி நான் மிக்க பெருமை அடைகிறேன்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலன் பற்றிய மானியக் கோரிக்கைமீது என்னுடைய கருத்துகளை அவையில் பதியவைக்க விரும்புகிறேன். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற கூற்றிற்கிணங்க, சமுதாயத்தின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு, 'ஆரோக்கியமான மக்களே ஆக்கபூர்வமான பங்கினை அளிக்க இயலும்' என்கின்ற வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய முயற்சியால், மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வி அமைச்சர் அவர்களால் நிதி நெருக்கடியான சூழ்நிலையில்கூட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலனுக்காக ரூ. 1380.29 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

தமிழக அரசினுடைய நிதி நெருக்கடியை நினைக்கும்போது சிறு வயது சம்பவமொன்று என்னுடைய நினைவிற்கு வருகின்றது. சிறு வயதுக் குழந்தைகள் விளையாடும்போது, தோல்வியைச் சந்திக்க நேர்ந்தால், அக்குழந்தைகள் விளையாட்டைக் கலைத்துவிட்டு, யாருக்கும் பயன்படச் செய்யாமல் ஓடிவிடும். அதுபோன்று, சென்ற ஆட்சியிலே இருந்தவர்கள் நாம் மீண்டும் ஆட்சிக்கு வரமாட்டோம் என்கின்ற நிலை வந்ததும், நிதி நிலைமை சீரழிந்தால் நமக்கென்ன என்ற ஒரு தீர்க்கமான பார்வையுடன் (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சியை நடத்தியதனுடைய விளைவு, அத்தனை சுமைகளும் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது விழ, நிதிநிலைமையைச் சரிசெய்ய பல கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

சுதந்திர இந்தியாவில் எந்த அரசும் இதுவரையில், இந்த அளவிற்கு கிராம மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு திட்டங்களைச் செயல்படுத்தியதில்லை. மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மக்களின் சுகாதாரத்திற்கு முன்னுரிமை கொடுத்து, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்று என அறிவித்து, அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டு வருவதை மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர். இதன் அடிப்படையில் சென்ற ஆண்டு 58 ஆரம்ப சுகாதார நிலையங்களையும், இந்த ஆண்டு 35 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் தாம் உயர்த்தி, 2003-2004-ல் இலக்கு 100 என நிர்ணயிக்கப்பட்டதை மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

மகளிர் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், மகளிர்-குழந்தைகளுக்கான மருத்துவமனையில், பிரசவத்திற்குக் கூடுதல் இடவசதி செய்து தர ரூ. 2 கோடி செலவில் கட்டடங்கள் கட்டித் தர நிதி ஒதுக்கீடு செய்து இருப்பதற்காக பெண்களின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்திலே இளம்பிள்ளைவாதம், தொழுநோய்த் தடுப்பு, யானைக்கால் போன்ற நோய்களைத் தடுக்க அரசு எடுத்திருக்கின்ற முயற்சி குறிப்பிடும்படியான வெற்றியை அடைந்திருப்பதை எண்ணி மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றனர்.

அதேபோல், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி பிரிவுகள் 25 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொடங்க ரூ. 66.11 இலட்சம் ஒதுக்கீடு செய்திருப்பதை மிகவும் வரவேற்கின்றேன்.

நகர்ப்புறங்களிலே வாழுகின்ற குடிசைப் பகுதி மக்கள் மருத்துவ வசதிகள் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு நகர்ப்புற சுகாதாரக் கொள்கை ஒன்றை உருவாக்கி இருப்பதும், தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ. 650 கோடி உலக வங்கியின் நிதி உதவி பெற நடப்பாண்டில் முயற்சி எடுத்து வருவதும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், மக்கள் நோயற்ற வாழ்வு வாழ எடுத்திருக்கும் சீரிய முயற்சிக்கு சில உதாரணங்களாகும்.

முற்பகல் 11-45

2003-2004-ல் 316 M.B.B.S. இடங்களைக் கூடுதலாக உருவாக்கி மக்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்கு வழி வகுத்திருப்பதற்கு இந்த நேரத்திலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்திலே மக்களைப் பாதிக்கின்ற பான்பராக், குட்கா, பொது இடங்களில் புகை பிடித்தல் இவற்றிற்குத் தடைகள் விதித்திருப்பதைப் பார்க்கும்போது அரசு எந்த அளவிற்கு மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ளது என்பதற்கு இது ஓர் உதாரணமே, எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

சார்ஸ் நோய் பரவுகின்றது என்ற பயம் மக்களிடையே இருப்பதைப் போக்கும் விதத்திலே அதனைத் தடுக்கிற விதத்திலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருவது பாராட்டுக்குரியது. இந்தியத்

துணைக் கண்டத்திலே அம்மா அரசுதான் இதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் அதி நவீன மருத்துவமனை ஆய்வுக் கருவிகள் கொண்ட, நோய் கண்டறியும் மையம் 7 இடங்களில் ரூபாய் 21 கோடி நிதியொதுக்கீடு செய்ததில் என்னுடைய மாவட்டமான விழுப்புரம் அரசு மருத்துவமனையும் இடம்பெற்றிருப்பதைக் கண்டு இந்த நேரத்திலே நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேசிய நெடுஞ்சாலையில் விபத்துக்குள்ளானவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கும் வகையிலே தேசிய நெடுஞ்சாலையின் அருகில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்களை வலுப்படுத்த ரூபாய் 338 இலட்சம் ஒதுக்கீடு செய்ததில் என்னுடைய விழுப்புரம் மாவட்டத்திலுள்ள திண்டிவனம் இடம் பெற்றிருப்பதற்கு மாவட்ட மக்களின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றியத்திற்கு ஒரு மருத்துவமனை என்கின்ற அம்மாவின் அறிவிப்பிலே குறிப்பிட்டுள்ளவாறு மேல்மலையனூர் ஒன்றியத்திலே இருக்கிற வளத்தி ஆரம்ப சுகாதார நிலையத்தையும், செஞ்சி ஒன்றியத்திலே இருக்கிற அனந்தபுரம் பேரூராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார மருத்துவமனையினுடைய தரத்தினையும் உயர்த்தித் தர மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கோரிக்கையாக வைக்கிறேன்.

என்னுடைய சொந்த கிராமமான எய்யில் கிராமத்திலே மக்களினுடைய பங்குத் தொகையாக 1980ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது. அதற்கான போதுமான இட வசதியும் உள்ளது. அரசு குறிப்பிடுகிற இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் இடைப்பட்ட தூரமும் சரியாக உள்ளது. எங்கள் தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதை என்னுடைய கிராமத்தில் ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கோரிக்கையாக வைக்கிறேன்.

கிராமப்புறக் கல்வியை மேம்படுத்தும் மாண்புமிகு அம்மா அவர்கள் என்னுடைய தொகுதியிலே தடாகம், கணக்குப்பம், எடப்பட்டு ஆகிய கிராமங்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப்

பள்ளிகளாகவும், சத்தியமங்கலம் கிராமத்திலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தித் தர இந்த ஆண்டில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையையும் அம்மாவின் முன் வைக்கிறேன்.

அதேபோன்று, மேல்மலையனூர் ஒன்றியத்திலே இருக்கிற சோழந்தாங்கல் கிராமத்திலே நிதி உதவிப் பள்ளி ஒன்று இயங்கிக் கொண்டிருந்தது. அங்குள்ள மக்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் ஏற்பட்ட சிறு பிரச்சினையால் அந்தப் பள்ளி மூடப்பட்டுவிட்டது. இப்போது அந்தக் குழந்தைகளுடைய நிலை கேள்விக்குறியாக இருக்கிறது. சோழந்தாங்கல் கிராமத்தில் இந்த ஆண்டிலே அந்த அரசு ஆரம்பப் பள்ளி தொடங்குவதற்கு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையையும் இந்த அவைமுன் வைக்கக் கடமைபபட்டிருக்கின்றேன்.

எந்த ஒரு அரசும் பூமியின் மேல்தான் அணையைக் கட்டி மழை நீரைச் சேமிக்கத் திட்டம் வகுக்கும். ஆனால் நிலத்தடியிலே நீரைத் தேக்க வேண்டும் என்ற விஞ்ஞான ரீதியிலான திட்டத்தை மக்களுக்கு அளித்த பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒருவரையே சாரும். மழை நீரைச் சேமிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தி, மழை நீர் தேக்கத் தொட்டி கட்ட இன்று அவர்களாகவே முன்வரும் அளவுக்கு ஒரு சாதனை படைத்திட்டவர்தான் மாண்புமிகு அம்மா அவர்கள்.

அதுபோன்று, விவசாயிகளின் நிலை உயர்த்த தூர்ந்து கிடக்கின்ற ஏரி, குளங்களை ஆழப்படுத்தி விவசாயிகளின் நிலையை உயர்த்த அரசு எடுத்திருக்கிற அனைத்து முயற்சிகளையும் மக்கள் பாராட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

என்னுடைய தொகுதியிலே இருக்கிற முனைப்பா ஏரி சாதாரண மழைக்குக்கூட 1/2 மணி நேரத்திலே நிரம்பிவிடக்கூடிய அளவிற்கு நீர் வரத்து இருக்கிறது. இந்த முனைப்பா ஏரியை ஆழப்படுத்தி, கரையை உயர்த்தினால் 7 கிராமங்களும், 2,600 ஏக்கர் நிலங்களும் பயன்படக்கூடிய வகையிலே இருக்கும் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

முற்பகல் 11-50

அதேபோன்று, என் தொகுதிக்குட்பட்ட பெரிய ஏரி மேல்மலையனூர் ஏரி. இந்த ஏரிக்கு திருவண்ணாமலை மாவட்டம்

வில்வாரணி அணைக்கட்டிலிருந்து மேல்மலையனூர் ஏரி வரை கால்வாய் உள்ளது. அதாவது chain method-ல் இந்தக் கால்வாய் அமைந்துள்ளது. ஓர் ஏரியில் நிரம்புகின்ற நீர் அடுத்த ஏரிக்கு வந்தடையும் வகையிலே இந்தக் கால்வாய் உள்ளது. இந்தக் கால்வாய் அடைப்பட்டும், ஆக்கிரமிப்புகள் நிறைந்தும் உள்ளதால் இவற்றைச் சரி செய்து கொடுத்தால், இதனால் என் பகுதியிலுள்ள நான்கில் ஒரு பங்கு கிராமங்கள் பயனடையும் என்பதை இந்த நேரத்திலே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மற்றுமொரு கோரிக்கை. நந்தன் கால்வாய்த் திட்டம். சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து திறந்துவிடப்படும் உபரி நீர் சொர்ணாவூர் அணைக்கட்டிற்குச் சென்று பிறகு கடலுக்குச் செல்கிறது. கடலுக்குச் செல்லும் உபரி நீரை, சாத்தனூர் அணை முதல் சமுத்திரம் ஏரி வரை செல்லும் வகையில் உயர்மட்டக் கால்வாய் அமைத்தால் இந்தத் திட்டத்தின் முழுமையான பலன் கிடைக்கும். இக்கால்வாயால் திருவண்ணாமலை மாவட்டத்தில் 14 ஏரிகளும், விழுப்புரம் மாவட்டத்தில் 22 ஏரிகளும், மொத்தத்தில் 6,600 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும் என்பதை இந்த நேரத்திலே தங்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, விவசாயிகளை மேம்படுத்த வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு செயல்படுகிற மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த மூன்று திட்டங்களையும் நிதிநிலைமைக்கேற்ப படிப்படியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக தங்கள்முன் கோரிக்கையாக வைக்கிறேன்.

எங்கள் பகுதியிலே வறட்சியின் காரணமாக குடிநீர் போதுமானதாக இல்லை. மேல்மலையனூர் தொகுதிக்குட்பட்ட அவலூர்பேட்டை, வளத்தி, மேல்மலையனூர் இதற்குட்பட்ட 12 கிராமங்களினுடைய தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்கவும், நிரந்தரத் தீர்வு காணவும் சாத்தனூர் அணையிலிருந்து குடிதண்ணீர் கொண்டுவர கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தவும். அதே போன்று தென்பாலை, மல்லாண்டி, மேல்அருங்குணம், கலத்தப்பட்டு, ஆத்திப்பட்டு, சோழந்தாங்கல் ஆகிய கிராமங்களில் நிலவும் கடுமையான குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் போக்க தென்பாலை அருகில் உள்ள ஆற்றில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து, கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றினைச் செயல்படுத்தவும் மாண்புமிகு அம்மா அவர்கள் நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே தங்களிடம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தான தர்மங்களிலே சிறந்தவர் கர்ணன் என்று கூறுவார்கள். அப்படிப்பட்ட கர்ணன்கூட செய்யத் தவறிய அன்னதானத்தை இன்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆலயங்களிலே அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையிலே மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் கோயிலிலே அன்னதானத் திட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதை பக்தர்களும் நல்ல முறையிலே வரவேற்கின்றனர். பிரசித்திபெற்ற இந்த ஆலயத்திற்கு சாதாரண நாட்களிலேகூட ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றார்கள். அமாவாசை நாள் அன்று 2 இலட்சம் பக்தர்கள் வந்து செல்கின்றார்கள். இந்தக் கிராமத்திலே போதுமான அளவிற்குக் கட்டட வசதியோ அல்லது சாலை வசதியோ, வியாபாரிகளுக்குக் கடை வசதியோ இல்லாத சூழ்நிலையில்தான் இன்றைக்கு மேல்மலையனூர் இருந்து வருகிறது. இங்கு வருகின்ற ஆயிரக்கணக்கான வாகனங்களை சாலையிலே நிறுத்திவிடுவதால் போக்குவாத்து நெரிசல் ஏற்பட்டு, இதனால் மூன்று கிலோ மீட்டருக்கு வெளியிலேயே பேருந்துகள் நிற்க வேண்டிய ஒரு சூழ்நிலை. இதைச் சரி செய்வது காவல் துறைக்கு ஒரு சவாலாகவே ஏற்பட்டுவிடுகின்றது. ஆலயத்திற்குப் போதுமான நிதி வசதியும் இருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் இங்கே வருகின்ற பக்தர்களுக்குப் போதுமான வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று இந்த நோத்திலே நான் கோரிக்கையாக வைக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களிடம் மீண்டும் ஒரு முறை கோரிக்கை வைக்கிறேன். அங்கு வருகின்ற பக்தர்களின் நலன் கருதி மேல்மலையனூருக்கு ஒரு காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று பணிவன்போடு உங்களை இந்த நோத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசி கருத்தாக ஒரே ஒரு கருத்தை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1991—96-ல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே விவசாயிகளுக்கு வருடத்திற்கு 40 ஆயிரம் மின் இணைப்புகள் இலவசமாக வழங்கினார்கள். ஆனால் தி.மு.க. ஆட்சியிலே 1997-க்குப் பிறகு இந்த இணைப்புகள் வழங்கப்படவில்லை. எப்போதும் விவசாயிகளுக்கு, விவசாய மக்களுக்கு

துரோகம் செய்வது தி.மு.க. அரசுதான். இவர்கள் விவசாயிகளுக்காக இந்தச் சட்டசபையிலே நீலிக்கண்ணீர் வடிப்பதைப் பார்க்கும்போது எங்களுக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. தொடர்ந்து சிறு, குறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவது குறித்து இந்தச் சட்டசபையிலே ஒரு வார காலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பலவிதமான விளக்கங்களை இங்கே கூறினார்கள். இருந்தாலும் எதிர்க்கட்சிகள் அவர்களுடைய அரசியல் சுய லாபத்திற்காக மக்களை திசை திருப்ப வேண்டும், மக்களை brain wash செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு இன்றைக்குச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் என்னதான் சட்டசபையிலே கும்பிடு போட்டாலும், போராட்டம் நடத்தினாலும், மக்களைத் தூண்டி விட்டாலும், மக்கள் உங்கள் பக்கம் நம்பத் தயாராக இல்லை. மாண்புமிகு அம்மா அவர்களைத்தான் நம்புகிறார்கள் என்ற ஒரு கருத்தை மட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக்கொண்டு தைரியம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி, எதையும் சாதிக்கக்கூடிய திறன் பெற்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையிலே இன்று மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம் கோரிக்கைமீது பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச். எம். ராஜு.

•திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் சுகாதாரத் துறையில் என்னைப் பேச அனுமதித்தமைக்கு தங்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறையைப்பற்றிப் பேசுவதற்கு முன்பாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தினுடைய 2, 3 முக்கிய பிரச்சினைகளைச் சொல்லிவிட்டு இந்தத் துறையைப்பற்றிப் பேசலாம் என்று உங்கள் அனுமதியைக் கேட்டுக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயிகளின் துன்பங்கள் தொடர்கின்றன. தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அரசு ஏல மையத்தை அமைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராஜு, பொதுவான கருத்து எல்லாம் சொன்னால் பதில் சொல்ல முடியாது.

திரு. எச். எம். ராஜு: தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு ஏல மையம் ஆரம்பிக்கப்பட்டால் விவசாயிகளுடைய துயர்கள் தீருமென்று காத்துக் கொண்டிருக்கிறோம். அந்த ஏல மையத்தை விரைவாக ஆரம்பித்தால் நலமாக இருக்கும்.

அதுமாதிரி விவசாயிகளுடைய பட்டா பூமியில் வளர்க்கப்படும் சில்வர் ஓக் (Silver Oak) மரங்களை வெட்டுவதற்கு அனுமதி தரவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராஜு, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு வாருங்கள்.

திரு. எச்.எம்.ராஜு: முக்கியமான பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு வாருங்கள். நீங்கள் மூத்த உறுப்பினர்.

திரு. எச்.எம். ராஜு: தென்கிழக்கு ஆசியாவிலேயே ஓரே ஒரு இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை நம் தமிழ்நாட்டிலேதான் இருக்கிறது தலைவர் அவர்களே, அது காப்பாற்றப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் மற்ற நேரங்களிலே பேசும்போது சொல்லுங்கள். தொழில் துறை மானியத்தில் வரும்போது சொல்லுங்கள்.

திரு. எச். எம். ராஜு: நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்றும் நோய் வருமுன் காப்பதே சாலச் சிறந்தது என்றும் சான்றோர்கள் சொல்வார்கள். அதேபோல் எதிர்பாராத விதத்தில்கூட நோய்கள் வரும் என்பது உண்மை. அரசு எப்போதும் அதற்குத் தயாராக இருக்க வேண்டும். இந்த SARS என்ற Severe Acute Respiratory Syndrome என்ற ஒரு பயங்கரமான வியாதி வைரஸ் கிருமிகள் மூலமாக 13 நாடுகளிலே வந்திருக்கிறது. இங்கிலாந்து, ஜெர்மனி, ஸ்லோவேனியா, தாய்லாந்து, சீனா, தைவான், கனடா, அமெரிக்கா, ஹாங்காங், வியட்நாம், சிங்கப்பூர், சுவிட்சர்லாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் வந்திருக்கிறது. 1-2-2003-லிருந்து 31-3-2003 வரை இந்த வியாதியினால் பாதிக்கப்பட்டவர்கள் 1,600 பேர்.

இறந்தவர்கள் எண்ணிக்கை 62 பேர். இதைக் கண்டுபிடித்த டாக்டர் கார்லோ உர்பானி அவர்களே இந்த நோயால் மாண்டார்கள் என்பதும் மாண்புமிகு சட்டசபை உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே பயணிகள், ஆகாயவிமானத்தின் மூலமாகவும், கப்பல் மூலமாகவும் நமது மாநிலத்திற்கு வந்தவுடன், உடனடியாக அவர்களுக்கு இந்த வியாதி இருக்கிறதா, இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். இவர்களுக்குக் கடுமையான காய்ச்சல் மூலமாகவும், மூச்சுத் திணறல் மூலமாகவும் இந்த வியாதி இருக்குமென்று மருத்துவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்த வியாதி பரவாமல் தடுப்பதற்கு ஒரு சிறப்பு மருத்துவக் குழுவை தயவுசெய்து நமது மாநில அரசு அமைத்து, நமது துறைமுகத்திலும், ஆகாயவிமான நிலையத்திலும் இவர்களைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், கிராமப்புற மக்களுக்கும் நகரத்திலுள்ள 30 சதவிகிதத்திற்கும் கீழேயிருக்கிற, B.P.L. வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களுக்கும் நல்வாழ்வுத் திட்டங்கள் முறையான வகையிலே சென்று அடைய வேண்டும். அதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். 2002-2003 ஆம் ஆண்டு இத்துறைக்கு அரசு ஒதுக்கிய நிதியைக்காட்டிலும் சில கோடிகளே இந்த வருடம் ஒதுக்கியிருக்கிறீர்கள். இருந்தாலும்கூட அந்தத் துறைக்கு கண்டிப்பாக அதிக அளவில் நிதி தேவைப்படுகிறது. இது மிகவும் முக்கியமான துறை. நேருக்கு நேர் மனித உயிரை பாதிக்கின்ற, காக்கின்ற ஒரு துறை. ஆகவே இன்னும் சில கோடிகள் தேவைப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்கள் மட்டிலும் இந்த ஆண்டு 294 என்று கருதுகிறேன். ஆக, இதிலிருந்தே இந்தத் துறைக்கு கண்டிப்பாக மேலும் நிதி அவசியம் என்பது தெரிய வருகிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஐந்து அறிவுரைகளை கடந்த ஆண்டு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மருத்துவரின் சேவை மனப்பான்மை, உடல்நலம் குன்றியவர்கள் நன்மதிப்புபெறும் வகையில் மருத்துவர்கள் வேலை, மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் பணி நேரம் முழுவதும் கட்டாயமாக இருத்தல், புகார்கள் வராமல் கடமையை ஆற்றல், நீண்ட விடுப்பில் மருத்துவர்கள் செல்வதைத் தவிர்த்தல் என்பதைச்

சொல்லியிருக்கிறார்கள். இவை எல்லாம் இப்போது நடைமுறையில் பார்க்கப்படுகின்றனவா? நாம் எல்லாம் பார்க்கின்றோமா என்பதைப் பார்க்க வேண்டும்.

நண்பகல் 12-00

சென்னை கொடுங்கையூரில் சின்னாண்டி மடத்திலே கண்ணன் என்ற ஒரு இரண்டு வயது பையன், இரண்டு தினங்களுக்கு முன்னால் ஒரு விபத்தில் சிக்கியிருக்கிறான். உடனடியாக ஸ்டான்லி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறான். அங்கிருந்த மருத்துவர்கள் தட்டிக்கழித்துவிட்டு எழும்பூர் மருத்துவமனைக்கு அனுப்பியிருக்கிறார்கள். எழும்பூர் மருத்துவமனையிலேயிருந்து சென்னை பொது மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு, அங்கு அவனுடைய காலுக்கு சிகிச்சை அளித்தும், அறுவை சிகிச்சை செய்தும்கூட உயிர் பிழைக்கவில்லை. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்தக் கடமையுணர்வுகள், மனிதநேயம் அந்த மருத்துவர்களிடத்திலே இருந்ததா? அந்த மனிதநேயம் இருந்திருந்தால், அவர்களுடைய பையனோ அல்லது அவர்களுடைய தம்பியோ அல்லது அவர்களுடைய உறவினராகவோ இருந்திருந்தால், கண்ணன் காப்பாற்றப்பட்டிருக்கலாமே. அந்தக் கண்ணனுடைய அம்மா, அவர்களுடைய மனநிலைமை என்னவாக இருந்திருக்கும்? சுமார் 4,5 மணிநேரம் கழித்த பிறகு அந்தக் குழந்தை இறந்திருக்கிறது என்றால் அந்தக் கடமை தவறிய மருத்துவர்கள்மீது கண்டிப்பாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தக் குழந்தையினுடைய நிலைமை உள்ளபடியே வருந்தத்தக்கதுதான். விபத்தில் சிக்கி அடிபட்டவுடன், உடனடியாக ஸ்டான்லி மருத்துவமனைக்கு அந்தக் குழந்தையை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அந்தக் குழந்தைக்கு உடனே, அடிபட்ட அந்த உடல் உறுப்பை amputate செய்ய வேண்டும் என்று டாக்டர்கள் கருதியிருக்கிறார்கள். ஆனால் அந்த நேரத்திலே அங்கே Vascular Surgeon இல்லையென்ற அந்தக் காரணத்தினாலே அந்தக் குழந்தையை உடனடியாக பொது மருத்துவமனைக்குத் தான் அனுப்பியிருக்கிறார்கள். எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு அந்தக் குழந்தையை எடுத்துச் செல்லவில்லை. இங்குதான் அனுப்பியிருக்கிறார்கள். காரணம், யாருமே

ஒரு உடல் உறுப்பை amputate செய்ய வேண்டும் என்று சொன்னால், Vascular Surgeon தான் அதைச் செய்ய வேண்டும். ஆனால் Vascular Surgeon அங்கே இல்லாத காரணத்தினாலே, உடனடியாக இங்கே அனுப்பியிருக்கிறார்கள்.

இங்கே உடனடியாக அந்த amputate செய்து, தக்க சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் காலம் கடந்து அந்தக்குழந்தையை மருத்துவமனைக்குக் கொண்டுவந்த காரணத்தாலே, அந்தக்குழந்தை நல்ல சிகிச்சைக்குப் பிறகும் இறந்துவிட்டதுதான் உண்மை. இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையின்பேரில், அங்கே Vascular Surgeon இல்லையென்று சொன்னால்கூட, M.S. Surgeon இருந்தால்கூட, அவர்கள் அந்த நிலைமையைக் கருதி amputate செய்வதோ அல்லது அந்த Vascular Surgeon இல்லாத நிலையில்கூட, அதை M.S. Surgeon செய்யலாம் என்று அவர்களுக்கு அறிவுரை சொல்லியிருக்கிறோம். அந்த நிலைமைக்கு நாங்கள் இப்போது தக்க அறிவுரையைச் சொல்லியிருக்கிறோம். இதுபோன்ற நிலைமை எதிர்காலத்திலே ஏற்படாத அளவிற்கு மருத்துவர்களுக்கு, மருத்துவமனையினுடைய உயர் அதிகாரிகளுக்கு நாங்கள் அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் வழங்கியிருக்கிறோம். இதுபோன்ற தவறுகள் இனி ஏற்படாது.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்காகச் சொல்கிறேன் என்றால், குழந்தை என்று சொல்லும்போது அந்தக் குழந்தைக்குத் தீவிரமாக சிகிச்சை அளித்திருக்க வேண்டும். இருந்தாலும்கூட, அறுவை சிகிச்சை செய்ததற்குப் பிறகு அந்தக் குழந்தை இறந்திருக்கிறது: இரண்டு வயது பையன். இந்த மருத்துவர்களுக்கு நேரடியாக அந்தக் கடமையுணர்வு, சகிப்புத் தன்மை கண்டிப்பாக வேண்டும். இந்தத் துறைக்கு அது மிகவும் முக்கியமானது என்பதற்காக நான் அதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், செங்கற்பட்டு மேலவலம் ஆரம்ப சுகாதார நிலையத்திலே பணிபுரியும் மருத்துவர் ஒருவர் இழுப்பு நோய்க்கு ஊசி போட்டு, ஹேமமாலினி என்ற ஒரு பெண் இரண்டு நாட்களுக்கு முன்பு இறந்திருக்கிறார் என்ற நிகழ்ச்சியை நாம் பார்க்கிறோம். அதனால் இந்தத் துறையில் கண்டிப்பாக மருத்துவர்களுக்கு மனித சேவை மனப்பான்மை முக்கியமானதாக இருக்க வேண்டும் என்ற ஒரு கருத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், M.B.,B.S., M.D., M.S., போன்ற படிப்புகளில் ஏழை எளிய மாணவ மாணவியர்கள் எல்லாம் சேர்ந்து படிப்பதற்கு முடியாமல் இருக்கிறார்கள். நமது அரசு அந்த இருக்கைகளை அதிகப்படுத்த வேண்டும். எத்தனை கல்லூரிகள் இருந்தாலும், தனியார் கல்லூரிகளில் வாங்கும் பணம் மிகவும் அதிகமாக இருக்கிறது. அந்த ஏழை எளிய மாணவர்கள் தகுதி இருந்தும், படிக்க முடியாமல் போயிருக்கும் காரணத்தினால், இந்த முக்கியமான படிப்புகளுக்கான சேர்க்கையை, அந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புற்றுநோய், எய்ட்ஸ், சர்க்கரை நோய், இருதய நோய், மூளைக் காய்ச்சல், டெங்குக் காய்ச்சல், யானைக்கால் வியாதி, போலியோ போன்ற வியாதிகளுக்கு மிக முக்கியத்துவம் தர வேண்டும். இருதய நோய் சிகிச்சைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியிலிருந்து 25,000 ரூபாய் தருகிறார்கள். மக்கள் எல்லாம் நன்றி சொல்கிறார்கள். இருந்தாலும்கூட, தனியார் மருத்துவமனைகளிலே அந்த இருதய நோய் சிகிச்சை செய்யும்போது, அதிகப் பணம் செலவாவதால் அரசு மருத்துவமனைகளிலேயே அதைச் செய்தால் என்ன என்ற ஒரு கேள்வியை மக்கள் எல்லாம் கேட்கிறார்கள். ஏனென்றால், மீதமுள்ள பணத்திற்கு மக்கள் அதிக அளவிலே துன்பப்படுவதனால் இந்த ஒரு கருத்தையும் நீங்கள் பார்க்க வேண்டும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பள்ளி மாணவர்கள் நலன்...

பிற்பகல் 12-05

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் நீங்கள் கணக்கெடுத்துப் பார்த்தால்கூட, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிறுநீரக அறுவை சிகிச்சை, இன்னும் இருதய அறுவை சிகிச்சை போன்றவை அதிக அளவிலே இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இருந்தாலும் அப்படி அதிக அளவிலே செய்ய முடியவில்லை என்பதற்காக தனியார் மருத்துவமனைகளுக்கு அந்த அதிகாரம் வழங்கப்பட்டு அதை ஈடு செய்வதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து அதற்கு நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. அதைவிட இன்னும் இந்த ஏற்பாட்டோடு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களுடைய இயக்கத்தின்

சார்பிலேயே ஒரு திட்டத்தை அறிவித்து அந்தத் திட்டத்தின் மூலமாகவும், இதயம் காப்போம் திட்டத்தின் மூலமாகவும் இன்றைக்கு ஏழையெளிய மக்களுக்கு நாங்களே எங்களுடைய இயக்கத்தின் மூலமாக அந்த நிதியைக் கொடுத்து இன்றைக்கு இலவசமாக அதையும் செய்துகொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினருக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வது, ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு நபர் என்கிற அந்த வகையிலே இன்றைக்கு அதையும் இயக்கத்தின் சார்பாக நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியுடைய எண்ணத்தை, அந்த உள்ளத்தை புரிந்துகொள்ள வேண்டும்.

இருதய நோய் இன்றைக்கு அதிகமாக ஏற்படுகிறது. எனவே மருத்துவமனைகளிலே அதிகப்படியான அறுவை சிகிச்சை செய்துகொள்ள முடியும் என்பதற்காகத்தான் இப்படி தனியார் மருத்துவமனைகளை நாங்கள் ஊக்குவித்து இருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்கள் இங்கே பேசுகிறபோது சொன்னார்கள். எத்தனை பேருக்கு அப்படிச் செய்து இருக்கிறீர்கள், நிதி தாமதமாக வருகிறது என்று சொன்னார்கள். குறிப்பாக, இந்த அறுவை சிகிச்சையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அம்மா அவர்கள் நேரடியாக—பத்திரிகைகளிலேகூட நீங்கள் பார்த்து இருப்பீர்கள்—நிறைய பேரை அவர்கள் நேரடியாக வரவழைத்து அவர்களுடைய கையாலேயே அந்த நிதி உதவி வழங்குகிறார்கள். எங்களுக்கு வருகிற எந்தக் கோப்புகளையும் தாமதமின்றி அந்தத் தொகையை வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே இந்த ஆண்டு மட்டும் 351 பேருக்கு அறுவை சிகிச்சைக்காக நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ. 1,06,11,589 இன்றைக்கு வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துகளையும் நாங்கள் ஏற்று, இன்றைக்கு அதிக அளவிலே மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலே இதுபோன்ற வசதிகளை Operation Theatre-களில் விரிவுபடுத்துவது, இன்னும் கூடுதலாக Operations செய்கிற அளவிலே Operation Theatre-களை விரிவாக்கம் செய்வது போன்ற அந்தப் பணிகளை நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம். முடிந்த அளவுக்கு அரசு மருத்துவமனைகளிலே அதிகப்படியான அறுவை சிகிச்சை செய்வதற்கு புரட்சித் தலைவி அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறையாகச் சொல்லவில்லை. ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறேன். ஏனென்றால், தனியார் மருத்துவமனைகளிலே அதிக அளவிலே பணம் கேட்கிறார்கள். பள்ளி மாணவர்கள் நலத் திட்டத்தில் கடந்த ஆண்டு 10.23 சதவீதம் பல் சொத்தை என்று கணக்கு எடுக்கப்பட்டது. இந்த ஆண்டு 10.56 சதவீதம் ஆகவும், வயிற்றுப் பூச்சி 8.72 என்பது 8.97 சதவீதமாகவும், சுவாசக் கோளாறு 8.63 ஆக இருந்தது 10.53 சதவீதமாகவும் முறையே 0.33 சதவீதம் 0.25 சதவீதம் 0.90 சதவீதம் அதிகரித்திருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டொரு மணித் துளிகளில் முடித்துக்கொள்ளுங்கள். இன்னும் ஐந்து பேர் பேசி அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

திரு. எச்.எம். ராஜு: முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன். ஆகவே இந்தப் பள்ளி மாணவர்களுடைய திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வருங்காலத்தில் அந்தக் குழந்தைகளுடைய நலத்தைக் காக்கும் வகையில் தயவுசெய்து நீங்கள்...

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைக்குப் பள்ளி மாணவர்களுக்குத் தேவையான ஆரம்பக் கட்ட சுகாதார வசதிகளுக்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் உள்ளபடியே ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். எங்களுடைய துறையை ஆய்வு செய்கிறபோது நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தக் கருத்தை எங்களுக்கு எடுத்துச் சொல்லி, அதாவது personal hygiene என்ற தனிநபர் திட்டம் எந்த அளவுக்கு முக்கியம் என்பதை எங்களுக்கு எடுத்துச் சொல்லி, குறிப்பாக பள்ளிக்கூடத்திலே படிக்கிற அந்தச் சிறார்களுக்கு இதைப் போதிக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் பாடத் திட்டத்திலே இதைச் சேர்க்க வேண்டும். ஒழுங்காக பல் துலக்க வேண்டும். நகங்களை வெட்ட வேண்டும். அவர் சொன்னது, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எங்களுக்குச் சொன்னது, நகங்கள் சரியாக வெட்டுவதில்லை. நகங்களை வெட்ட வேண்டும். அதேபோல் தினமும் பல் துலக்க வேண்டும். அதேபோல் வெறுங் காலுடன் நடக்கக் கூடாது. குளிக்க வேண்டும். அதேபோல் சுத்தமாக இருக்க வேண்டும். சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதையெல்லாம் சொல்லி, அந்தச் சிறார்களுக்கு இது போன்ற நல்ல

பழக்க வழக்கங்களை சிறு வயதிலேயே ஊட்ட வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களுக்கு எடுத்துச் சொல்லி இப்பொழுது அதற்கான...

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் சொன்னது பெரியோர்களுக்கும் பொருந்தும்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: அதற்கான பாடத் திட்டங்களையே பள்ளி மாணவர்களுக்கு சேர்க்கச் சொல்லி எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்திரவிட்டிருக்கிறார்கள். இப்போது பாடத் திட்டம் அதற்குத் தகுந்தாற்போல் மாற்றப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுநீரகம் விற்பனை என்பதை நாம் தினமும் பத்திரிகையில் பார்க்கிறோம். ஏமாற்றிவிட்டு பணத்தை வாங்கியவர்களும், மருத்துவர்களும் அவர்களை ஏமாற்றுகிறார்கள். கமிஷன் ஏஜென்ட்கள் எல்லாம் இந்தத் துறையிலே இருக்கிறார்கள். தயவுசெய்து இதை எந்த அளவுக்கு நிறுத்த முடியுமோ அதற்கான ஏற்பாட்டை நமது அரசு செய்ய வேண்டும்.

அரசு மூலிகை வாரியம் அமைத்திருப்பதற்கு நல்வாழ்த்துகளைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே மாதிரி பிரசித்தி பெற்ற மரங்கள் எல்லாம்....

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுநீரக அறுவை சிகிச்சை செய்வதிலே சில தவறுகள் நடைபெற்று வருவதாகச் சொன்னார்கள். உள்ளபடியே ஒருவருடைய சிறுநீரகத்தை இன்னொருவருக்குக் கொடுக்கிறபோது இவரும் பாதிக்கப் படுகிறார். அவருக்கும் முழு பயன் கிடைப்பதில்லை. இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் இதுபோன்ற தவறுகள் நடக்கக்கூடாது. முடிந்த அளவுக்கு இதுபோன்ற குறைபாடுகள் களையப்பட வேண்டும் என்பதற்காகத்தான் புது அறிவிப்புகூட அறிவிக்க இருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சிறுநீரகக் கோளாறினாலே கஷ்டப்படுகிற நோயாளிகளுக்கு டயாலிசிஸ் சிகிச்சை அளிக்கிற வகையிலே ஒவ்வொரு மாவட்ட மருத்துவமனைக்கும்—29 மாவட்டங்களிலே இருக்கிற அனைத்து மாவட்ட மருத்துவமனைகளுக்கும், ஒரு மருத்துவமனைக்கு இரண்டு டயாலிசிஸ்

மிஷின்கள் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே அறுவை சிகிச்சை செய்வதைத் தடுப்பதற்காக, தவிர்ப்பதற்காக இந்த முறையைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லி இப்போது ஒவ்வொரு மாவட்ட மருத்துவமனைக்கும் இரண்டு டயாலிசிஸ் மிஷின்கள் கொடுப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அது விரைவிலே வழங்கப்படும். அப்படி வருகிறபோது இதுபோன்ற குறைபாடுகள் தவிர்க்கப்படும்.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அரசு மூலிகை வாரியத்தின் மூலமாக பிரசித்திபெற்ற சின்கோனா மரங்கள், அதன் மூலமாக எடுக்கப்படும் குனைன் என்ற மருந்து மலேரியா மற்றும் குடும்பக்கட்டுப்பாட்டுக்கு அதிக அளவில் பயன்படுகிறது. சின்கோனா மரங்கள் நீலகிரி மாவட்டத்தில் அதிக அளவில் இருக்கின்றன. ஆகவே அரசு மூலிகை வாரியம் இதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

டேனிடா திட்டம் 8 மாவட்டங்களுக்கு மட்டும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மற்ற எல்லா மாவட்டங்களுக்கும் டேனிடா திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

500 புதிய மருத்துவர்களை அரசு அமர்த்துவது என்பது ஒரு நல்ல செய்தி. நீலகிரி மாவட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மருத்துவமனைகளை வந்து பார்த்தார்கள். அங்கே எங்களுக்கு மருத்துவர்களே வருவதில்லை. விடுப்பில் சென்றுவிடுகிறார்கள். மகப்பேறு மருத்துவர்கள் 5 பேர் இருக்க வேண்டிய சேட் அரசு மருத்துவமனையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருவரைத்தான் பார்த்தார்கள். படித்து முடித்துக்கொண்டிருக்கும்போதே அவர்களை தேர்வாணையத்தின் மூலம் பணி அமர்த்துகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்த 500 புதிய மருத்துவர்களை அமர்த்தும்போது நீலகிரி மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து தயவுசெய்து எங்களுக்கு அந்த மாவட்ட மக்களுடைய நீண்டநாள் குறைகளைத் தீர்க்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்பை அறிவித்திருந்தார்கள், கோவை மருத்துவக்

கல்லூரி மருத்துவமனையிலிருந்து இருதயம், சிறுநீரகம், நரம்பியல், புற்றுநோய், சர்க்கரை, தோல் சம்பந்தப்பட்ட விஷேச மருத்துவ அதிகாரிகள் 90 கிலோமீட்டர் தூரம் உள்ள ஊட்டிக்குச் சென்று அங்கே நோயாளிகளையும், உடல் நலம் குன்றியவர்களையும் பார்க்க வேண்டுமென்று. ஆனால் அதிகாரிகள் அதைச் சரியாக follow-up செய்வதில்லை. தயவுசெய்து அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில் துணை இயக்குநர் இடம் காலியாக இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது.) தலைவர் அவர்களே, இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு மணித்துளியில் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. எச்.எம். ராஜு: ஆகவே மார்பகப் புற்றுநோய் இருப்பதைக் கண்டுபிடிக்க Mammography Unit ஒன்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவை. 'Headquarters-ல் எல்லா மாவட்டங்களுக்கும் M.R.I. Scan வசதி தேவை. கல்லீரல், கர்ப்பப்பை, கணையம், சிறுநீரகம் போன்றவற்றில் கட்டிகள் உள்ளதைக் கண்டுபிடிப்பதற்கு Ultra Sonogram கருவியை ஊட்டிக்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஆர். கோவிந்தசாமி. இன்னும் 5 பேர் பேச வேண்டும். திரு. ராஜு, முடித்துவிடுங்கள்.

திரு. எச்.எம். ராஜு: மன நோயாளிகளுக்கு ஒரு தனிப் பிரிவு கேட்டுக்கொண்டிருக்கிறோம். கண் தானப் பிரிவு என்பது மிகவும் முக்கியமான ஒரு பிரிவு. தயவுசெய்து கண்தானப் பிரிவை எங்களுக்கு அமைத்துத் தர வேண்டும். இரத்த வங்கிகள் இன்னும் திருப்பத்தூர், வாலாஜாபேட்டை, குன்னூர் போன்ற இடங்களில் திறக்கப்படவில்லை. C.T. Scan எடுத்த அந்தப் படங்களை ஏழையெளிய மக்களுக்குத் தருவதில்லை. தலைவர் அவர்களே, 3 வருடங்களுக்குப் பின் அது குப்பைத் தொட்டிக்குப் போகிறது. அந்தப் படங்களையும், அந்த அறிக்கைகளையும் தயவுசெய்து அவர்களிடம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம். நன்றி வணக்கம், வாழ்க பாரதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

[2003 ஏப்ரல் 3

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மருத்துவ மானியத்தின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கும் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் ஐயா அவர்களுக்கும், டாக்டர் சின்ன ஐயா அவர்களுக்கும், திருமிகு ஜி.கே. மணி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) எங்களைப் பொறுத்த அளவில், எங்களது மக்கள் காவலர், இனமான காவலர், மனித நேயப்பற்றாளர், தமிழினப் போராளி டாக்டர் ஐயா அவர்கள்தான் இதய தெய்வம்.

பிற்பகல் 12-15

தமிழகம் வளர்கிறது. ஆனால் தமிழர்கள், குறிப்பாக ஏழை எளிய மக்கள் வளரவில்லை என்ற ஒரு சமூக நீதியற்ற நிலை, தமிழக மக்களும், தமிழகப் பொருளாதாரமும் ஒன்றாக வளர வேண்டும். எல்லோரும், எல்லாமும் பெற்று மன மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்பதைத்தான் எங்களது பாட்டாளி மக்கள் கட்சி விரும்புகிறது. இந்த ஆண்டு, வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்க் கணக்கில், மொத்த வரவுகள் ரூ.22,665.90 கோடியும், மொத்த செலவுகள் ரூ.26,559.37 கோடியும் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இதில், பற்றாக்குறையாக ஏறக்குறைய ரூ.3,933.47 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்தப் பற்றாக்குறை சென்ற ஆண்டைவிடக் குறைவாக இருக்கிறது. இது வரவேற்கத்தக்க அம்சமாகும். இந்த நிதியாண்டில் மொத்த செலவினங்களில், மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூ. 1,380.48 கோடி மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது 5.19 சதவிகிதம்தான். பெருகிவரும் மக்கள் பெருக்கத்தைக் கருத்தில் கொண்டும், சுகாதார பாதுகாப்பின் முக்கியத்துவம் கருதியும், இந்த ஒதுக்கீட்டை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்தத் தொகை குறைவானதாகத்தான் உள்ளது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பழமொழி சொல்வார்கள். செஞ்சிக்கோட்டை ஏறியவர்கள் எல்லாம் தேசிங்கு ராஜா அல்ல, மீசை வைத்தவர்கள் எல்லாம் கட்டபொம்மன் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: அது எங்களுக்குப் புரியும். உங்களுக்கும் புரியும் என்று நினைக்கின்றேன். அப்புறம் பேசிக்கொள்வோம். அது பற்றி கடைசியில் பேசிக்கொள்வோம். தனி நபர் மக்கள் செலவு...

2003 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களுடைய உரிமையைக் காத்து, தமிழர்களுக்காக வாழ்கின்ற ஒப்பற்றத் தலைவர், இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா ஒருவர் மட்டும்தான் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: நாங்களும் அப்படித்தான். இரண்டு கோடி வன்னிய மக்களுக்கு மட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகப் போராடி 20 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை வாங்கிக் கொடுத்த எங்களது மக்கள் காவலனை நாங்கள் தெய்வமாகக் கருதுகிறோம்.

தனி நபர் மக்கள் செலவு தற்போதுள்ள ரூ. 230/-லிருந்து...

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் கட்சியை நடத்திக்கொண்டு எனக்கு மக்கள் பணியைத் தவிர, நான் சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக எந்தப் பதவிக்கும் செல்லமாட்டேன் என்று சொல்லக்கூடிய ஒப்பற்ற தலைவரை நாங்கள் இதய தெய்வமாக ஏற்றுக்கொண்டு இருக்கிறோம்.

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் ஒருவர் தன் குடும்பத்தை அரசியலுக்குக் கொண்டுவருகிறார்களோ, அவர்கள் வந்து பொதுநலவாதியாக இருக்க முடியாது. மக்களுக்காகவே வாழ்கின்ற ஒரே தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவிதான். தமிழ்நாட்டில் எந்தத் தலைவருக்கும் அந்தத் தகுதி கிடையாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் கோவிந்தசாமி, மானியக் கோரிக்கைக்கு வாருங்கள்.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மானியக் கோரிக்கையில்தான் பேசுகின்றேன். இடையிலே குறுக்கிட்டு, குறுக்கிட்டு ஒவ்வொரு நிமிடத்தையும், ஒவ்வொரு வினாடியையும் அமைச்சர் பெருமக்கள் வீணாக வீணடிக்கின்றார்கள். அவர்களிடம் குறுக்கிட வேண்டாம் என்று சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

2001 புள்ளிவிவரப்படி மொத்த டாக்டர்களின் எண்ணிக்கை 8719, மொத்தம் மக்கள்தொகை 6.2 கோடி, 7110 பேருக்கு ஒரு மருத்துவர் உள்ளார். மொத்தம் செவிலியர்களின் எண்ணிக்கை 19,835;

மக்கள்தொகைக்கு 3126 பேருக்கு ஒரு நர்ஸ் வீதம் உள்ளனர். தமிழ்நாடு முழுவதும் மருத்துவமனையிலுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 49,057. மக்கள் 1264 பேருக்கு, ஒரு படுக்கை உள்ளது. WHO-World Health Organisation திட்டப்படி 600 பேருக்கு ஒரு மருத்துவரும், ஒரு மருத்துவப் படுக்கையும் இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அதுபோலவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 100 Primary Health Centres—ஆரம்ப சுகாதார நிலையங்கள், இந்த ஆண்டு 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்தப்படும் என்று கூறியிருக்கின்றார்கள். எந்த அடிப்படையிலே இந்த ஆண்டு 35 PHCs உயர்த்தப்படும், அதனுடைய அளவுகோல் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, தலைமை மருத்துவமனைகளிலும், மாவட்டத் தலைநகரிலுள்ள மருத்துவமனைகளிலும், மூச்சுத் திணறல் ஏற்படும்போது உபயோகப்படுத்தக்கூடிய வெண்டிலேட்டர்ஸ் என்று சொல்லக்கூடிய கருவிகள் அதிகம் இல்லை. இதைக் கண்டிப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சார்ஸ் வியாதியைப்பற்றி அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும், மற்ற நண்பர்களும் பேசினார்கள். தமிழக அரசும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் அதற்குண்டான வெகு தீவிரமான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்ததை நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம்.

'சார்ஸ்' வியாதி, Severe Acute Respiratory Syndrome என்ற இந்த வியாதி கரோனா என்ற வைரஸால் வருகிறது என்று W.H.O. கண்டுபிடித்திருக்கிறது. இது அதிகமாக உள்ள நாடுகள் சிங்கப்பூர், கனடா, ஹாங்காங், வியட்னாம் போன்ற அயல்நாடுகள். ஆகையினால், இங்கு இந்த வியாதி பரவுவதற்கு முன்னாலே, தற்போது 10-ஆம் வகுப்பு மாணவர்கள் பரிட்சை எழுதிக்கொண்டிருக்கிறார்கள். எல்லாம் அரசுத் தேர்வுகள். அவர்களைத் தொந்தரவு செய்ய வேண்டாம். மற்ற மாணவர்களுக்கு, 9-வது வகுப்பு வரையிலும் உள்ள மாணவர்களுக்கு, எல்லோருக்கும் 'pass' கொடுத்துவிட்டு, விடுமுறை விடலாம் என்ற ஒரு எண்ணத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போலவே, தமிழ்நாட்டில் தனியார் மற்றும் அரசு பொறியியல் கல்லூரிகள் 240 இருக்கின்றன. அதில் 11 அரசுக் கல்லூரிகள், 229 தனியார் பொறியியல் கல்லூரிகள். அந்தத் தனியார் பொறியியல்

கல்லூரிகள் எவ்வளவுதூரம் பணம் கறக்கின்றார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

அதைப்போலவே, தனியார் மருத்துவக் கல்லூரிகள் 2 அல்லது 3 இருந்தாலும்கூட ஒரு மருத்துவக் கல்லூரியில் இடம் பிடிப்பதற்கு சாதாரணமாக 35 இலட்சம் ரூபாயிலிருந்து 40 இலட்சம் ரூபாய் வரை கறக்கின்றார்கள். மேற்கொண்டும் பணம் கொழிக்கும் இந்தத் தொழிலை—தனியார் மருத்துவக் கல்லூரிகளை எந்தக் காரணத்தை முன்னிட்டும் அரசு அனுமதிக்கக் கூடாது என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

பிற்பகல் 12-20

அதைப்போலவே, இன்றைய செய்தித் தாளிலே Post-Graduate Education-க்கு கொடுக்க வேண்டிய கட்டணத்தை இரண்டு மடங்காக, மூன்று மடங்காக அதிகரித்திருக்கின்றீர்கள். ஏழை எளிய மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் Post-Graduate Education கிடைத்துப் படிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இவ்வளவு கட்டணத்தை கண்டிப்பாக அவர்களால் கட்ட முடியாது என்பதையும் கருத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, T.V.-யை திறந்தாலே, "எய்ட்ஸ் வியாதியா, 100 பங்கு குணம் கிடைக்கும்" என்றெல்லாம் வருகிறது. அதைப்போலவே காந்தப் படுக்கைகள், கவர்ச்சியான காந்தப் படுக்கைகள், போலிச் சாமியார்கள் என்றெல்லாம் விளம்பரங்கள் வரக்கூடிய இந்தக் காலக்கட்டத்திலே நமது மக்கள், ஏழை எளிய மக்கள் போலிச் சாமியார்களையும், போலி டாக்டர்களையும், இதைப்போன்ற காந்தப் படுக்கைகளையும் நம்பி தங்களது வாழ்வைச் சீரழித்துக்கொள்கின்றார்கள். இதற்கு முக்கியமான காரணம், தனியார் மருத்துவமனைகளிலே கிடைக்கக்கூடிய மருத்துவ வசதிகள் அரசாங்க மருத்துவமனைகளில் கிடைக்கவில்லையா என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது. ஆனால்...

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கமாக தமிழ்நாடு அரசைக் குறை கூறுகிற பிரபலமான அகில இந்திய வாரப் பத்திரிகைகள் எல்லாம் பாராட்டி எழுதியிருக்கின்றன. தமிழ்நாட்டில் மட்டும்தான் தனியார் மருத்துவமனைகளில் கிடைக்கின்ற மருத்துவ சிகிச்சைக்கு நிகராக அதே அளவில் சிறப்பாக, தமிழ்நாடு அரசு நடத்தும் மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது என்று பாராட்டி எழுதியிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் போலி டாக்டர்களை ஒழிப்பதற்கு Quackery Eradication Programme என்ற ஒரு தீவிர திட்டத்தை நடைமுறைப்படுத்தி, போலிச் சாமியார்களையும், போலி டாக்டர்களையும் ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம் அனைவருடைய கருத்துகளும், இந்திய நாட்டின் ஜனாதிபதிக்கும், கிராமத்திலுள்ள குப்பன், சுப்பனுக்கும் ஒரே மாதிரி வைத்தியம் கிடைக்க வேண்டும் என்பதுதான். இதில் எந்தவித மாறுபாடும் கிடையாது...

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்திலே இருக்கின்ற குப்பன், சுப்பனோடு, இந்தியாவின் மேதகு ஜனாதிபதி அவர்களும், துணை ஜனாதிபதி அவர்களும் மருத்துவ சிகிச்சைக்காக இங்கே தமிழ்நாட்டுக்குத்தான் வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைக் கருத்தில்கொண்டு மருத்துவம் சார்ந்த பணியாளர்களை ஊக்குவிக்கவும், கௌரவிக்கும் வகையிலும் ஆண்டுதோறும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 'உயிர் காத்த உத்தமர்' என்ற புரட்சிகர விருதைக்கூட நல்லுள்ளம் படைத்த தொண்டர்களுக்கு வழங்கலாம் என்ற ஓர் ஆலோசனையைக் கூற விரும்புகின்றேன்.

அதைப்போலவே, தமிழ்நாட்டில் தற்போது கண் மருத்துவம், சர்க்கரை நோயைக் கண்டுபிடிக்கும் முகாம், இதயம் காக்கும் திட்டங்கள் என்றெல்லாம் பலவகையான திட்டங்கள் மக்களுக்குப் பயனுள்ள வகையில் நடந்துகொண்டிருக்கின்றன. நான் அதைக் குறை கூறவில்லை. ஆனால் அதோடு சேர்த்து, Indian Medical Association இந்திய மருத்துவக் குழு டாக்டர்களையும் அதில் சேர்த்து, அரசு சாரா அமைப்புகள் மூலம் அவர்களையும் இணைத்து அந்தத் தொண்டினை மேலும் தீவிரப்படுத்தலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கருவறையிலிருந்து கல்லறை வரை சில்லறையாக இருக்கக்கூடிய இந்தக் காலக்கட்டத்தில் மருத்துவ ஊழியர்களும் மற்ற அரசு ஊழியர்களும் அதற்கு விதிவிலக்கல்ல. அதற்கு மாண்புமிகு தமிழக

முதல்வர் அவர்களும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்புத் தொழில்நுட்பக் கருவிகள், சிறந்த வல்லுநர்களைக் கொண்ட ஒரு மேல்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர், இன்னும் இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் ஒரு மருத்துவர் என்ற முறையிலே 5 நிமிடங்கள் கூட்டித் தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். *(சிரிப்பு)*

பிற்பகல் 12-25

ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பு தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்ட, சிறந்த வல்லுநர்களைக் கொண்ட மேல் மருத்துவ மருத்துவமனைகள் referral Hospitals அமைக்கப்பட வேண்டும்.

தொலை சாதன மருத்துவ சிகிச்சைகள் மூலமாக தொலைதூர மையங்களில் உள்ள நோயாளிகளுக்குத் தரமான மருத்துவ ஆலோசனைகளையும், சிகிச்சைகளையும் தர வழிவகை செய்ய வேண்டும்.

பெண் இனத்தையே அழித்துவிடும் வகையில் மருத்துவ தொழில்நுட்ப உதவியுடன் பெண் சிசுக் கொலைகள் அதிக அளவில் நடந்தேறி வருகின்றன. இதனைத் தடுத்து நிறுத்திட சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே கொடிய நோயான பாம்புக்கடி, வெறி நாய்க்கடி போன்றவற்றிற்கு மருந்துகள் எல்லா மருத்துவமனைகளிலும் கிடைப்பதை நானும்...

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் 5 மணித்துளிகள் வேண்டுமென்று கேட்டார். 5 மணித்துளிகள் என்று கேட்டுவிட்டு அறுவை சிகிச்சை செய்து கொண்டு இருக்கக்கூடாது என்று அவரைக் கேட்டுக்கொள்கிறேன். *(சிரிப்பு)*

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரே ஒரு மருத்துவர் என்பதால் இதைக் கூற விரும்புகிறேன். மிகவும் அறுவையாக சிகிச்சை செய்யக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லக் கூடியவை பயனுள்ளவையாகத்தான் இருக்கும் என்று எண்ணுகிறேன். அந்தவகையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்வது என்றால் அதற்கு நாங்களும் ஒத்துழைப்புத் தர தயாராக இருக்கின்றோம்.

அதைப்போலவே தமிழகத்தில் Anti-snake venom, Anti-Rabbies Vaccine, நாய்க்கடி, பாம்புக்கடிக்கு ஊசிகள், மருந்துகள் Primary Health Centres எங்கும் கிராமங்களில் எல்லாம் கிடைக்கின்றன. அதற்காக தமிழக அரசை நான் மனதாரப் பாராட்டுகிறேன். ஆனால் குறிப்பாக வெறி கொண்ட நாய்க்கடிகளுக்கு Anti-Rabbies Vaccine சினிமாவில் காட்டுவது போல தொப்புளைச் சுற்றி ஊசிகள் போடுவது—எங்கள் விருத்தாசலம் பக்கத்திலே நாச்சியார்பட்டினம் என்ற கிராமத்தில் ஒரே நாளில் ஒரு நாய் 7 பேரைக் கடித்தது. அந்த 7 பேரும் அது வெறிகொண்ட நாய் என்று தெரிந்தவுடன் அந்த நாயை அடித்துக் கொன்றுவிட்டார்கள். 7 பேரும் அரசு மருத்துவமனைகளுக்குச் சென்று A.R.V. —Anti-Rabbies Vaccine—அது குதிரை இரத்தத்தின் சீரத்திலிருந்து எடுக்கப்படுகிறது—அந்த ஊசியை தொப்புளைச் சுற்றி 14-லிருந்து 20 ஊசிகள் போட்டுக்கொண்டார்கள். 4 மாதங்கள் கழித்து அதில் இருவர்..

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் Anti-Rabbies Vaccine பற்றி இங்கே குறிப்பிட்டார். தொப்புளைச் சுற்றி 14 ஊசிகள் போடுவது என்பது மிக மிகப் பழமையான முறை. இப்போது அது கைவிடப்பட்டுள்ளது. இப்போது இன்னும் Modern-ஆன vaccine வந்திருக்கிறது. இத்தனை injections இப்போது போடுவதில்லை.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த A.R.V. injections, 14 injections போட்டும் 4 மாதங்களுக்கு முன்னாலே 2 வார இடைவெளியில் இருவர் இறந்துவிட்டார்கள். மீதம் உள்ள 5 பேர் Hydrophobia என்ற வியாதி முற்றி இறந்து விட்டார்கள். Hydrophobia என்ற வியாதி முற்றிய பிறகுதான் தெரியும். அது

வெறிகொண்ட நாய் கடித்த உடனே தெரியாது. இதிலே Hydrophobia வியாதி வந்தவுடன் மீதமுள்ள பேர்க்கு அதிக விலையுள்ள இன்ஜெக்ஷனான Human Diploid Cell Vaccine என்ற அந்த மருந்துகளை தமிழக அரசு கண்டிப்பாக கொடுத்திருக்க வேண்டும். இனிமேலாவது பல விலை-மதிக்கத்தக்க உயிர்களைக் காப்பாற்றுவதற்காக Human Diploid Cell Vaccine-ஐ கண்டிப்பாக சப்ளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஒரு மணித்துளியில் பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) முக்கியமானதுதான். மற்றவற்றை consulting fees-ஐக் கொடுத்த பிறகு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கோவிந்தசாமி அவர்கள் A.R.V. பற்றி இங்கே சொன்னார்கள். டாக்டர் என்ற முறையிலே அவருக்கு நன்றாகத் தெரியும். The Neural Tissue Vaccine என்பது விலங்குகளிலிருந்து எடுத்து தயார் செய்யப்படுவது. எனவே இப்போது மத்திய விலங்குகள் தடைச் சட்டத்தின்கீழ் விலங்குகளை வதைக்கக் கூடாது என்ற காரணத்தினாலே அந்த முயற்சி கைவிடப்பட்டு, இப்போது T.C.V. Tissue Culture Vaccine தயாரிக்கப்படுகிறது. அது அவருக்கே தெரியும். அதுபோல N.T.V.-ஐ விட T.C.V. 5 மடங்கு விலை அதிகம். N.T.V. Vaccine இப்போது அதிகமாகக் கிடைக்கவில்லை என்ற அந்தக் காரணத்தினாலே T.C.V.-ஐ விலை அதிகமாகக் கொடுத்து கூட அரசாங்கம் தங்குதடையின்றி அனைத்து மாவட்ட/வட்டார மருத்துவமனைகளுக்கு இப்போது வழங்கி வருகிறது. அந்த வகையிலே அதிக விலை என்று இந்த அரசு பார்ப்பதில்லை. அந்த வகையில் இந்த மருந்தை அதிக விலை கொடுத்து வாங்கித்தான் நாம் இன்று மருத்துவமனைகளுக்கு வழங்கிக்கொண்டிருக்கிறோம்.

பிற்பகல் 12-30

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவத் துறை ஒரு வியாபாரத் துறையல்ல. உயிர் காக்கும் துறை. அந்த முறையிலே மருத்துவமனையை வர்த்தக மையமாகக் கருதாமல், உயிர் காக்கும் அத்தியாவசியப் பணியாகக் கருதி, அதற்குக் குறைந்த இழுவிசை பட்டியல் 2B-யின்கீழ் மின்சாரக் கட்டணம் வசூல் செய்யக்

கோரி, தமிழ்நாடு இந்திய மருத்துவக் கழகம் சமர்ப்பித்த கோரிக்கையை ஏற்று, இந்த அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதைவிட ஒரு முக்கியமான பிரச்சினை. இரண்டு நாட்களுக்கு முன்னால், மார்ச் 27 பேப்பரில் ஒரு செய்தி வந்திருக்கிறது.

"The centre proposes to set up six state-of-the-art medical institutions on the lines of the All India Institute of Medical Sciences (AIIMS) as part of an exercise to provide quality tertiary care at reasonable cost.

The Union Health Minister, Sushma Swaraj told press persons that the proposed Centres would come up in Bihar, Orissa, Chhattisgarh, Madhya Pradesh, Rajasthan and Uttaranchal and each hospital would have 500 beds and the construction would cost about Rs.387 crores—"

என்றெல்லாம் வந்திருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இந்தத் தரம் வாய்ந்த மருத்துவமனைகள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பூவராகமூர்த்தி, (குறுக்கீடு) இல்லை, அவர்கள் கேட்ட 5 நிமிடங்களும் முடிந்துவிட்டது.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: ஒரேயொரு நிமிடம், ஒரேயொரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் முதலமைச்சர் அவர்களிடத்திலே கேட்ட 5 மணித்துளிகளும் முடிந்துவிட்டது.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: ஒரேயொரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். இந்த மருத்துவமனைகள் தென்னிந்தியாவில் ஏற்படுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமகனாரும் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து எங்களது மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்கள் பிரதம மந்திரிக்கு ஒரு கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறார்கள். அவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர்கள் மீது தேவையில்லாமல் வழக்குகள் போடுவது கண்டிக்கத்தக்கது. அந்த வகையிலே, அருகிலுள்ள கேரளாவிலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பூவராகமூர்த்தி.

•திரு. ஏ. பூவராகமூர்த்தி: மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்குகின்றேன்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு வணக்கம். பெரியாரின் துணிவும், பேரறிஞர் அண்ணாவின் அறிவும், புரட்சித் தலைவரின் ஈகையும் இம்மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற ஆறரை கோடி தமிழக மக்களின் காவல் தெய்வம், 1½ கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் ஒப்பற்ற தலைவி, எங்கள் உயிர் மூச்சு, எங்கள் இதயக் கோவிலில் குடிகொண்டிருக்கும் இதய தெய்வம் அம்மா, சாதாரண தொண்டனான என்னை 1996-ல் அச்சிறுப்பாக்கம் தொகுதியில் அடையாளம் காட்டினீர்கள். 2001-ல் சித்தாமூர் ஒன்றிய மாவட்டக் கவுன்சிலராகவும் வெற்றிபெற வைத்து அகமகிழ்ந்தீர்கள். மீண்டும் 2002-ல் அச்சிறுப்பாக்கம் தொகுதி இடைத் தேர்தலில் என்னை அடையாளம் காட்டி, மாற்றாரின் வஞ்சனைகள், சதிகாரர்களின் சதி வலைகள், துரோகக் கும்பல்களின் படுகுழிகள், நம்பிக்கை துரோகிகளின் துரோகச் செயல்கள் அனைத்தையும் பொடிப் பொடியாக்கி சிங்கமாய் நின்று வெற்றிபெற்ற எங்கள் மாதர் குல மாணிக்கமே! ஏற்றிவிட்ட ஏணியை எட்டி உதைத்து நம்பிக்கை துரோகம் செய்தவர்களுக்கு நற்பாடம் புகட்டிய தாயே!

இவர்கள் அரசியல் அனாதையாக்கப்பட்ட காலக்கட்டங்களில் அரசியல் அங்கீகாரமும், தேர்தல் சின்ன அங்கீகாரமும் வாங்கிக் கொடுத்து,, டெல்லியின் வாசற் கதவுகளைத் திறந்து டெல்லியில் அமர வைத்து அழகு பார்த்த தாயே! இவர்கள் நம்பிக்கைத்துரோகம் செய்தும் மக்கள் மன்றத்தில் நின்றபோது மக்கள் இவர்களை ஒதுக்கித்தள்ளினார்களே! இவர்களின் அரை வேக்காட்டு அரசியல் மக்கள் மன்றத்திற்கு ஒத்துவராது என்று மக்கள் இவர்களைப் புறக்கணித்து எங்களுக்கு என்றும் அம்மாதான் பாதுகாவலர், அம்மாதான் வேண்டும் என்று 2001 பொதுத் தேர்தலிலும், அதற்குப் பின்னாலே அம்மா அவர்களின் ஆண்டிப்பட்டி முதல் சாத்தான்குளம் வரையுள்ள 5 இடைத் தேர்தல்களிலும் வெற்றி மேல் வெற்றி கொடுத்து நல்லாட்சிக்கு அங்கீகாரம் கொடுத்து வருகின்றார்களே, இதுகூட உங்களுக்குப் புரியவில்லையா என்பதை நான் கேட்கவில்லை, மக்கள் கேட்கின்றார்கள்.

2003-2004ஆம் ஆண்டு அம்மா அவர்களின் அரசு கொண்டு வந்து தாக்கல் செய்துள்ள நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்றபோது பாமர மக்களும், ஏழையெளிய மக்களும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களும், மகளிர் சமுதாயம், இன்னும் அனைத்துப் பிரிவு மக்களும் வரவேற்கின்ற பட்ஜெட். மக்களின் வாட்டத்தைப் போக்கி ஏற்றம் காணுகின்ற முத்தான பட்ஜெட்.

கடந்த தி.மு.க. ஆட்சியாளர்கள் கஜானாவைக் காலி செய்து மக்கள் நலத் திட்டங்களைக் கிடப்பில் போட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள். அம்மா அவர்கள் அரசு பதவி ஏற்ற இரண்டாண்டுகளுக்குள் தொலை நோக்குப் பார்வையுடன் மக்கள் முன்னேற்றத்தில் தனிக் கவனம் செலுத்தி, குடிநீர் வசதி, குழந்தைகள் நலம், வறுமை ஒழிப்பு, மக்கள் மேம்பாடு, சமூக முன்னேற்றம், உட்கட்டமைப்பு வசதி, கிராமப்புறச் சாலை மேம்பாடு, வறட்சி நிவாரணம், ஊரக வளர்ச்சித் திட்டம், நெடுஞ்சாலை மேம்பாடு போன்ற அடிப்படை வசதிகளை மேம்பாடு செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அதிக நிதி ஒதுக்கி நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள்.

பிற்பகல் 12-35

அம்மா அவர்கள் செயல்படுத்துகின்ற திட்டங்கள் அனைத்தும் ஏழை எளிய மக்கள் பயன்பெற வேண்டும், முன்னேற்றம் காண வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு அம்மா அவர்கள் நல்லாட்சியைத் தந்துகொண்டு வருகின்றார்கள். அந்தவகையில் ஒளிவுமறைவற்றதும், வெளிப்படையானதும், ஊழலற்றதுமான ஆட்சி முறையை அம்மா அவர்கள் மக்களுக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். அரசு அறிவிக்கின்ற திட்டப் பயன்கள் மக்களுக்கு நேரடியாக எளிதாகக் கிடைக்கின்றது. மத்திய அரசு நமக்குக் கொடுக்க வேண்டிய ரூ.3 ஆயிரம் கோடி மானிய உதவித்தொகையைக் கொடுக்கவில்லை. வெறும் ரூ.254.50 கோடிதான் கொடுத்துள்ளது. மேலும் கடந்த ஆட்சியாளர்கள் பயனற்ற திட்டங்கள் மூலமும், திறமையற்ற ஆட்சியின் மூலமும் கஜானாவைக் காலி செய்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். அம்மா அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும், தொலைநோக்குப் பார்வையுடன் சிக்கன நடவடிக்கையின் மூலமும், நிதி ஆதாரங்களைத் திரட்டி, மக்கள் நலத் திட்டங்களையும் சிறப்பாகச் செயல்படுத்தி வருவதுடன், சிறப்பான ஆட்சியைத் தந்துகொண்டிருக்கிறார்கள். பொறுக்க முடியாத தி.மு.க.-வினர் தினமும் சபையில் குழப்பம் விளைவித்து, குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது போல ஒரு மலிவான அரசியல் ஆதாயத்தைத் தேட

நினைக்கிறார்கள். ஆனால் எங்கள் அம்மா அவர்கள் இலவச மின்சாரத் திட்டத்தை சிறு, குறு விவசாயிகளுக்கும், மற்றுமுள்ள குடிசைவாழ் மக்களுக்கும் தொடர்ந்து தந்துகொண்டிருக்கிறார்கள்.

வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கும், பயிரிடப்பட்டு நஷ்டத்திற்குண்டான விவசாயிகளுக்கும் புன்செய் நிலங்களுக்கும் அவர்கள் நஷ்டத்தை ஈடுசெய்கின்ற வகையில் அவர்களது வாழ்வில் ஒளி விளக்கை ஏற்றுகின்ற வகையில் நிலங்களின் வகைப்பாட்டிற்கு ஏற்பவும், நிலங்களின் தன்மைக்கேற்பவும், ஒரு ஹெக்டேருக்கு 4,000 ரூபாய் எனவும், 2,000 ரூபாய் எனவும், 1,000 ரூபாய் எனவும் நிவாரணமாக அள்ளித் தருகின்ற வள்ளலின் வாரிசாகத் திகழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். ஏழை எளிய மக்களின் பசியைப் போக்குவதற்கு ஒரு குடும்பத்திற்கு 30 கிலோ அரிசியைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஏழை எளிய மக்கள் பசியார உண்டு மகிழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

உலகம் போற்றும் தொட்டில் குழந்தைகள் திட்டம் தொடர்ந்துகொண்டிருக்கின்றது. எங்கள் அம்மா கொண்டுவந்த இந்த அற்புதமான திட்டத்தினால், பெண் சிசு வதை தடுக்கப்பட்டிருக்கின்றது. ஏழை மக்களின் வாழ்வில் ஒளி தீபம் ஏற்றிவைத்த தாயே, பார் போற்றும் எங்கள் அன்னையே, உமக்கு நிகர் நீங்கள்தான் தாயே; அம்மா, நீங்கள் மக்களுக்காக வாழ்ந்துகொண்டிருக்கின்றீர்கள். அவர்களோ, அவர்கள் பிள்ளைகளுக்காக வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

அம்மா, நீங்கள் புதிய வீராணம் திட்டத்தை அறிவித்து, சென்னை நகரின் தாகத்தைத் தீர்க்கப்போகின்றீர்கள். அவர்களோ, வீராணம் திட்டத்தில் ஊழல் செய்து, அவர் குடும்பத்தை மேம்படுத்தியவர்கள். ஊழல் பெருச்சாளிகள் என்று நீதிமன்றத்தால் அடையாளம் காட்டப்பட்டவர்கள்.

ஆதிதிராவிடப் பெண்கள், ப்ளஸ் 1, ப்ளஸ் 2 படிக்கின்றவர்களுக்கு நீண்ட நெடிய தூரம் நடந்து சென்று கஷ்டப்பட்டு படிக்கின்ற நிலை அறிந்து, அம்மா அவர்கள் இலவச சைக்கிள் திட்டத்தைக் கொண்டுவந்து, சைக்கிள்களைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். இதனால் லட்சோபலட்சம் ஆதிதிராவிடப் பெண்கள் பயனடைகின்றார்கள். மேலும், பட்ட மேற்படிப்பு வரை இலவசக் கல்வியைக் கட்டாயமாக்கி உள்ளார்கள்.

சென்னை, கூவம் நதிக் கரையில் உள்ள குடிசைவாழ் மக்களுக்கு மாற்று இடங்கள் கொடுத்து, 8 ஆயிரம் பேர்களுக்கு [illegible]மாக

தமிழ்நாடு சட்டமன்ற நூலகம்
184531

வீட்டுமனைப் பட்டாக்களையும் மற்றும் வீடுகள் இவையெல்லாம் வழங்கியது அம்மா அவர்களின் சாதனைகள். கூவத்தில் படகு விடுகிறோம் என்று சொன்னவர்கள், சென்னை மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைக் கண்டுகொள்ளாமல் சென்றுவிட்ட அவலம்தான் அவர்களின் சாதனைகள்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலனுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஏறக்குறைய ரூ.1,380.48 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 1,411 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. தற்போது கிராமப்புறங்களில் 8,682 துணை சுகாதார நிலையங்கள் உள்ளன. இவற்றில் 6,062 துணை சுகாதார நிலையங்களுக்கு கட்டட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 385 புதிய துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்டப்படும் என்கின்ற அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வை, இவ்வளவு கடுமையான நிதி நெருக்கடியிலும், இருக்கின்ற நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தி இவ்வளவு பெரிய சிறப்பான செயல்திட்டத்தை நடத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவு வழங்கியுள்ளார்கள். மேலும், அடுத்த ஆண்டில் 300 துணை சுகாதார நிலையங்களுக்கு கட்டடம் கட்டித் தருவதாக அம்மா அவர்கள் நிதிநிலை அறிக்கையில் கூறியிருக்கின்றார்கள். மேலும், மாண்புமிகு அம்மா அவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறையில் தனிக் கவனம் செலுத்தி, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவ வசதிகளை வலுப்படுத்துவதற்கு ரூபாய் 2.5 கோடி செலவிலும், அடுத்த ஆண்டு ரூபாய் 6.20 கோடி செலவிலும் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்கு வகை செய்துள்ளார்கள். மேலும் மகளிர் நலம், குழந்தைகள் நலம், பேறு கால இட வசதி செய்வதற்கு ரூபாய் 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

பிற்பகல் 12-40

மேலும், தமிழ்நாட்டில் 385 ஒன்றியங்களில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 30 படுக்கைகள் கொண்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைவதற்கு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். முதற்கட்டமாக 100-க்கும் மேற்பட்ட 30 படுக்கைகள் கொண்ட சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு அம்மா அவர்கள் வழிவகை செய்துள்ளார்கள். மேலும், 28 மாவட்டங்களில் உள்ள 35 தலைமை மருத்துவமனைகளில் C.T. Scan வசதிக்கு ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார்கள்.

30 படுக்கைகள் கொண்ட 24 மணி நேரமும் செயல்படக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தி, கிராமப்புற மக்களுக்குப் பயன்படும் வகையில் சிறு விபத்துகளுக்கு சிகிச்சை அளிக்கவும், தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் நலம் காக்கவும், தொற்று நோய்களைத் தடுப்பதற்கும், மக்களுக்கு சுகாதாரக் கல்வி அளிப்பதற்கும், தாய், சேய் இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கும், அனைத்துத் தாய்மார்களுக்கும் மருத்துவமனைகளில் பிரசவம் பார்ப்பதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது. இதனால் மாவட்ட தலைநகர் மருத்துவமனைகளுக்கும், வட்டார தலைமை மருத்துவமனைகளுக்கும் 40 அல்லது 50 மைல் தூரம் சென்று மருத்துவ வசதிகள் பெறுவதற்கு ஏற்படும் காலதாமதமும், பண விரயமும் தவிர்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் வாயிலாக கிராமப்புறப் பெண்கள், குழந்தைகள் மற்றும் பொது மக்களுக்குச் சிறப்பான மருத்துவ வசதி கிடைக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்தில், மருத்துவ ஊர்தி வசதியுடன் செயல்படுவதற்கு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், ஒவ்வொரு ஆண்டும் போலியோ சொட்டு மருந்து முகாம்கள் நடத்துவதால் இளம்பிள்ளை வாத நோயை முற்றிலும் ஒழிப்பதற்கு முனைப்புடன் மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், தொழுநோய், காசநோய், யானைக்கால் நோய் போன்ற நோய்களை முற்றிலும் ஒழிப்பதற்கும், அம்மா அவர்கள் அரசு பாடுபட்டுக்கொண்டு வருகிறது.

மேலும், நாட்டில் பெருகிவரும் மக்கள்தொகையால் உலக சவாலாக இருக்கின்ற எய்ட்ஸ் நோயைக் கண்டறிந்து, அந்நோய் பரவாமல் தடுக்கும் வகையில், அந்நோய் பரவுவதற்குக் காரணமான விபசாரத்தில் ஈடுபடுபவர்கள், லாரி ஓட்டுநர்கள், ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்கள் போன்றவர்களைக் கண்டறிந்து, மருத்துவ சிகிச்சை அளிப்பதன் மூலமும், மக்களுக்கு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் செய்வதன் மூலமும், எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு நம்முடைய அம்மா அவர்களின் அரசு மிகச் சிறப்பான செயல் திட்டத்தைத் தீட்டி, கட்டுப்படுத்துவதற்கு வழிவகை செய்துள்ளார்கள். இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்றபோது அம்மா அவர்கள் மருத்துவத் துறைக்கு மிகச் சிறப்பான செயல் திட்டங்களை வகுத்து சிறப்பாகச் செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

மேலும், என் தொகுதியின் சார்பில் சில கோரிக்கைகளை அம்மா அவர்களின் பொற்பாதங்களில் வைக்கின்றேன். என் தொகுதிக்கு 3 நகரப் பேருந்துகளும், கிளியாறு ஆற்றின் குறுக்கே தண்டரைப்பேட்டை கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பாலம் மற்றும் மடுவு அமைத்துக் கொடுக்க வேண்டுமாயும், பொலம்பாக்கம் தொழுநோய்

நிலையத்தில் கடந்த 5, 6 ஆண்டுகளாக 5, 6 படுக்கைகள்தான் இருக்கின்றன. அதை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற வேண்டியும், ஓங்கூர் ஆற்றின் கரையைக் கட்டித் தருவதற்கும், சூணாம்பேடு சுற்றியுள்ள வெள்ளகொண்ட அகரம், புதுப்பட்டு, புதுக்குடி, விளாம்பட்டு, அரசூர், வள்ளியநல்லூர் போன்ற ஏரிகளின் கரையைக் கட்டி தூர் வார வேண்டும் என்கின்ற கோரிக்கைகளைக் கூறிக்கொண்டு, இந்தச் சபையில் பேச வாய்ப்பளித்த எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைக் கூறி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. மணி:

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் சில விவரங்களை மட்டும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். கிராமப்புற மக்களைப் பாதுகாக்கின்ற வகையில், கிராமங்களில் அதிகக்கவனம் செலுத்தி, ஆரம்ப சுகாதார நிலையங்களை அதிகமாக ஏற்படுத்துவதன் மூலமாகத்தான், நம்முடைய கிராமங்களிலுள்ள, விவசாயிகளை, விவசாயத் தொழிலாளர்களை, சாமானிய மக்களை நாம் பாதுகாத்துக்கொள்ள முடியும். அந்த வகையிலே, இன்றைக்கு அரசு அதற்கு ஒரு முன்னுரிமை கொடுத்து, ஆரம்ப சுகாதார நிலையங்களை, முழுநேர சுகாதார நிலையங்களாக மாற்றியிருப்பதை வரவேற்கின்றோம்; பாராட்டுகின்றோம். ஆனால் பரவலாக மாநிலம் பூராவிலும், அப்படிப்பட்ட ஒரு வழிமுறையைக் கையாள வேண்டும்.

குறிப்பாகச் சொன்னால், இந்த ஆரம்ப சுகாதார நிலையம் என்று எடுக்கின்றபோது, கன்னியாகுமரி மாவட்டத்திலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இடைக்கோடிலே இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சமீப காலத்திலே அந்தப் பகுதிக்கு வருகை தந்து, 50 இலட்சம் ரூபாய் இதற்குச் செலவிடுவதாகச் சொன்னார்கள். ஆனால் அந்தப் பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 15 படுக்கைகள் கொண்ட வசதியை அங்கே செய்து கொடுத்திருக்கிறோம். அதனுடைய சுற்றுச் சுவர் இல்லாத காரணத்தால், அந்த நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு இருக்கின்றன. அதைத் தடுத்து நிறுத்துகிற வகையில் அதனுடைய சுற்றுச்சுவர் கட்டுவதற்கான வகையில், விதிமுறைகளிலே சில மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

அடுத்து வருகிறபோது நம்முடைய வட்ட மருத்துவமனைகள் என்று சொல்கிற தாலுகா மையங்கள். அந்த மையங்களில் வருகின்ற மருத்துவமனைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும். எல்லா சுகாதார வசதிகளையும், நவீன வசதிகளையும் கொண்ட ஏற்பாடுகளை நாம் செய்வோமேயானால், மைய மருத்துவமனைகளைத் தேடி அலைய வேண்டி வராது. இருந்தாலும்கூட அந்த வகையில் விளவங்கோடு தாலுகாவில் இருக்கிற குழித்துறை அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், நான் இந்தக் கோரிக்கையை இந்த மாமன்றத்தில் வைத்து, அங்கே அவசர சிகிச்சைப் பிரிவிற்காக ஒரு ஏற்பாடு செய்து தருவதாகச் சொன்னார்கள். அதற்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 19 இலட்சம் ரூபாய் செலவு செய்து ஒரு கட்டடத்தைக் கட்டித் தந்திருக்கிறோம். ஆனால் அது செயல்படவில்லை. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதற்குத் தேவையான டாக்டர்கள் கிடைக்காத ஒரு நிலை இருக்கிறது என்று கூறினார்கள். இருந்தாலும்கூட அதை சமீபத்திலே தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். விரைந்து அதைச் செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப் பின்னர், அங்கே இருக்கிற பிணவறை நவீனமயமாக்கப்பட வேண்டுமென்று சொல்லி மாநில அரசாங்கம் 25 இலட்சம் ரூபாய் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் அதை வேறு பல பகுதிகளுக்கு எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. அது என்ன என்று எனக்குத் தெரியவில்லை. இருக்கின்ற அந்தப் பிணவறையை நவீனமயமாக்கக்கூடிய அளவிலே அதைச் செய்வதற்கு, நிதியை அதற்குத்தான் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, 'X-Ray பிரிவு'. அந்த X-Ray பிரிவிற்கு வேண்டிய நிரந்தர பணியாளர் இல்லை. இது நம்முடைய வட்ட மருத்துவமனைகளில் சில இடங்களில் இருக்கின்ற குறைபாடு. அந்தக் குறைபாடு தவிர்க்கப்பட வேண்டும். இதிலே யாரையும் குற்றம் சொல்வதாகவோ, அல்லது குறை கூறவோ நான் தயாராக இல்லை. அதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடிக்க வேண்டும். குழித்துறை அரசு மருத்துவமனையிலே இருக்கிற அந்த X-Ray பிரிவிற்கு நிரந்தரமான ஒரு பணியாளர் தர வேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே

[திரு. டி. மணி] [2003 ஏப்ரல் 3

வைக்க விரும்புகிறேன். மாவட்ட மருத்துவமனைகளை எடுத்துக்கொண்டால், இதே நிலை சில பகுதிகளில் தொடர்கிறது. X-Ray வேண்டும், Scan வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு மருத்துவக் கல்லூரியை உருவாக்குவதற்கு இந்த அரசு எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறது. பாராட்டுகிறேன். அடுத்த கல்வியாண்டில்—இந்தக் கல்வி ஆண்டைச் சொல்லவில்லை. அடுத்த கல்வி ஆண்டிலாவது—அந்த மருத்துவக் கல்லூரியை நடத்துவதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்குரிய அதிக நிதி வசதியை அரசு செய்தால் மட்டும்தான் அடுத்த வருஷம், அந்தக் கல்வியாண்டிலே அங்கே மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் ஒன்றிய அளவில், வட்ட அளவில் இருக்கிற மருத்துவமனைகளை நல்ல முறையிலே தாம் உயர்த்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 30 படுக்கைகள் வசதி, அதைப்போல அங்கே எக்ஸ்ரே வசதி, ஸ்கேன் வசதி, ஆம்புலன்ஸ் வசதி, அதேபோன்று ஆப்பரேஷன் தியேட்டர் வசதி இவை எல்லாம் செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காக இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பிற்பகல் 12-50

அகில இந்தியாவைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் மட்டும்தான் அரசு மருத்துவமனைகளை நாடிச் செல்கிறார்கள். ஏழை எளிய நோயாளிகளுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அகில இந்தியாவில் என்று எடுத்துக்கொண்டோமேயானால் அரசு மருத்துவமனைகளை நாடிச் செல்கிற விகிதாச்சாரத்தைப் பார்க்கிறபோது, கிராமப்புறத்திலிருந்து 19.6 சதவீதம், நகர்ப்புறத்திலிருந்து 23.2 சதவீதம்தான். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே கிராமப் பகுதிகளிலிருந்து 54 சதவீதம் பேர் அரசு மருத்துவமனைகளை நாடித்தான் செல்கிறார்கள். அதைப்போல நகர்ப்பகுதிகளிலிருந்து 47 சதவீதம் பேர் அரசு மருத்துவமனைகளை நாடிச் செல்கிறார்கள். குறிப்பாக, நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர், இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப்

2003 ஏப்ரல் 3]. [திரு. செ. செம்மலை]

பொறுப்பேற்ற பிறகு, புறநோயாளிகளினுடைய எண்ணிக்கை 17 சதவீதம் மருத்துவமனைகளிலே அதிகரித்திருக்கிறது. அதற்கு நோயாளிகள் அதிகமாகிவிட்டார்கள் என்று அர்த்தம் இல்லை. மருத்துவமனைகளிலே தரமான மருத்துவ சிகிச்சை கொடுக்கிற காரணத்தினாலே அங்கே quality of service; அதேபோல, reliability, availability and easy accessibility இருப்பதனாலே நம்பிச் செல்கிறார்கள். அந்த வகையிலேதான் இன்றைக்கு தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எங்களுடைய துறைக்கு ஆணையிட்டிருப்பது, ஒவ்வொரு வட்டார மருத்துவமனையிலும் இருக்கிற Operation Theatre-களிலும் A.C. வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்; அங்கே எந்தக் குறைபாடு இருந்தாலும்—Scan இல்லையென்றால் scan வழங்கப்பட வேண்டும்; X-Ray வசதி இல்லையென்று சொன்னால், X-Ray வசதி செய்து கொடுக்க வேண்டும்; அதேபோல, வட்டம் சாரா மருத்துவமனைகளுக்கும் இந்த வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளிலே அது படிப்படியாகச் செய்யப்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்பார்ப்பதால்தான் உலக வங்கியிடமிருந்து நிதியைப் பெற்று, 650 கோடி ரூபாய் நிதியைப் பெற்று, நீங்கள் கேட்கிற அத்தனை வசதிகளையும் செய்வதற்காகத்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த முயற்சியிலே ஈடுபட்டு, அதிலே வெற்றியும் கண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு ஆண்டுகளிலே எந்த அளவிற்கு மருத்துவ வசதிகள் மருத்துவமனைகளுக்கு அதிகமாகச் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதைவிட இன்னும் இரண்டு பங்கு, இன்னும் இரண்டு ஆண்டுகளிலே நிச்சயமாக புரட்சித் தலைவி அரசு செய்து கொடுக்கும் என்று நான் உறுதியாகச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்ற கருத்திற்கு ஒரு மாற்றுக் கருத்தை நான் சொல்ல விரும்பவில்லை. வரவேற்கத் தக்கதுதான். பாராட்டுகிறோம். ஆனால் சில குறைபாடுகளை, இருக்கின்ற சில குறைபாடுகளைச் சொல்லி, நிவாரணம் வேண்டுவது என்பதுதான் என்னுடைய கோரிக்கை. குறிப்பாக, ஒன்றியத்திற்கு ஒரு சுகாதார நிலையம் என்று சொல்லி, ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது வளர்ச்சிப் போக்கிலே எந்த அளவிற்கு என்று விவரங்களையெல்லாம் தந்திருக்கின்றார்கள். ஆனால் ஒன்றியத்திற்கு ஒன்று என்று வருகின்றபோது, 20, 30 வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட ஒரு

சுகாதார நிலையம் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு மட்டும் நாம் இந்த வளர்ச்சிப் போக்கிலே சென்றுவிட முடியாது.

குறிப்பாகச் சொன்னால், கொல்லங்கோடு என்ற வருவாய்க் கிராமத்தில் 35,000-க்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட ஒரு வருவாய் கிராமத்தில் பல வருடங்களாக உள்ள கோரிக்கை ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தர வேண்டும். இடம் இருக்கிறது. கட்டடம் இருக்கிறது, அந்த விவரங்களை ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, இந்தத் துறையினுடைய கவனத்திற்கு பலமுறை நான் கொண்டுவந்திருக்கின்றேன். ஆனால் தீர்வு ஏற்படவில்லை. அது வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சித்தா பிரிவிற்குத் தனியாக ஒரு கட்டடம் வேண்டும், ஒவ்வொரு மருத்துவமனையிலும். எங்கே இருந்தாலும் சரி, அது வட்ட மருத்துவமனையாக இருந்தாலும் சரி, ஆரம்ப சுகாதார நிலையத்தோடு இருந்தாலும் சரி. இன்றைக்கு அது இருக்கின்ற அந்தச் செயல்பாட்டைப் பார்த்தால், கவனிக்காத ஒரு நிலை இருக்கிறது. ஆக, அது மாற்றப்பட வேண்டும்.

அதுபோன்று, புதிய ஒரு சம்பிரதாயத்தை, ஆயுர்வேத சிகிச்சை என்று நம்முடைய கேரள மாநிலத்திலே மிகச் சிறப்பாகச் செய்கின்ற ஒரு சம்பிரதாயம் இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலே— மதுரையை எடுத்துக்கொண்டாலும் சரி, திருச்சியை எடுத்துக்கொண்டாலும் சரி, வேறு எந்த மாவட்டங்களை எடுத்துக்கொண்டாலும் சரி, அந்த ஆயுர்வேத சிகிச்சை என்பது வரக்கூடிய அளவில், ஒரு மையத்தை அல்லது ஒரு மருத்துவமனையை நாம் உருவாக்குவது தேவை. சாதாரணமாக அலோபதியிலே சொன்னால், ஒன்றைச் சொல்வார்கள். பக்க விளைவுகள் அதிகமாக வரும். ஆனால் சித்தா பிரிவை எடுத்துக் கொண்டாலும் சரி; ஆயுர்வேதத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, பக்க விளைவுகள் வராது என்ற பொதுவான கருத்து இருக்கிறது. அந்த அடிப்படையிலே, ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நாய்க்கடி, பாம்புக்கடிக்கு என்று சொல்கின்ற ஒரு மருந்து பொதுவாகத் தரப்படுவதில்லை. இருந்தாலும், இந்த வட்ட மருத்துவமனையிலே இதற்கான மருந்து இல்லை. குறிப்பாகச் சொன்னால், நான் இந்த சட்டமன்றக் கூட்டத்திற்கு வருவதற்கு முன்னால், அங்கே குளித்தலையி!லே விசாரிக்கின்றபோது இந்த

இரண்டு மருந்துகளும் இல்லை. அவை தரப்பட வேண்டும். அதுபோன்று, இந்த இருதய அறுவை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணி, இன்னும் இரண்டு மணித்துளிகளுக்குள் பேசி முடித்துவிடுங்கள்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாய்க்கடி மருந்து சில மருத்துவமனைகளில் தட்டுப்பாட்டின் காரணமாக இல்லையென்று சொன்னால்கூட, இந்த அரசு தெளிவாக அவர்களுக்குச் சொல்லியிருக்கிறது. அவர்களிடம் இருக்கிற Contingent Fund—லேயிருந்து அவர்கள் open market-லே தேவைப்படுகிறபோது எப்போதும் வாங்கிக் கொள்ளலாம். அதற்குத் தடையில்லை என்று அந்த உத்தரவை நாங்கள் பிறப்பித்திருக்கிறோம்.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் அன்றைக்குப் பேசுகின்றபோது, இதுபோல நிறைய குறுக்கீடுகள் வந்து, என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பு குறைந்து போனது. ஆகவே சற்று நேரம் அதிகம் வேண்டும். ஏனென்று சொன்னால், எங்களுடைய மாவட்ட மருத்துவமனையும், அதனுடைய மருத்துவக் கல்லூரி சம்பந்தமாகவும் நான் என்னுடைய கருத்தைச் சொல்லிவிட்டேன்.

பிற்பகல் 12-55

அதேபோன்று இருதய அறுவை சிகிச்சைக்காக அரசு தருகின்ற பணம் உடனடியாக வந்து சேருவது இல்லை. உடனடியாகக் கிடைக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதில் காலதாமதம் ஏற்படுகின்றது என்பது உண்மை. அது தவிர்க்கப்பட வேண்டும்.

அதுபோல, இந்தத் தடுப்பூசி; அதாவது மலேரியா, மஞ்சள் காமாலை இன்னும் பரவலாக நம்முடைய மாநிலத்தில் வருகிறது. அந்த நோய்களைத் தடுப்பதற்கு தடுப்பூசியைப் போடுகின்ற ஒரு ஏற்பாட்டை நாம் செய்ய வேண்டும்.

அதேபோன்று, மதுரையிலே இருக்கின்ற இராஜாஜி மருத்துவமனையில், அங்கேயிருக்கின்ற கூட்ட நெரிசலைப் பார்க்கின்றபோது இன்று இருக்கின்ற Scan சௌகரியம் கூட போதுமானதாக இல்லை. Scan வசதி ஒன்று கூட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.

அதேபோன்று அங்கேயிருக்கின்ற அந்த Hostel. மருத்துவக் கல்லூரியிலே இருக்கின்ற பெண்களுக்கான Hostel போதுமானதாக இல்லை. பழைய காலத்தில் கட்டப்பட்டிருக்கிறது. இட வசதி அதிகம் வேண்டும் என்கின்ற கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அதற்கான உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அவசர சிகிச்சைப் பிரிவிற்காக, நம்முடைய மாநிலத்தின் தேசிய நெடுஞ்சாலையினுடைய ஓரங்களிலே நான்கு இடங்களில்தான் இருப்பதாக இந்த விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது பரவலாக்கப்பட வேண்டும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, ஒரு மணித்துளிக்குள் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. டி. மணி: அந்த அடிப்படையிலே, காரியங்களைச் செய்வதற்கு அரசு தயாராக வேண்டும்.

போலி மருந்து. இப்போது மத்திய அரசிடமிருந்துதான், நமக்கு மருந்துகள் பூராவும் தரப்படுகின்றன. ஒரு ஏஜென்சி வழியாக, நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான மருந்துகளைத் தருகின்றார்கள். அந்த மருந்துகள் ஊடே போலியான மருந்துகள் வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அவற்றைக் கண்டறிவதற்கு நம்முடைய மாநில அரசாங்கத்திற்கு எந்த உரிமையும் இல்லை. பூச்சிக்கொல்லி மருந்துகளில் எந்த அளவிற்கு அதிலே கலப்படம் செய்யப்படுகிறதோ, அந்த அடிப்படையில்தான் இதிலேயும் செய்யப்படுகின்ற பல சம்பிரதாயங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதில் ஒரு தெளிவான கருத்தைச் சொல்ல இயலாது. எனவே அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.(மணியடிக்கப்பெற்றது)

6. அறிவிப்புகள்

(ஆ) பத்திரிகையாளர்களுக்கு அறிவுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, ஒரு அறிவிப்பைச் சொல்லிவிடுகிறேன்.

பத்திரிகையாளர்களுக்கு ஓர் அறிவிப்பு. பத்திரிகை நிருபர்கள் இந்தச் சட்டப் பேரவை நிகழ்ச்சிகளைக் கவனித்து செய்தி சேகரிப்பதற்காகத்தான்

இங்கே அனுமதிக்கப்படுகிறார்கள். இங்கே அமர்த்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளைப்பற்றிக் கவனிக்காமல், இங்கே பேசுவது பற்றியும் கவனிக்காமல், 'இந்து' நிருபராக வந்திருக்கிற திருமதி ராதா வெங்கடேசன், இண்டியன் எக்ஸ்பிரஸ் நிருபர் புஷ்பா, இரண்டு பேரும் தொடர்ந்து பேசிக்கொண்டேயிருக்கிறார்கள். தயவுசெய்து சட்டப் பேரவை நிகழ்வுகளைக் கவனித்து இதிலே இருப்பவற்றை குறித்து பத்திரிகைக்கு அனுப்புவதற்காகத்தான் இங்கே நீங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறீர்கள். அந்தக் கடமையைச் செய்ய வேண்டுமென்ற அறிவுரையை இப்போது தருகிறேன்.

திரு. மணி, நீங்கள் பேசி முடியுங்கள்.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையைப்பற்றிச் சொல்கின்றபோது, மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு அருகில் இருக்கின்ற பாலரங்காபுரம் மருத்துவமனைக்கு நகர்ப்புற மக்கள் பெருமளவில் வருவதன் காரணமாக கூட்ட நெரிசல் இருக்கின்றது. அங்கு சில நேரங்களில் மின்சார தடை ஏற்படுகின்றது. எனவே அந்தப் பகுதியிலே, அந்த மருத்துவமனைக்கு ஒரு ஜெனரேட்டர் வேண்டும். அங்கே பணியாளர்கள் போதுமானதாக இருக்கிறார்களா என்று கேட்டால், இல்லை. மருத்துவமனைக்காக நிறைய பணத்தைச் செலவழிக்கின்றோம். போதுமான டாக்டர்கள், பணியாளர்கள் எல்லாம் இதற்குத் தேவைப்படுகின்றது. அந்த வகையிலே மாநிலம் பூராவிலும், நம்முடைய மாவட்ட மையங்களிலே இருக்கின்ற மருத்துவமனைகளுக்கு அதிகப்படியாக Scan கொடுத்தாலும் சரி, X-Ray கருவியைத் தந்தாலும் சரி, மருத்துவர்களைத் தந்தாலும் சரி; பணியாளர்களைத் தருவதோடு போதுமான மருந்தையும் தர வேண்டும்.

இப்போது தனியார் மருத்துவமனைக்குப் போனால், அதிகமான பணத்தை வாங்குகிறார்கள். அதற்கு எல்லையே கிடையாது. அதில் ஓர் எல்லையை நிர்ணயிக்க முடியுமா என்பதுபற்றி நம்முடைய அரசு பரிசீலிக்க வேண்டும். சில நிர்பந்தங்களின் காரணமாக சில தனியார் மருத்துவமனைகளுக்குச் செல்கின்றோம். அப்படிச் செல்கின்றபோது, அங்கு என்னதான் நடக்கிறது என்று கேட்டால், திரும்பி வா முடியாத அளவிற்குப் பணத்தைக் கொள்ளையடிக்கிறார்கள். அந்த நிலைக்கு ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. இராசேந்திரன்.

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி கூறி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில குறிப்புகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இன்று தினசரி பேப்பரிலே மருத்துவக் கல்லூரி சேர்க்கைக்காக, விண்ணப்பக் கட்டணம் உயர்த்த அரசு முடிவு, என்ற ஒரு செய்தி வந்துள்ளது. அரசு முடிவு என்ற அந்தச் செய்தியை பத்திரிகையின் வாயிலாக அறிய முடிந்தது என்ற அந்த அடிப்படையிலே, ஏழையெளிய மாணவர்கள் பாதிக்கக்கூடிய அந்த முடிவை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல, முதுநிலைப் பட்டப்படிப்புக் கட்டணம் இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது என்ற ஒரு செய்தி. அதையும் அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 1-00

அதேபோல, தமிழகத்திலேயுள்ள அரசு மருத்துவமனைகளிலே, கொடிய நோயான மஞ்சள் காமாலை நோய்க்குத் தடுப்பூசி என்ற அடிப்படையிலே, அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசமாகப் போடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, நாய்க்கடி ஊசி என்பது, தொப்புளைச் சுற்றிப் போடுவது என்ற அடிப்படையிலே, தொப்புளைச் சுற்றி ஊசி போடுவதன் காரணமாக, பக்க வாதம், கீல் வாதம், நரம்புத் தளர்ச்சி போன்ற நோய்கள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. கையிலே போடும்படியான Tissue Culture தடுப்பூசி போட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

பொதுவாக, அரசு மருத்துவமனைகளிலும் நாய்க்கடி மருந்து தட்டுப்பாடாக உள்ளது. நாய்க்கடி மருந்து மற்றும் பாம்புக்கடி விஷ முறிவு ஊசி, ஆரம்ப சுகாதார நிலைய அளவிலேயும் தாராளமாகக் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனென்றால், பாம்புக்கடி, நாய்க்கடி போன்றவை ஏற்படுகின்ற

சூழ்நிலையில், கிராமப்புற மக்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். இந்தியாவிலேயே Human Biological Institute and National Development Board மூலம், நாய்க்கடி ஊசி மருந்து Abhyarab என்பது சப்ளை செய்யப்படுகிறது. இந்த் ஊசி மருந்து, தனியார் மருத்துவமனைகளுக்கு கிட்டத்தட்ட 170 ரூபாய் என்ற அடிப்படையிலே விற்பனை செய்யப்படுகின்றது. தனியார் மருத்துவமனைகளிலே, அந்த ஊசியைப் போடும்போது, அதிகப்படியான கட்டணம் வசூலிக்கப்படுவதாக செய்திகள் வருகின்றன. அரசே அதுபோன்ற ஊசி மருந்துகளை மொத்தமாகக் கொள்முதல் செய்வதன் மூலமாக, விலை குறைவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்ற அடிப்படையிலே, ஊசி மருந்துகள் தாராளமாகக் கிடைக்க அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டிலே, ஏழையெளிய மக்கள், அதிலும் குறிப்பாக இளைஞர்கள், வறுமையின் காரணமாக, கிட்னியை விற்கக்கூடிய சூழ்நிலை அதிலும் குறிப்பாக, கிட்னி-சிறுநீரக-வியாபாரம் என்பது தமிழகத்திலே, அதிக அளவிலே நடைபெறக்கூடிய ஒரு சூழ்நிலை. குறிப்பாக, சென்னையிலே, வில்லிவாக்கம் பகுதியிலே, இப்போது கிட்னி விற்பனை என்பது, இடைத்தரகர்களால் இளைஞர்கள் ஏமாற்றப்பட்டு, விற்பனை நடைபெறுகிற அந்தச் சூழ்நிலையிலே, சென்னை, வில்லிவாக்கம் பகுதியானது, மறுபெயர் பெறக்கூடிய அளவிலே, கிட்னிவாக்கம் என்று அழைக்கக்கூடிய அளவிலே, இப்போது அந்தப் பகுதி செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. போதிய நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

கிட்னி மாற்று அறுவை சிகிச்சைக்கு, மூன்று பேர் கொண்ட குழு உள்ளது. அனுமதி பெற்றுத்தான் கிட்னி மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்ற ஒரு சூழ்நிலை உள்ள காரணத்தினால், கிட்னியைப் பெறுபவர்களும், கிட்னியை வழங்குபவர்களும் அந்தக் குழுவின் மூலமாக அனுமதி பெற்று, அதற்கான ஆதாரத்துடன் கிட்னி மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டும்; அந்தக் குழுவைக் கட்டுப்படுத்த வேண்டிய சூழ்நிலை, அரசின் கடமையாகும் என்ற அடிப்படையிலே, குழு விழிப்புடன் செயல்பட்டால், கிட்னி விற்பனையைத் தடுக்கலாம். அந்தக் குழு விழிப்புடன் செயல்படுவதற்கு அரசு தேவையான நடவடிக்கையை மேற்கொள்வதுடன் அந்தக் கிட்னி விழிப்புக் குழுவிலே ஓய்வுபெற்ற மருத்துவர்கள், உயர் போலீஸ் அதிகாரிகள், ஓய்வுபெற்ற நீதிபதிகள், அதுபோல், தன்னார்வத்

தொண்டினைச் செய்யும் பல்வேறு அமைப்புகளை உள்ளடக்கிய குழுவை நியமிப்பதன் மூலமாக, கிட்னி விற்பனையைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதுபோல, தமிழ்நாட்டிலே சாலை விபத்துகள் என்பது அதிகமாகப் பெருகி வருகின்ற இந்தக் காலகட்டத்தில், சாலை விபத்திலே பாதிக்கப்படுபவர்களுக்குப் பெரும்பகுதி மூளைச் சாவு என்று ஏற்பட்டாலும்கூட, மற்ற உறுப்புகளான இதயம், கல்லீரல், சிறுநீரகம், கண் போன்ற உறுப்புகள் செயல்படக்கூடிய சூழ்நிலையில், அந்தமாதிரி காலகட்டத்தில், 1994 ஆம் வருடத்திய உறுப்பு தான சட்டப்படி, அரசு மருத்துவமனைகளில், உறுப்பு தானம் கொண்டுவரவேண்டுமென்ற ஓர் உன்னத நோக்கத்தை அரசு கவனத்தில்கொண்டு, அதைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அதுபோல கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்காக, சென்னையில் மட்டும் ரூ.10 இலட்சம் அளவுக்குக் கட்டணமாக தனியார் மருத்துவமனைகளிலே வசூலிக்கப்படுகின்ற சூழ்நிலையிலே, விபத்தில் சிக்கியவருக்கு மூளைச் சாவு ஏற்படும்போது உடல் உறுப்புகளைத் தானமாகப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து, அதுபோல பெறுகின்ற உறுப்புகளை, ஏழையெளிய மக்களுக்குப் பொருத்துகின்ற வகையில் நல்லதொரு திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 1-05

அதேபோல, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களது குழந்தைகளுக்கு மருத்துவக் கல்லூரியிலே 12 சீட் இட ஒதுக்கீடு என்று இருந்ததை, உயர் நீதிமன்றம் இரத்து செய்துள்ளது. இச்செயல் சமூக நீதி, ஜாதி ஒழிப்புக்கு எதிரானது என்ற அடிப்படையிலே தமிழக அரசு உச்ச நீதிமன்றத்திலே appeal செய்யலாம் என்ற அடிப்படையிலேயும், தேவைப்பட்டால் இந்தச் சட்டமன்றத்திலே தீர்மானம் போட வேண்டிய அவசியம் இருப்பின், அதைப்போன்ற முயற்சியும் மேற்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, M.D., M.S., பட்ட மேற்படிப்பு சீட்டுகளைக் குறைக்க Medical Council of India நடவடிக்கை எடுத்துள்ளது. அதைத் தடுப்பதற்கும்,

அந்த பணியிலே போதிய விரிவுரையாளர்களை அமர்த்துவதற்கும் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த அரசு ஒரு சிறந்த உன்னதமான திட்டத்தை அமல்படுத்தியது. அரசு மருத்துவமனைகளிலே, மருத்துவர்கள், செவிலியர்கள் Counselling முறையிலே இடமாற்றம் செய்யப்படும்போது அந்த இடமாற்றத்தின் மூலமாக இலஞ்சம், இலாவண்யம் என்பது முற்றிலுமாக அகற்றப்பட்டு இருந்தாலும்கூட, இம்முறையை வரவேற்க வேண்டிய அவசியம் இருந்தாலும்கூட ஆரம்ப சுகாதார நிலையம், தாலுகா மருத்துவமனையிலே உள்ள டாக்டர்கள், செவிலியர்கள், Counselling முறையில் மாறுதலில் சென்றுவிட்டால், அதற்கு முன்பாக, அங்கு ஏற்படுகின்ற அந்த காலி இடங்களிலே அரசு மருத்துவர்கள், செவிலியர்கள் சேருவதற்கு உத்தரவாதம் இல்லாத ஒரு சூழ்நிலை இன்று நிலவுகிறது. இந்தச் சூழ்நிலையில் ஆரம்ப சுகாதார நிலையம், தாலுகா மருத்துவமனையிலே, டாக்டர்கள், செவிலியர்கள் இல்லாத நிலையைப் போக்குவதற்காக, அந்தப் பணியிலே காலியாக உள்ள இடம் நிரப்பப்பட்டவுடன், மாறுதல் பெற்ற மருத்துவர்களையும், செவிலியர்களையும் விடுவிக்க வேண்டுமென்று இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, சென்ற ஆண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களில், 30 படுக்கை வசதிகள் அளிக்கப்படும் என்ற அறிவிப்பு, அறிவிப்போடு நின்று விட்டதாக அறிகிறேன். எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களில், 30 படுக்கை வசதிகள் கடந்த ஆண்டு அரசு செய்துள்ளது என்பதை மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராசேந்திரன், இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த வேண்டுமென்ற நம்முடைய மாண்புமிகு டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின்பேரில் இப்போது அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, முதல் கட்டமாக 21 ஆரம்ப சுகாதார நிலையங்களும், இரண்டாவது கட்டமாக 20 ஆரம்ப சுகாதார நிலையங்களும், மூன்றாவது கட்டமாக 17 ஆரம்ப சுகாதார

நிலையங்களும், எடுக்கப்பட்டு, 58 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இன்றைய நிலையிலே தரம் உயர்த்தப்பட்டு, இப்போது அந்தப் பணிகள் முடிக்கப்பட இருக்கின்றன. இந்த ஆண்டு 35 ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்துவதற்கு, எடுப்பதற்குத்தான் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறோம். படிப்படியாக, இன்னும் 2 ஆண்டுக் காலத்திற்குள் அனைத்து ஒன்றியங்களிலும் இப்படிப்பட்ட ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட, தரம் உயர்த்தப்பட்ட மருத்துவமனையாக மாற்றி அமைக்கப்பட்டுவிடும். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. எச்.எம். ராஜு: தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசட்டும். (குறுக்கீடு) இல்லை, அவர் பதிலுரையிலே சொல்வார். திரு. இராசேந்திரன் பேசட்டும். (குறுக்கீடு) நேரம் இல்லை, நேரம் இல்லை. திரு. இராசேந்திரன், பேசுங்கள்.

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன் எனது தொகுதிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலையில் இருக்கிற இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இதுபோன்ற வசதிகளை அமைச்சர் செய்து தர வேண்டுமென்று இந்தத் தருணத்திலே எனது தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், தாலுகா மருத்துவமனைகளிலும், ஆப்பரேஷன் செய்வதற்கு, பிராண வாயு சிலிண்டர்கள் இல்லாததால் நோயாளிகளை வெளியிலே வாங்கி வரச் சொல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதுபோன்ற சூழ்நிலைகளை மாற்றி அமைப்பதற்கு அரசு தேவையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எய்ட்ஸ் நோய் பாதிப்பு என்பது தமிழகத்திலே அதிக அளவில் ஏற்பட்டுள்ளது. பொதுவாக, நகர்ப்புறங்களில், புற நகரங்களில், எய்ட்ஸ் நோய் பரவுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. கட்டுப்படுத்தத் தேவையான விழிப்புணர்வு முகாம்களை அரசு ஏற்படுத்தி நடத்த வேண்டும். இந்த எய்ட்ஸ் நோய் ஒழிப்புப் பிரச்சாரத்திலே கல்லூரி மாணவ மாணவிகளை ஈடுபடுத்துவது என்பது அரசு எடுத்த முடிவு. மாணவ மாணவியர் சமுதாயத்தை, பாழ்படுத்துகிற சூழ்நிலை

உருவாகும் என்பதையும், அரசு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச். ராஜா.

திரு. சோ. இராசேந்திரன்: ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். ஒரேயொரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் இல்லை. அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

திரு. சோ. இராசேந்திரன்: ஒரே நிமிடம், முடித்துவிடுகிறேன். அரசு மருத்துவமனையில் சுத்தம் என்பது அரிதாக உள்ள சூழ்நிலையில் அதிகப்படியான துப்புரவுத் தொழிலாளர்களை நியமிப்பதன் மூலமாக, துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கூறிக்கொண்டு பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

பிற்பகல் 1-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச். ராஜா.

திரு. எச். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மக்கள் நல மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். உடல் நலத்துடனும், மன நலத்துடனும் மற்றும் சமுதாயத்துடன் ஒன்றி வாழும் நிலையே நல்வாழ்வு ஆகும் என World Health Organisation கூறி இருப்பதை வைத்து, இந்த மானியக் கோரிக்கையினுடைய கொள்கை விளக்கமானது தொடங்குகிறது.

A sound mind is a sound body என்று கூறுவார்கள். ஆகவே அதற்காக, பள்ளிக் குழந்தைகளுக்கு கட்டாய யோகா பயிற்சி சொல்லிக் கொடுப்பதன் மூலம் இதை நாம் நிறைவேற்ற முடியும் என்று நான் என்னுடைய கருத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவமனைகளில் வசதியை உயர்த்தவும், கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறுவோர்க்கு தரமான மருத்துவ சிகிச்சை அளிக்கவும், கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மகப்பேறு நோயியல் நிலையத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் பிரிவிற்கு சிறப்பான வரவேற்பு இருக்கிறது என்றும் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது வரவேற்கத்தக்க ஒன்று. இதன் மூலமாகக் கிடைக்கின்ற நிதியினை வைத்து அரசு மருத்துவமனையினுடைய தரம் உயர்த்தப்பட வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அங்கு hygienic conditions இன்னும் improve பண்ண வேண்டி இருக்கிறது.

அதேபோல பொதுப் பணித் துறை மூலம் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிக்காக 28.33 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இது மருத்துவமனைகள் கட்டுவதற்குப் போதுமானதாக இல்லை. எனவே இது அதிகரிக்கப்பட வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

எய்ட்ஸ் நோய் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம். பல N.G.O.கள் மூலமாக இதற்காக மத்திய அரசு நிதி ஒதுக்கி வருகிறது. ஆனால் பல்வேறு சந்தர்ப்பங்களில், இது முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் கணக்குக் கொடுத்து பணம் பெறுகின்ற ஒரு சூழ்நிலையில் பல N.G.O.-கள் ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்றன. எனவே மாநில அரசு இதற்காக கண்காணிப்பு நடவடிக்கையை அதிகரிக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்.

அதேபோல, மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், பல் மருத்துவத்திற்கு 60 இடங்களிலிருந்து 100 இடங்களாக உயர்த்தப்பட்டது. B.D.S.-க்குக் கூட்டி இருக்கிறார்கள். M.D.S.-க்கு 18 ஆக இருப்பதை 40 ஆக உயர்த்த வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்று புதிய மருத்துவமனைகள் தமிழகத்தில் தொடங்கப்பட இருக்கின்றன. தேனி, வேலூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டு இருப்பது வாவேற்கத்தக்கது. ஆனால் காரைக்குடியிலும், சிவகங்கை மாவட்டத்திற்காக ஒரு மருத்துவக் கல்லூரியும் தொடங்க வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை நான் மீண்டும் இந்த ஆண்டு வலியுறுத்த விரும்புகிறேன். அடுத்த ஆண்டாவது தமிழக அரசு இதற்கு நடவடிக்கை. எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் 1800 படுக்கை வசதிகள் கொண்ட மன நல நிறுவனமானது 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அங்கு ஒரு நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டு இருப்பது வரவேற்கத்தக்கது. அதோடுகூட சென்னையிலே கீழ்ப்பாக்கத்திலே Interaction Trust மூலமாக Family Therapy Block ஒன்று கட்டுவதற்காக ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சென்ற முறை முதலமைச்சராக இருந்த காலகட்டத்திலே 25 கிரவுண்ட் நிலமும், 25 இலட்சம் ரூபாயும் கொடுத்தார்கள். அது முழுமை பெறாமல் இன்னும் இருந்துகொண்டு இருக்கிறது. எனவே அதற்காக மேலும் 25 இலட்சம் ரூபாய் நிதி உதவி செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஒருகால் அரசு கட்டுமானக் கழகத்தின் மூலமாகவே அது கட்டி முடிப்பதாக இருந்தாலும், செய்யலாம். ஏனென்றால், அது முழுமைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து மாவட்டம் மற்றும் தாலுகா மருத்துவமனைகளில், Blood Bank இருக்க வேண்டியது அவசியமாகின்றது. ஏனென்றால் படுகொலைகளால் இறப்பவர்களைவிட 6, 7 மடங்கு விபத்துகளிலே, குருதி இழப்பால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிற காரணத்தாலே, மாவட்டம் மற்றும் வட்டார மருத்துவமனைகளிலே Blood Bank ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

உலக வங்கி நிதி உதவியுடன் ரூ.650 கோடி மதிப்பீட்டில் செயலாக்கப்பட இருக்கும் சுகாதார அமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் 3 முக்கிய பொருட்கள் உள்ளடங்கி இருப்பதை இந்தக் கொள்கை விளக்கத்திலே அறிவித்திருக்கிறார்கள். அதாவது நிர்வாக மேம்பாடு மற்றும் கட்டமைப்பை வலுப்படுத்துதல், தரமான சிறந்த மருத்துவ சேவை அனைவருக்கும் எளிதில் கிடைக்கும் வாய்ப்பை மேம்படுத்துதல், சமுதாய மற்றும் தனியார் துறை பங்கேற்பினை வலுப்படுத்துதல் என்று இங்கே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. தனியார் துறையினுடைய பங்களிப்பு இல்லாமல், அனைவருக்கும் நாம் மருத்துவ வசதி ஏற்படுத்த முடியாது. அரசாங்கமே, அரசு மருத்துவமனைகள் மூலமாக அனைத்தையும் ஏற்படுத்திவிட முடியாது என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விஷயம்தான். ஆனால்

ஒரு quality treatment இருந்தால் மட்டும் போதாது. அது affordable rate-ல் கிடைக்க வேண்டும். எனவே தனியார் மருத்துவமனைகளிலே ஒவ்வொரு மருத்துவ சிகிச்சைக்கும் அவர்கள் charge பண்ணுகிற fees-க்கு ஓர் உச்சவரம்பைக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், எல்லோருமே அரசு மருத்துவமனைகளின் மூலமாக treatment பெற்றுவிட முடியும் என்று சொல்ல முடியாது. எனவே இதிலே ஓர் உச்சவரம்பைக் கொண்டுவர வேண்டுமென்று நான் ஒரு கோரிக்கையாக வைக்கிறேன்.

பிற்பகல் 1-15

அதேபோல காசநோய் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரை, அதை ஒரு சமூகப் பாதுகாப்பு பணியாகவே நாம் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது, மற்றவர்களுக்குப் பரவாமல் இருக்க வேண்டும் என்பதற்காக. எனவே அதற்கு ஆஸ்பத்திரியிலே மாத்திரை கொடுக்கிறார்கள். அவர்கள் ஆஸ்பத்திரியிலேயே மாத்திரை எடுத்துக்கொள்ளும் முன்பாக உணவும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் வெறும் வயிற்றில் சாப்பிடுவதால் பின் விளைவுகள் ஏற்படுகின்ற காரணத்தால், காசநோய் மருத்துவமனைகளிலேயே ஏழை மக்களுக்கு சத்துள்ள உணவும் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிறப்பதற்கு முன் கருவினுடைய தன்மையை அறியும் தொழில்நுட்பமானது 1994 ஆம் ஆண்டு சட்டப்படி 1-1-1996 முதல் தமிழகத்திலே தடை செய்யப்பட்டுள்ளது. Scan Centre மிகவும் அவசியமாகும். ஏனென்றால், Scan Centre நோயை அறிவதற்கு நமக்குப் பயனுள்ள ஒரு தொழில்நுட்பம். ஆனால் அதை கருச் சோதனை செய்வதற்காகப் பயன்படுத்துவது தடுக்கப்பட வேண்டும் அதற்காக அரசாங்கம் முயற்சி செய்துகொண்டிருந்தாலும் தருமபுரி, சேலம், தேனி மாவட்டங்களில் இன்னும்கூட திருட்டுத்தனமாக, அந்தக் கரு பெண் சிசுவா என்று கண்டறிந்து foeticide-க்கு அது ஒரு காரணமாக அமைகிறது. எனவே அரசாங்கம் கண்காணிப்பு நடவடிக்கைகளை strengthen பண்ண வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்கள் அங்கேயே தங்குவதில்லை.

அவர்கள் பக்கத்தில் இருக்கின்ற நகர்ப் பகுதிகளிலே போய் தங்கிவிடுகிறார்கள். அம்மாதிரியாக இருக்கின்ற ஒரு சூழ்நிலையில் கிராமப்புறங்களில் மக்களுக்கு இரவு நேரங்களில் சிகிச்சை பெறுவதற்கு சிரமமாக இருக்கின்ற காரணத்தால் அந்த மருத்துவமனைகளில் வேலை செய்கின்ற மருத்துவர்கள் அங்கேயே குடியிருக்க வேண்டுமென்பதை அரசாங்கம் செயல்படுத்த வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பிலே பெண்களுக்கு இரத்த சோகை நோயினால் பேறுகாலத்தில் இரத்த இழப்பு ஏற்படுவதுடன், சிசு மரணம் ஏற்படுவதற்கும் ஒரு காரணமாக அமைந்திருக்கிறது. இதற்காக இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்குவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், Post-partum haemorrhage மூலமாக தாய்மார்கள் இறந்து போகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. சமீபத்திலேகூட பத்திரிகையிலே, குரோம்பேட்டையிலே அரசு மருத்துவமனையில் அதுமாதிரி ஒரு சம்பவம் நடந்ததுபற்றி ஒரு செய்தி வந்திருக்கிறது. எனவே அரசாங்கம் இரத்த இழப்பின் மூலமாக தாய்மார்கள் இறக்காதவாறு பார்த்துக் கொள்வதற்கு முன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சமூக நலனைக் கருத்தில் கொண்டு தமிழகத்தில் 19-11-2001 முதல் மெல்லும் புகையிலை, குட்கா மற்றும் பான் மசாலா மற்றும் உடல் நலத்திற்கு ஊறுவிளைக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஐந்தாண்டுகள் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஜனாதிபதியினுடைய ஒப்புதலும் கிடைத்திருக்கிறது. ஆனால் இன்னமும் கிராமங்களில் முதற்கொண்டு மக்களுக்கு மிகவும் சகஜமாக குட்கா கிடைக்கிறது. அதை இளைஞர்கள் வாங்கி இன்னமும் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே சட்டம் கொண்டு வந்துவிட்டதோடு மட்டும் நின்றுவிடாமல் அரசாங்கம் அதை விற்பனை செய்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

நடப்பு ஆண்டில் 39 வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளில் இந்திய மருத்துவப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது வரவேற்கத்தக்கது. அதாவது, அலோபதியைப் பொறுத்தவரை diagnosis-க்கு அலோபதி

முறை மிகவும் suitable. ஆனால் முழுமையாக நோய் குணமடைவதற்கு இந்திய முறை மருத்துவமானது மிகச் சிறந்ததாக இருக்கிறது. எனக்கு முன்பாகப் பேசிய உறுப்பினர்கூடச் சொன்னார். ஆயுர்வேத மருத்துவக் கல்வியை வழங்குவதற்காக அரசுத் தரப்பிலே மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராஜா, இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. எச். ராஜா: ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். அரசு ஊழியர்கள் அறுவை சிகிச்சை பெற அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தனியார் மருத்துவமனைகளிலும் ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களும் சிகிச்சை பெற தகுதியுடையதாக அரசு அறிவிக்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

காரைக்குடிக்கு ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் வந்திருந்தார்கள். அரசு மருத்துவமனையை அவர்கள் பார்வையிட்டார்கள். அங்கு மாதத்திற்கு 100 பிரசவங்கள் நடைபெறுகின்றன. அதிலே 20, 25 கேஸ்கள் சிசேரியன் கேஸ்களாக இருக்கின்றன. ஆனால் அங்கு ஒரு பிரசவ வார்டு என்று தனியாக இல்லை. எனவே 20 படுக்கை வசதி கொண்ட ஒரு பிரசவ வார்டு அமைத்துத் தர வேண்டுமென அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சிவகங்கை மாவட்டத்தில் எந்தவொரு மருத்துவமனையிலும் Burn Injury Ward இல்லை. Intensive Care Unit கிடையாது. எனவே இதற்கும் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

காரைக்குடி மருத்துவமனையில் X-Ray Unit ரொம்ப obsolete ஆகப் போய்விட்டது. ஆகவே புதிய X-Ray Unit தேவை. அதை வாங்குவதற்கு

அரசு உடனடியாக நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதைப்போலவே, காரைக்குடி மருத்துவமனையின் Ambulance is in a very bad condition அதனால் அந்த ஆம்புலன்ஸில் போனாலே, அவர் நேராக மார்ச்சுவரி வரைக்கும் போக வேண்டுமென்கிற மாதிரி, அதைப் பார்த்தாலே shocking ஆக இருக்கிறது. ஆகவே ஆம்புலன்ஸ் வாங்குவதற்கும் நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, கல்லல் ஒன்றியம், ஆத்தன்குடி மருந்தகத்தில் ஊசி, மருந்துகள் கிடைப்பது கிடையாது. அங்கே பல்வேறு கிராமங்களைச் சுற்றியிருக்கக்கூடியவர்கள் ஆத்தன்குடி மருத்துவமனைக்குத்தான் சிகிச்சைக்கு வர வேண்டியிருக்கிறது. அதோடு அந்த மருத்துவமனையானது யூனியனுடைய ஒரு கட்டடத்தில் இயங்கி வருகிறது. பக்கத்திலேயே 5 ஏக்கர் காலியிடம் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது.) எனவே அந்த மருத்துவமனையை மாற்றித் தர வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டத்தைப்பற்றி ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். புதுக்கோட்டை தலைமை மருத்துவமனைக்கும், அறந்தாங்கி அறிஞர் அண்ணா மருத்துவமனைக்கும் Eye Specialist மற்றும் அறந்தாங்கி நகரில் பெண்களுக்கான ஒரு தனி மருத்துவமனை வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து, மணமேல்குடி தாலுகா, ஆவுடையார்கோயில் தாலுகா மருத்துவமனைகளுக்கு ஜெனரேட்டர், சுப்ரமணியபுரம் அரசு மருத்துவமனைக்கு X-Ray பிரிவும் தேவை என்ற கோரிக்கையை வலியுறுத்தி விடைபெறுகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் பதிலுரையை நாளைக்கு வைத்துக் கொள்ளலாமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை: வைத்துக்கொள்ளலாம்.

8. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்தி வைப்பது குறித்த தீர்மானம், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரையை இன்றைக்குப் பதிலாக நாளை காலை எடுத்துக் கொள்வதால், சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ளதை, 4-4-2003 அன்று பேரவை விதி 32-ஐத் தளர்த்தி, அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ளலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (4-4-2003) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை வெள்ளிக்கிழமை (4-4-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-22 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்.

66. 2001-2002ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முப்பத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

67. 2001-2002ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள். [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

100. மானியக் கோரிக்கை எண் 18—மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004 (தமிழ், ஆங்கிலம்)

101. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

102. பொது நிறுவனங்கள் குழுவின் எண்பத்து ஒன்பதாவது அறிக்கை (2001-2003)

103. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூறாவது அறிக்கை. (2001-2003)

104. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று ஒன்றாவது அறிக்கை. (2001-2003)

இணைப்பு

(57ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு 2003-2004

கோரிக்கை எண்—18

அத்தியாயம்-I

முன்னுரை

"நல்வாழ்வு என்பது நோயற்ற தன்மையோ அல்லது இயலாமை இல்லாமையோ மட்டுமல்ல. அது முழுமையான உடல் நலத்துடனும், மனநலத்துடனும் மற்றும் சமுதாயத்துடன் ஒன்றி வாழும் நிலையாகும்"

—***உலக சுகாதார நிறுவனம்*** (WHO)

ஒரு நாட்டின் அல்லது மாநிலத்தின் மனித வளர்ச்சியின் அளவினை நிர்ணயிப்பதில் மக்கள் நல்வாழ்வே முக்கிய பங்கு வகிக்கிறது. சமுதாயத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு ஆரோக்கியமான மக்களே ஆக்கபூர்வமான பங்கினை அளிக்க இயலும். எனவே **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களின் சீரிய தலைமையின் கீழ் மாநிலத்தின் அனைத்து மக்களுக்கும் சுகாதாரப் பாதுகாப்பினை அளித்திட தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.

(அ) அனைத்து பொது சுகாதார வசதிகளுக்கான கட்டமைப்பு வசதியை வலுப்படுத்துதல்; (ஆ) ஆரம்ப, நடுத்தர மற்றும் உயர்நிலை மருத்துவ நிறுவனங்களிடையே கலந்தாய்வு தொடர்புகளை உருவாக்குதல்; (இ) மருத்துவப் பணியாளர்களின் திறமை வளர்ச்சியினை உயர்த்தி சுகாதார வசதிகளைப் பெருக்குதல்; (ஈ) மருத்துவ வசதிகளை அளிக்க தகவல் தொழில்நுட்ப வசதிகளைப் பெருமளவில் பயன்படுத்துதல்;

[2003 ஏப்ரல் 3

மற்றும் (உ) சென்றடைய முடியாத குக்கிராமங்கள் மற்றும் தேவையான அளவு மருத்துவ வசதிகள் இல்லாத பகுதிகளுக்கு மருத்துவ வசதிகளை உருவாக்கிட அரசு மற்றும் தனியார் பங்கேற்பினை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் சுகாதாரப் பாதுகாப்பு அளிப்பது என்ற கொள்கை நிறைவேற்றப்படும்.

மாநிலத்தைப் பொறுத்தவரை, இளம் பிள்ளைவாதம் மற்றும் தொழுநோய் போன்ற தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதில் நாம் குறிப்பிடும்படியான வெற்றியை அடைந்துள்ளோம். எனினும், மலேரியா மற்றும் காசநோய் ஆகியவற்றை எதிர்த்துப் போராட வேண்டியதோடு மட்டுமல்லாது பெருகிவரும் எச்.ஐ.வி./ எய்ட்ஸ் நோயினையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நம் சமுதாயத்தில் நோயுற்றோர் அளவு மற்றும் இறப்பு விகிதம் அதிகமாக உள்ளதற்கு முக்கிய காரணமான நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் புற்றுநோய் ஆகிய தொற்றுநோய் அல்லாத நோய்களைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசர அவசியமாகிறது. விழிப்புணர்வு ஏற்படுத்துதல், ஆரம்பத்திலேயே நோய்களைக் கண்டறிதல், வாழ்க்கை முறையில் மாற்றங்கள் மற்றும் நவீன நோய் தீர்க்கும் நுட்பங்களை மேற்கொள்ளுதல் போன்ற உத்திகளைக் கையாளுவதன் மூலமே இந்த நோய்களைக் கட்டுப்படுத்த இயலும்.

சமுதாயத்தில் மாறிவரும் வாழ்க்கை முறையினால் ஏற்பட்டுள்ள இந்த நோய்களைப் பற்றிய விழிப்புணர்வினை உருவாக்கிட இவ்வரசு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றும். அது மட்டுமின்றி, இந்த நோய்களைக் கண்டறிந்து அதற்கான சிகிச்சையினை அளிப்பதற்கு ஏதுவாக அனைத்து மருத்துவமனைகளுக்கும் நவீன நோய் கண்டறியும் கருவிகளை வழங்கி அம்மருத்துவமனைகள் மேம்படுத்தப்படும்.

மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு தரமான மருத்துவ வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு இவ்வரசு முக்கியத்துவம் அளிக்கிறது. பேறுசார் மற்றும் குழந்தைகள் நலம் தொடர்பான திட்டங்களை செவ்வனே செயலாக்கம் செய்வதன் மூலம் சிசு மரண விகிதம் மற்றும் மகப்பேறு தாய்மார்கள் இறப்பு விகிதம் போன்ற சுகாதாரக் குறியீடுகளில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையை நீக்கி எதிர்பார்க்கும் இலக்கினை அடைய இயலும்.

2003 ஏப்ரல் 3]

குடும்ப நலத் திட்டத்திற்கு புதிய ஊக்குவிப்பு அளிக்கப்படும். மக்களிடையே காணப்படும் பயனற்ற கருத்துகளை ஒதுக்கி வைத்து குடும்ப நலத் திட்டத்தில் ஆண் வர்க்கத்தின் ஈடுபாட்டினை உயர்த்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மாநிலத்தில் மக்கள்தொகை தொடர்பான முக்கிய சுகாதாரக் குறியீடுகளை பெருமளவில் எய்திடுவதற்கான நோக்கங்களையும், வழிமுறைகளையும் கோடிட்டுக் காட்டும் **மாநில மக்கள்தொகைக் கட்டுப்பாடு கொள்கை** ஒன்று உருவாக்கப்படும்.

இந்திய நாட்டில், நகர்ப்புறங்களில் மக்கள் அதிகமாக வாழும் மாநிலங்களில் தமிழகம் முக்கியமான இடம் வகிக்கிறது. மேலும், நகர்ப்புற மக்கள்தொகையில் 30 விழுக்காட்டிற்கு அதிகமானவர்கள் குடிசைப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு, மாநிலத்தின் அனைத்து நகராட்சிகளிலும், மக்களிடையே சென்று பணியாற்றி தாய்சேய் நல மருத்துவ வசதிகள் கிடைக்கச் செய்வதை உறுதி செய்யும் வண்ணம், இவ்வரசு ஒரு புதிய **நகர்ப்புற சுகாதாரக் கொள்கையினை** உருவாக்கியுள்ளது.

மேற்சொன்ன அனைத்து நடவடிக்கைகளும் முறையாக உள்ளடங்கிய **தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் மேம்பாடு திட்டத்திற்கென** ரூ.650 கோடி நிதியுதவி கோரி உலக வங்கி அணுகப்பட்டுள்ளது. இவ்வரசு எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியின் காரணமாக இத்திட்டம் நடப்பாண்டில் மதிப்பீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. மாநிலத்தில் அடிப்படை மருத்துவ வசதிகள் அனைத்து மக்களுக்கும் சமமாகவும், எளிதிலும் கிடைக்கச் செய்வதற்கு இத்திட்டத்தின் செயலாக்கம் பெரிதும் உறுதுணை புரியும்.

மருத்துவமனைகளிலுள்ள வசதிகளை உயர்த்திடவும், கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறுவோருக்கு தரமான மருத்துவ வசதியை அளிப்பதற்காகவும், 'கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மகப்பேறு நோய் இயல் நிலையத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் பிரிவிற்கு சிறப்பான வரவேற்பு உள்ளது. கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் திட்டத்தினை ஏனைய மருத்துவமனைகளுக்கும் படிப்படியாக விரிவாக்கம் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 3

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கு, கோரிக்கை எண் 18-ன்கீழ் 2003-2004 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.1380.29 கோடி தொகையின் விவரம் பின்வருமாறு:—

(ரூபாய் கோடியில்)

மானியம்	திட்டத்தில் சேராதது	திட்டப் பணிகள்			
		மாநிலத் திட்டம்	மத்திய அரசு பொறுப் பேற்பவை	மத்திய அரசின் நிதியுதவி பெறுபவை	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
18 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	973.48	126.62	212.84	67.20	406.66

(ரூபாய் கோடியில்)

மானியம்	திட்டப் பணிகள் மற்றும் திட்டத்தில் சேராதது	திரும்ப வசூலிக்கப் பட்டவை. கூட்டப்பட வேண்டியுள்ளது	மொத்தம்
(1)	(7)	(8)	(9)
18 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	1380.14	0.15	1380.29

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்கீழ் உள்ள பல்வேறு இயக்ககங்களுக்கு கோரிக்கை எண் 18-ன்கீழ் 2003-2004 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகையின் விவரம் வருமாறு:—

(ரூ. இலட்சத்தில்)

1.	தலைமைச் செயலகம்	337.11
2.	மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககம்	26796.89
3.	மருத்துவக் கல்வி இயக்ககம்	46199.45
4.	பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககம்	50059.90
5.	குடும்ப நல இயக்ககம்	6728.08
6.	மருந்து கட்டுப்பாடு இயக்ககம்	516.47
7	இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம்	5229.37
8.	தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை	854.91
9.	டேனிடா தமிழ்நாடு பகுதி நல்வாழ்வுத் திட்ட இயக்ககம்	106.96
10.	பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்ட இயக்ககம்	1199.75
	மொத்தம்	**138028.89**

2003 ஏப்ரல் 3]

1. பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படும் கட்டுமான பணிகளுக்காக நிதி ஒதுக்கம் ரூ.28.33 கோடி ஒதுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட இயக்ககங்களின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

2. ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளுக்கென ரூ.84.44 கோடி தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் மானியக் கோரிக்கை எண் 31-ன்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கான நிதி, மருத்துவக் கல்வி இயக்ககத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

அத்தியாயம்-2

மருத்துவக் கல்வி

சிறந்த மருத்துவ சேவையை மக்களுக்கு அளிப்பதுடன், மருத்துவம், பல் மருத்துவம், மருத்துவம் சார்ந்த கல்வி மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துதல் ஆகியவையே மருத்துவக் கல்வி இயக்ககத்தின் முதன்மை நோக்கமாகும்.

மருத்துவ நிலையங்கள்

மாநிலத்தில் தற்போது 11 மருத்துவக் கல்லூரிகளும், 1 பல் மருத்துவக் கல்லூரியும், 2 இயன்முறை மருத்துவக் கல்லூரிகளும் மற்றும் 1 செவிலியர் பயிற்சிக் கல்லூரியும் அரசின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. இந்த இயக்ககத்தின்கீழ் இயங்கும் 43 மருத்துவமனைகளில் உள்ள ஒட்டுமொத்த படுக்கை வசதிகளின் எண்ணிக்கை 21,238. நாளொன்றுக்கு பயன்பெறும் உள்நோயாளி மற்றும் புறநோயாளிகளின் சராசரி எண்ணிக்கை முறையே 20,344 மற்றும் 68,054 ஆகும்.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள இடங்களின் விவரம்

(அ) பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பில் உள்ள இடங்களின் விவரம்:—

படிப்பின் பெயர்	மொத்த இடங்கள்
எம்.பி.பி.எஸ்.	1,255
பி.டி.எஸ்.	100
பி.எஸ்ஸி. (செவிலியர்)	25
இயன்முறை மருத்துவம்	50
மருந்தாக்கியல்	106
செவிலியர் பட்டயம்	745

(ஆ) பட்ட மேற்படிப்பில் உள்ள சிறப்பு படிப்பு மற்றும் அவற்றிற்கான இடங்கள் விவரம்:—

பாடத் திட்டம்	சிறப்பு படிப்பு எண்ணிக்கை	மொத்த சேர்க்கை இடங்கள்
பட்ட மேற்படிப்பு	23	416
பட்டய மேற்படிப்பு	17	476
எம்.டி.எஸ்.	7	18
உயர் சிறப்பு மேற்படிப்பு	16	73
எம். பார்மஸி	4	12
எம்.எஸ்ஸி. (செவிலியர்)	4	8

தனியார் துறையில் இயங்கும் சுயநிதி மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த நிறுவனங்களின் விவரம்:—

கல்லூரிகள்	மொத்த கல்லூரிகள்	மொத்த இடங்கள்
ஐ.ஆர்.டி. மருத்துவக் கல்லூரி பெருந்துறை (அரசு சார்ந்த கல்லூரி)	1	60
மருத்துவக் கல்லூரிகள்	2	200
பல் மருத்துவக் கல்லூரிகள்	8	560
மருந்தாக்கியல் கல்லூரிகள்	32	1,630
இயன்முறை மருத்துவம்	41	1925
செவிலியர் (பட்டப் படிப்பு)	35	1580
தொழிலிய நோய் மருத்துவம்	6	275

தேர்வு முறை

மருத்துவம்/பல் மருத்துவம்/ செவிலியர்/ இயன்முறை மருத்துவம்/ தொழிலிய நோய் மருத்துவம்/மருந்தாக்கியல் ஆகிய பட்டப் படிப்புகளுக்கு மருத்துவக் கல்வி இயக்குநரின் தலைமையிலான தேர்வுக் குழு ஒவ்வொரு வருடமும் அரசு வெளியிடும் கொள்கைக்கிணங்க ஒற்றைச் சாளர முறையில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறது. பட்ட மேற்படிப்பு, பட்டய மேற்படிப்பு, முதுநிலை பல் மருத்துவம், உயர் சிறப்பு மேற்படிப்பு ஆகிய இடங்களுக்கு பொது நுழைவுத் தேர்வினை தொடர்ந்து கலந்தாய்வு மூலம் தேர்வுக் குழுவால், இட ஒதுக்கீட்டினைப் பின்பற்றி மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். பட்டயப் படிப்பு (செவிலியர்) இடங்களுக்கும் தகுதி அடிப்படை (+2 மதிப்பெண்) மற்றும் கலந்தாய்வு மூலம் தேர்வுக் குழுவால் இட ஒதுக்கீடு முறையைப் பின்பற்றி மாணவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

புதிய மருத்துவக் கல்லூரிகள் மற்றும் முன்னரே உள்ள மருத்துவக் கல்லூரிகளின் மேம்பாடு

தேனி மாவட்டத்தில் ஒரு புதிய மருத்துவக் கல்லூரியையும் மற்றும் செவிலியர் கல்லூரியையும் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது. ஆண்டிப்பட்டி வட்டம் சண்முகசுந்தரபுரம் கிராமத்தில் இதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, ஹட்கோ (HUDCO) நிதியுதவியுடன் ரூ.12 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டப்படவுள்ளன.

வேலூர் மற்றும் கன்னியாகுமரியில் தொடங்கப்படவுள்ள மருத்துவக் கல்லூரிகளின் மருத்துவமனைகளுக்கு கட்டடம் கட்டுவதற்காக ரூ.10 கோடி நிதியுதவி பெறப்பட்டுள்ளது. ஐந்து மருத்துவக் கல்லூரிகளில் இந்திய மருத்துவக் கழகத்தின் (Medical Council of India) நெறிமுறைகளுக்கு இணங்க கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட முதல் கட்டமாக ரூ.10.01 கோடியில் மேம்பாடு திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

மனநல பாதுகாப்பு

சென்னையில் 1800 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு மனநல நிறுவனம் இயங்கி வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 1650 உள்நோயாளிகளும், 450 புறநோயாளிகளும் இந்நிறுவனத்தில் சிகிச்சை பெறுகின்றனர். ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் இந்நிறுவனத்திற்கென ஒரு நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இதோடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளிகள் சிகிச்சை வசதிகள் கொண்ட மனநலப் பிரிவு இயங்கி வருகிறது. மேலும் 8 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் போதை பழக்கத்திலிருந்து விடுவிக்கும் மையங்கள் (De-addiction Centres) அமைக்கப்பட்டுள்ளன.

மனநல நிறுவனத்தின் இயக்குநரே மனநலச் சட்டத்தின்கீழ் தனியார் மனநல மருத்துவமனைகள் நடத்திட உரிமம் வழங்கும் அலுவலர் ஆவார். இதுவரை 35 தனியார் மனநல மருத்துவமனைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

கிங் நோய் தடுப்பு மருந்து நிறுவனம்

கிண்டியிலுள்ள கிங் நோய் தடுப்பு நிறுவனம், நாட்டிலுள்ள தலைசிறந்த ஆய்வுக் கூடங்களில் ஒன்றாகும். இந்த நிலையத்தில் தடுப்பு ஊசி மருந்துகள் மற்றும் சீரம் தயாரிக்கப்படுகின்றன. இது ஒரு கற்பிக்கும் மற்றும் ஆராய்ச்சி நிலையமாகவும் திகழ்கிறது. நுண்ணுயிரியல் நஞ்சாய்வு பிரிவு, இந்திய அரசாங்கத்தாலும், உலக சுகாதார நிறுவனத்தாலும், தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்காக தேசிய இளம்பிள்ளைவாத நோய்த் தடுப்பு ஆய்வகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் 1988 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நிறுவப்பட்டது. மருத்துவ அறிவியலில் ஆராய்ச்சி மற்றும் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த மேற்படிப்புக்கான கல்வித் தரத்தை உன்னத நிலைக்கு உயர்த்துவது இதன் நோக்கமாகும். தற்போது 207 மருத்துவக் கல்வி நிறுவனங்கள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

அ. மண்டல மருத்துவ நூலகம்

இப்பல்கலைக்கழகத்தைச் சார்ந்த அனைத்து நிலையங்களின் நூலகங்களும் இப்பல்கலைக்கழகத்தின் டிஜிட்டல் நூலகத்துடன் இணைக்கப்படவுள்ளது. ரூபாய் 22.00 லட்சம் செலவில் வி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் 64 கே.பி. திறன் கொண்ட தொடரினைப் பெற்று

இன்டர்நெட் வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இந்நூலகத்தில் இ-மெயில் தொடர்பு வசதி ஏற்படுத்தி, அங்கத்தினருக்கு புத்தகங்கள் மற்றும் நாளிதழ்கள் பரிமாறிக்கொள்ளும் வசதிகள் உருவாக்கப்படும்.

ஆ. குருதி ஏற்றும் மருத்துவத் துறை

குருதி ஏற்றும் மருத்துவத் துறை, குருதி சேகரித்தல், அதனை ஆய்வு செய்தல், பாதுகாத்தல், குருதி ஏற்றும் செய்முறை ஆகிய பணிகளைச் செய்வதுடன் குருதி பொருட்களான இரத்த சிவப்பணுக்கள், புதிய உறைந்த பிளாஸ்மா, செறியூட்டப்பட்ட பிளேட்லெட், கிரையோபிரிசிபிடேட் போன்றவற்றை 24 மணி நேரமும் வழங்கி வருகிறது.

இ. பாடத் திட்ட மேம்பாட்டுத் துறை

தேவைகளுக்கேற்றவாறு மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த துறைகளின் பாடத் திட்டத்தை புதிய நோக்கில் மேம்படுத்துவதே இத்துறையின் நோக்கமாகும். ஐ.எஸ்.ஆர்.ஓ. உதவியுடன் செயற்கைக் கோள் வசதியினைப் பெற்று, தொலை மருத்துவக் கல்வியை (tele medical education) பிற மருத்துவக் கல்வி நிறுவனங்களுக்கு வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஈ. மரபியல் துறை

மரபியல் குறைபாடுகளில் சைட்டோஜெனடிக் பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்கு பரிந்துரை நிலையமாக விளங்கும் வகையில் ஒரு சைட்டோஜெனடிக் ஆய்வுக் கூடத்தினை நிறுவும் பணியினை இத்துறை மேற்கொண்டுள்ளது.

உ. கொள்ளை நோயியல் துறை

காசநோய், மலேரியா, இரத்த சோகை மற்றும் குழந்தை வளர்ச்சி ஆகிய முக்கிய இனங்கள் தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவித்தல் என்ற இரு நோக்கங்களை நிறைவேற்றுவதில் இத்துறை நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது.

ஆராய்ச்சிப் பணி என்பது களப் பணி மட்டுமல்லாமல் மருத்துவமனை சார்ந்ததாக அமைந்துள்ளது. தமிழகத்தில் காணப்படும் சுகாதாரம் தொடர்பான குறைபாடுகளை முன்னுரிமை அடிப்படையில் கண்டறிந்து அவற்றிற்குத் தீர்வு காணும் வகையில் தொடர்புடைய

மருத்துவக் கல்வித் திட்டத்தினை இத்துறை உருவாக்குகிறது. இத்திட்டத்திற்கான களப் பிரிவு மையங்களாக நந்திவரம் மற்றும் மதுரமங்கலம் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

2003-2004 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

1. சென்னை மகப்பேறு மற்றும் குழந்தை நல நிறுவனத்தில் அவசர அறுவை சிகிச்சை அரங்கம், மகப்பேறுக்கு முன்னர் சிகிச்சை அளிக்கும் பிரிவு உள்ளிட்ட மகப்பேறு பிரிவுக்கு ரூ.200 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுதல்.
2. 315 எம்.பி.,பி.எஸ். இடங்கள் கூடுதலாக உருவாக்குதல் தொடர்பாக 5 அரசு மருத்துவக் கல்லூரிகளில் ரூ.100 இலட்சம் செலவில் கூடுதல் கட்டமைப்பு வசதிகள் உருவாக்குதல்.
3. தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.62 இலட்சம் மதிப்பீட்டில் பிணவறை கட்டுதல்.
4. சென்னை பொது மருத்துவமனையில் உள்ள பெர்னார்ட் கதிர்வீச்சு நிறுவனத்தினை ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வலுப்படுத்துதல்.
5. மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுடன் மருத்துவக் கல்வி இயக்ககத்தின் இடையே கணினி நெட்வொர்க் வசதியை ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்துதல்.
6. தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோய் கண்டறியும் மைய ஆய்வுக் கட்டடம் ரூ.16.75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுதல்.
7. சென்னை குழந்தைகள் நல மருத்துவமனையில் மின்தூக்கியினை ரூ.22.40 இலட்சம் மதிப்பீட்டில் நவீனப்படுத்துதல்.
8. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதய நோய் சிகிச்சைப் பிரிவை ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் வலுப்படுத்துதல்.
9. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சிறுநீரக மருத்துவப் பிரிவு மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையை ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் வலுப்படுத்துதல்.

[2003 ஏப்ரல் 3

10. திருச்சிராப்பள்ளி அண்ணல் காந்தி நினைவு மருத்துவமனையில் இரத்த சுத்திகரிப்பு மற்றும் பிளாஸ்மா பிரித்தெடுக்கும் கருவியினை ரூ.26 இலட்சத்தில் நிறுவுதல்.

11. காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையை ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்துதல்.

12. மதுரை இராஜாஜி மருத்துவமனையில் முடவியல் பிரிவில் சி.ஆர்ம். (C-Arm) கருவியினை ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவுதல்.

13. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் கொள்ளை நோயியல் பிரிவினை ரூ.25 இலட்சத்தில் வலுப்படுத்துதல்.

14. பாம்புக்கடி மருந்து (ASV) உற்பத்தி செய்வதற்கென கிங் நோய்த் தடுப்பு மருந்து நிலையத்திற்கு ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் பிளாஸ்மாபோலிஸிஸ் கருவி வழங்குதல்.

அத்தியாயம்-3

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், மருத்துவ சேவை குறித்த அனைத்துத் திட்டங்களையும் திட்டமிட்டு நிறைவேற்றும் பொறுப்பில் உள்ளார். 25 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், 161 வட்ட மருத்துவமனைகள், 79 வட்டம் சாரா மருத்துவமனைகள், 12 மருந்தகங்கள், 11 நடமாடும் மருத்துவப் பிரிவுகள், 7 தாய்சேய்நல மருத்துவமனைகள், 5 காசநோய் மருத்துவமனைகள், 2 காசநோய் மருந்தகங்கள் மற்றும் ஒரு தொழுநோய் மறுவாழ்வு புனரமைப்பு நிலையம் ஆகிய தொடர் மருத்துவமனைகள் வாயிலாக மருத்துவப் பராமரிப்பு சேவை வழங்கும் பொறுப்பினை ஏற்கிறார்.

சென்னை நீங்கலாக ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் குடும்ப நலத் திட்டம் உள்ளிட்ட மருத்துவ நலப் பணிகளை செயலாக்கம் செய்வது மற்றும் அதனை மேற்பார்வையிடுதல் போன்றவற்றிற்கு மருத்துவ நலப் பணி இணை இயக்குநர்கள் பொறுப்பாவார்கள். மேலும் இந்த இணை இயக்குநர்கள் கண்ணொளி இழப்புத் தடுப்புத்

2003 ஏப்ரல் 3]

திட்டம், எய்ட்ஸ் கட்டுப்பாடு, மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சுகாதார நலப் பணிகள் திட்டங்கள் ஆகியவற்றை ஏனைய துறைகளுடன் இணைந்து செயலாக்கம் செய்வதில் உறுதுணையாக உள்ளனர்.

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மருத்துவமனைகளில் மொத்தம் 20,601 படுக்கை வசதிகள் உள்ளன. நாள் ஒன்றுக்கு சராசரியாக உள் நோயாளிகளின் எண்ணிக்கை 15,998 ஆகவும் புறநோயாளிகளின் எண்ணிக்கை 1,64,017 ஆகவும் உள்ளது.

சுகாதார அமைப்புகள் மேம்பாடு திட்டம்

ஏழை மக்களுக்கு மருத்துவ நலப் பணிகள் எளிதில் கிடைப்பதை உறுதி செய்வதில் மாவட்ட, வட்ட, வட்டம் சாரா மருத்துவமனைகளை மேம்பாடு செய்தல் மிக முக்கிய பங்காற்றுகிறது.

உலக வங்கி நிதி உதவியுடன் ரூ.650 கோடி மதிப்பீட்டில் செயலாக்கப்படவிருக்கும் சுகாதார அமைப்புகள் மேம்பாடு திட்டத்தில் மாவட்ட மற்றும் துணை மாவட்ட மருத்துவமனைகள் மேம்படுத்துதல் முக்கிய இடம் பெறுகிறது. அத்திட்டம் மூன்று முக்கிய பொருள்களை உள்ளடக்கி உள்ளது.

1. நிர்வாக மேம்பாடு மற்றும் கட்டமைப்பை வலுப்படுத்துதல்.

2. தரமான சிறந்த மருத்துவச் சேவையை அனைவருக்கும் எளிதில் கிடைக்கும் வாய்ப்பை மேம்படுத்துதல்.

3. சமுதாயம் மற்றும் தனியார் துறை பங்கேற்பினை வலுப்படுத்துதல்.

செயல்முறைத் திட்டங்கள் தயாரிக்கும் நடவடிக்கைகள் முழு வீச்சில் தொடங்கப்பட்டுவிட்டன.

விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள்

சாலை விபத்துக்கு உள்ளாவோர்க்கு உடனடி சிகிச்சை அளித்து அவர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கென கீழே குறிப்பிடப்பட்டுள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள் ரூ.338 இலட்சம் மதிப்பீட்டில் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன.

1. ஆம்பூர், 2. திண்டிவனம், 3. கோவில்பட்டி, 4. ஸ்ரீபெரும்புதூர், 5. கிருஷ்ணகிரி.

அடிக்கடி பெரிய அளவில் சாலை விபத்துகள் நடக்கின்ற தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் அமைந்துள்ள, பெரம்பலூர் தலைமையிட மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையம் ரூ.105 இலட்சம் மதிப்பீட்டில் வலுப்படுத்தப்படும்.

மண்டல நோய் கண்டறியும் மையங்கள்

பொது மக்களுக்கு நோய் கண்டறியும் வசதிகளை ஏற்படுத்துவதற்கென கீழ்க்காணும் ஏழு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் அதிநவீன மருத்துவ ஆய்வுக் கருவிகள் கொண்ட மண்டல நோய் கண்டறியும் மையங்கள், ரூ.21 கோடியில் நிறுவப்படுகின்றன.

1. திருப்பூர், 2. திருவண்ணாமலை, 3. விழுப்புரம், 4. புதுக்கோட்டை, 5. இராமநாதபுரம், 6. விருதுநகர், 7. நாமக்கல்.

காசநோய் கட்டுப்பாடு திட்டம்

தமிழ்நாட்டில் சுமார் 10 இலட்சம் காசநோயாளிகள் உள்ளனர். இம்மாநிலத்தில் பத்து காசநோய் நல நிலையங்களும், காசநோய் மருத்துவமனைகளும் உள்ளன. திருத்தி அமைக்கப்பட்ட தேசிய காசநோய் கட்டுப்பாடு திட்டம் தற்போது அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. காசநோய் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்கு உலக வங்கியின் பரிந்துரையின்படி வழக்கமான நிறுவன சிகிச்சைக்கு மாற்றாக புதிய குறுகிய காசநோய் சிகிச்சைத் திட்டம் (DOTS) செயல்படுத்தப்படுகிறது. இந்த புதிய திட்டத்தின்கீழ் காசநோயாளிகளுக்கு மிக சக்திவாய்ந்த மருந்துகள் பயிற்சி பெற்றவர்களின் நேரடி கண்காணிப்பில் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தினால் இம்மாநிலம் சளியால் நோய் பரவுதலை கட்டுப்படுத்தியதில் 91 சதவிகிதத்தையும், குணமாக்குதலில் 84 சதவிகிதத்தையும் அடைந்து, திருத்திய தேசிய காசநோய் கட்டுப்பாடு திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துள்ளது.

திருத்திய தேசிய காசநோய் கட்டுப்பாடு திட்டத்தில், அனைத்து மருத்துவ நிலையங்கள், தன்னார்வ நிறுவனங்கள், தனியார் மருத்துவமனைகள் மற்றும் சமுதாயம் முழுமையான ஈடுபாடு கொள்வதன் மூலம் மாநிலத்தில் காசநோயினைக் கட்டுப்படுத்த இயலும்.

பிறப்பிற்குமுன் கருவின் தன்மையறியும் தொழில்நுட்பம்

1994ஆம் வருடத்திய பிறப்பிற்குமுன் கருவின் தன்மை அறியும் தொழில்நுட்ப முறை (வரன்முறை மற்றும் தவறான பயன்பாட்டினை தடுத்தல்) சட்டம், தமிழ்நாட்டில் 1-1-1996 முதல் அமலுக்கு வந்தது. இச்சட்டத்தினை சிறப்பான வகையில் செயல்படுத்த, மாநில, மாவட்ட, வட்டார அளவில், ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர்கள் மற்றும் வட்டார மருத்துவமனைகளின் முதுநிலை மருத்துவ அலுவலர்கள் தத்தம் பகுதிகளில் இச்சட்டத்தை அமலாக்கும் அதிகாரிகளாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இச்சட்டத்தின்கீழ் இதுவரை 2,034 ஸ்கேன் மையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தீவிர கண்காணிப்பின் பலனாக 79 பதிவு செய்யப்படாத ஸ்கேன் மையங்கள் சட்டப்படி பறிமுதல் செய்யப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளன. பதிவு செய்யப்படாத 21 ஸ்கேன் மையங்களின்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 16 வழக்குகள்மீது குற்றவாளிகளுக்கு அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மனநல மருத்துவத் திட்டம்

மனநலமின்மை, சமுதாயத்தில் ஒரு பொது சுகாதாரப் பிரச்சினையாக உள்ளது. இப்பிரச்சினையை முனைப்புடன் உணர்வுபூர்வமாக அணுக வேண்டும். எனவே மாவட்ட மனநல மருத்துவத் திட்டம் தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயலாக்கப்பட்டு வருகின்றது. திட்டக் காலமான 5 ஆண்டுகளுக்கான திட்டச் செலவு ரூபாய் 1 கோடி ஆகும். சமுதாயத்தில் மனநல நோயாளிகளை விரைவில் கண்டறிதல் மற்றும் அவர்களுக்கு மனநல சிகிச்சை அளித்தல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். மருத்துவப் பணியாளர்கள், மருத்துவம் சாராத பணியாளர்கள் ஆகியோருக்கு பயிற்சி அளித்தல், மனநல சிகிச்சை அளித்தல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்றவை இத்திட்டத்தின் பல்வேறு அங்கங்களாகும்.

இத்திட்டத்தின் கட்டுப்பாடு அலுவலர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் ஆவார். சென்னையிலுள்ள மனநலக் காப்பகம், இத்திட்ட செயலாக்க ஒருங்கிணைப்பு நிறுவனமாகச் செயல்படுகிறது. தற்போது மாவட்ட மனநல மருத்துவத் திட்டம் திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. திருநெல்வேலி, தேனி, தஞ்சாவூர், பெரம்பலூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், சேலம் மற்றும் திருவண்ணாமலை

ஆகிய 9 மாவட்டங்களில் இத்திட்டத்தினை நீட்டிப்பதற்கென ரூ.10 கோடி வழங்கிட மைய அரசை அணுகியுள்ளோம்.

தமிழ்நாடு மாநில நோயாளர் நிதியுதவி நிறுவனம்

தமிழ்நாடு மாநில நோயாளர் நிதியுதவி நிறுவனம் என்ற அமைப்பினை, தமிழக அரசு ரூ.15 கோடி நிதியுடன் உருவாக்கி உள்ளது. இந்நிறுவனத்திற்கான நிதியினை மாநில அரசும் மைய அரசும் 2:1 என்ற விகிதாச்சாரத்தில் வழங்குகின்றன. இந்நிறுவனத்தை நிர்வகிப்பதற்கு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைச் செயலரை தலைவராகக் கொண்டு நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் இந்த நிர்வாகக் குழுவின் உறுப்பினர்-செயலர் ஆவார். அறிவிக்கை செய்யப்பட்ட அரசு மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை பெற இந்நிறுவனம் நிதியுதவி அளிக்கிறது. மேலும் முதலமைச்சர் பொது நிவாரண நிதித் திட்டத்தின் வாயிலாக அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகள் மூலம் உயிர் காக்கும் அறுவை சிகிச்சை மேற்கொள்ள 29 மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வாயிலாக ஏழை நோயாளிகளுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது.

2003-2004 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

1. வட்ட மருத்துவமனைகளில் ரூ.144 இலட்சம் மதிப்பீட்டில் 100 M.A. கதிர்வீச்சுக் கருவிகள் நிறுவி அதற்கான கட்டடங்கள் கட்டுதல்.
2. திருவண்ணாமலை தலைமையிட மருத்துவமனையில் ரூ.50.40 இலட்சம் மதிப்பீட்டில் 48 படுக்கை வசதிகள் கொண்ட கூடுதல் பிரிவு ஒன்று உருவாக்குதல்.
3. கரூர் தலைமையிட மருத்துவமனையில் அறுவை சிகிச்சை அரங்கத்துடன் கூடிய 24 படுக்கை வசதிகள் கொண்ட மகப்பேறு பிரிவு ரூ.55 இலட்சத்தில் கட்டுதல்.
4. முதுகுளத்தூர், திட்டக்குடி மற்றும் அரக்கோணம் ஆகிய இடங்களிலுள்ள அரசு மருத்துவமனைகளில் குளிர்சாதன வசதிகளுடன் கூடிய அறுவை சிகிச்சை அரங்கங்கள் ரூ.66 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுதல்.
5. மூன்று மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் ரூ.37.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டுதல் மற்றும் 75 கே.வி.ஏ. ஜெனரேட்டர் வசதி ஏற்படுத்துதல்.

6. ரூ.50 இலட்சம் செலவில் 25 மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளுக்கு தளவாடங்கள், படுக்கைகள் போன்றவை வழங்குதல்.
7. இராமநாதபுரம் தலைமையிட மருத்துவமனையில் ரூ.130 இலட்சம் செலவில் 100 கூடுதல் மின்விசிறி வசதிகள் செய்து கொடுத்தல்.
8. ஈரோடு தலைமையிட மருத்துவமனையில் ரூ.15.78 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு மின்தூக்கி அமைத்தல்.
9. திண்டுக்கல் தலைமையிட மருத்துவமனையில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் அறுவை சிகிச்சை அரங்கம் ஒன்று கட்டுதல்.
10. கும்பகோணம் தலைமையிட மருத்துவமனையில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் புறநோயாளிப் பிரிவு கட்டடம் கட்டுதல்.
11. 25 வட்டார மருத்துவமனைகளில் உள்ள 25 அறுவை சிகிச்சை அரங்கங்களுக்கு ரூ.14 இலட்சம் செலவில் குளிர் சாதன வசதிகள் செய்து தருதல்.
12. 27 வட்டார மருத்துவமனைகளில் ரூ.165 இலட்சம் செலவில் தொலைபேசி வசதிகள் செய்து கொடுத்தல்.
13. அனைத்து வட்டார தலைமையிட மருத்துவமனைகளுக்கு தளவாடங்கள் மற்றும் படுக்கைகள் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் வழங்குதல்.
14. சேலம் மாவட்டத்திலுள்ள ஓமலூர் அரசு மருத்துவமனையில் ரூ.30.50 இலட்சம் மதிப்பீட்டில் புறநோயாளிகள் பிரிவு கட்டுதல்.
15. 20 வட்டம்சாரா மருத்துவமனைகளில் தளவாடங்கள், படுக்கைகள் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் வழங்குதல்.
16. மாவட்ட மருத்துவமனைகளில் படிப்படியாக கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் பிரிவுகள் தொடங்குதல்.
17. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்திற்கு ரூ.4.50 இலட்சம் செலவில் கணினிகள், உபகரணங்கள் வழங்குதல்.
18. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்திற்கு ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் தானியங்கி காகிதம் வெட்டும் சாதனம் வழங்குதல்.

அத்தியாயம்-4

கண்ணொளி இழப்பு தடுப்புத் திட்டம்

இந்தியாவில் 1000 பேருக்கு 14 பேர் கண்பார்வையற்றவர்கள் என்ற நிலையை 1000-த்திற்கு 3 நபர்கள் எனக் குறைப்பதே தேசிய கண்ணொளி இழப்பு தடுப்புத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். தமிழ்நாடு மாநில பார்வை இழப்பு தடுப்புச் சங்கம் 01-04-1996 முதல் தொடங்கப்பட்டு, உலக வங்கி உதவியுடனான கண்புரைநோய்த் தடுப்பு திட்டத்தினை 30-06-2002 வரை ரூ.72.00 கோடி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தி வந்தது.

மேற்கண்ட திட்டத்தின்கீழ் அறுவை சிகிச்சை அரங்குடன் கூடிய 35 கண் சிகிச்சை படுக்கைப் பிரிவுகள் மற்றும் 315 கண் பரிசோதனை இருட்டறைகள் கட்டி முடிக்கப்பட்டு அவற்றிற்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. மொத்தம் 17,95,044 கண்புரை அறுவை சிகிச்சைகள் செய்து முடிக்கப்பட்டன. மேலும் 148 கண் மருத்துவர்கள் மற்றும் 73 செவிலியர்களுக்கு விழியுடன் ஆடிகள் பொருத்தும் (I.O.L.) பயிற்சி அளிக்கப்பட்டது. பொது மக்களுக்குத் தரமான கண் சிகிச்சை அளித்திட மருத்துவக் கல்வி நிறுவனங்கள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கு, நவீன மற்றும் உயர் தொழில் நுட்பத்துடன்கூடிய கண் அறுவை சிகிச்சைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

உலக வங்கி உதவியுடனான கண்புரை நோய்த் தடுப்புத் திட்டம் 30-06-2002 அன்று முடிவு பெற்றதைத் தொடர்ந்து, இத்திட்டம் 100 சதவீத உதவியுடன் மைய அரசால் தேசிய கண்ணொளி இழப்பு தடுப்புத் திட்டம் என்ற பெயரில் 01-07-2002 முதல் ரூ.715 இலட்சம் மதிப்பீட்டில் நடப்பாண்டில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தினை திறம்பட செயல்படுத்திடவும், கண்காணித்திடவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவிலான மாவட்ட கண்ணொளி இழப்பு தடுப்புச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரே இச்சங்கத்தின் தலைவராவார். தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் மாவட்ட நடமாடும் கண் சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றின் உதவியுடன் மாவட்ட கண்ணொளி இழப்பு தடுப்புச் சங்கம், கண் மருத்துவ சிகிச்சை முகாம்கள் நடத்தி வருகிறது. தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு கண்புரை அறுவை சிகிச்சைக்கு இச்சங்கம் நிதி உதவி

அளிக்கிறது. இத்திட்டத்தினைப்பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதும் இச்சங்கத்தின் நோக்கமாகும்.

2002-2003 ஆம் ஆண்டில் 3,22,000 கண்புரை அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. கண் சிகிச்சை வசதிகளை மேம்படுத்திட ரூ.132.80 இலட்சம் மதிப்பீட்டில் பொருள் உதவி அளிக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம்-5

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து

அடிப்படை சுகாதார வசதிகளை வழங்கிடும் நோக்குடன் பல்வேறு பொது சுகாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை உருவாக்கி இவ்வரசு செயல்படுத்தி வருகிறது.

ஆரம்ப சுகாதார நலன்

தமிழ்நாட்டில் 1411 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 8682 துணை சுகாதார மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையங்கள் வாயிலாக நோய்த் தடுப்பு, உடல்நல மேம்பாடு, நோய் களைதல் மற்றும் நோயற்ற வாழ்வு அளித்தல் போன்ற பணிகள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன.. ஏப்ரல் 2002 முதல் பிப்ரவரி மாதம் 2003 வரை 498 இலட்சம் புற நோயாளிகள் ஆரம்ப சுகாதார நிலையங்களின் வாயிலாக சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். 2000-2001 முதல் 2002-2003ஆம் ஆண்டு வரை நாளொன்றுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சராசரியாக பயனடைந்த புறநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகளின் எண்ணிக்கையைக் காட்டும் வரைபடங்கள் முறையே இணைப்பு 1 மற்றும் இணைப்பு 2-ல் உள்ளன. அனைத்து வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பராமரிப்பதில், சமுதாயத்தை ஈடுபடச் செய்யும் நோக்கத்துடன் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சமுதாய நலக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல்

ஒவ்வொரு வட்டாரத்திலும் 30 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவ நிலையமாவது அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. இந்த நிலையங்கள் சிறப்பு மருத்துவர் மற்றும் நவீன கருவிகளான அல்ட்ரா சோனோகிராம், இ.சி.ஜி., ஊடுகதிர் இயந்திர

சாதனப் பிரிவு, பகுப்பாய்வு செய்ய ஆய்வகம் மற்றும் நோயாளர் ஊர்தி போன்ற வசதிகள் கொண்டதாக இருக்கும். 58 ஆரம்ப சுகாதார நிலையங்களில், 2002-2003 ஆம் ஆண்டில் மேம்பாடு செய்யும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

ஆரம்ப சுகாதார நலனை மேம்படுத்துதல்

ஆரம்ப சுகாதார நிலையங்களில் அளிக்கும் சிகிச்சையின் தரத்தை மேம்படுத்த, ஒவ்வொரு வட்டாரத்திலும் இருதய நோய்களைக் கண்டறிய எடுத்துச் செல்ல வசதியுள்ள இருதய மின்வரையும் மருத்துவக் கருவி வழங்கப்பட்டுள்ளது. ஆரம்ப கட்டத்திலேயே சர்க்கரை நோயைக் கண்டறியும் சாதனமான குளுக்கோ மீட்டர் எனும் மருத்துவக் கருவியும்கூட ஒவ்வொரு வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திலும் அளிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள அறுவை சிகிச்சை அரங்கிற்கு சிறிய அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ளும்பொருட்டு பாயில் உபகரணம் (Boyle's apparatus), மேசைகள் மற்றும் அறுவை சிகிச்சைக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

துணை சுகாதார மையங்களில் பணிபுரியும் கிராம சுகாதார செவிலியர்களுக்கு இரத்த அழுத்தத்தைக் கண்டறியும் பயிற்சியும் அதற்குரிய பரிசோதனைக் கருவிகளும் மற்றும் இதயத் துடிப்பு மானிகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் துணை சுகாதார மையங்களுக்கு அடிப்படை அறுவை சிகிச்சைக் கருவிகள் மற்றும் எடை பார்க்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மருத்துவப் பிரிவில் தகவல் தொழில்நுட்பத்தை அதிகமாகப் பயன்படுத்தும் வகையில், அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் கணினிகள் வழங்கப்பட்டு, மின்அஞ்சல் முகவரியும் பெறப்பட்டுள்ளது. மதுரை, தேனி, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ சேவையை நிறைவு செய்யும் வகையில் மேலும் 500 மருத்துவர்களை நியமித்து காலியிடங்களை நிரப்புவதற்கு அரசு உத்தேசித்துள்ளது.

சிறப்பு மருத்துவ முகாம்கள்

புற்றுநோய், சர்க்கரை நோய், இருதய நோய் போன்றவை அதிகரித்துவரும் இன்றைய சூழ்நிலையில் அவற்றிற்கு சிறப்பு சிகிச்சை பெற போதுமான வசதிகள் கிராமப்புறங்களில் கிடைப்பதில்லை. எனவே கிராமப்புற மக்களுக்கு அவர்தம் வாழும் பகுதியிலேயே புற்றுநோய், நீரிழிவு நோய், இருதய நோய்கள், இரத்த அழுத்தம் மற்றும் வயது முதிர்ச்சியினால் ஏற்படும் நோய்கள் ஆகியவற்றைக் கண்டறிந்து சிறப்பு சிகிச்சை அளித்திட ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 385 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 7.98 இலட்சம் மக்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதில் 5.24 சதவிகிதம் நீரிழிவு நோய் உள்ளவர்களாகவும், 5.02 சதவிகிதம் இரத்தம் சம்பந்தப்பட்ட நோய் மற்றும் இரத்த அழுத்தம் உடையவர்களாகவும், 0.54 சதவிகிதம் புற்றுநோய் கொண்டவர்களாகவும், 22.4 சதவிகிதம் முதுமை காரணமாக ஏற்படும் நோய் உள்ளவர்களாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பு மருத்துவ முகாம்களில் கண்டறியப்பட்ட நோய்களின் விவரங்கள் குறித்த வரைபடம் இணைப்பு 3-ல் உள்ளது.

நடமாடும் மருத்துவப் பணிகள்

மலைவாழ் மக்களுக்கும், போக்குவரத்து வசதிகளற்ற மற்றும் எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கும் தேவையான மருத்துவ நலச் சேவைகள் அளிக்க 25 நடமாடும் மருத்துவப் பணிப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் 20 நடமாடும் மருத்துவப் பணிப் பிரிவுகள் நடப்பாண்டில் தொடங்கப்படவுள்ளன. இப்பிரிவுகளின் மூலமாக இதுவரை 1,79,571 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

தாய் சேய் நலப் பணிகள்

இத்துறையின் பணிகளில் தாய் சேய் நலப் பணிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. கருவுற்ற தாய்மார்களைப் பதிவு செய்தல், கருவுற்ற தாய்மார்களைப் பரிசோதித்தல், ஜன்னி மற்றும் ஏனைய நோய்கள் ஏற்படாவண்ணம் தடுக்க தடுப்பூசி போடுதல், பேறுகால பராமரிப்பு மற்றும் பேறுகால பின் பராமரிப்பு அளித்தல் போன்ற பணிகள் அளிக்கப்படுகின்றன. தற்பொழுது மாநிலத்தில் 89.9 சதவீதம்

பிரசவங்கள் மருத்துவ நிலையங்களில் நடைபெறுகின்றன. 2000-2001 முதல் 2002-2003 ஆம் ஆண்டு வரை ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெற்ற பிரசவங்களின் எண்ணிக்கையைக் காட்டும் வரைபடம் இணைப்பு 4-ல் உள்ளது.

தடுப்பூசிகளால் தவிர்க்கப்படக் கூடிய நோய்கள், தடுப்பூசித் திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் 100 சதவீதம் தடுக்கப்படுகின்றன. வழக்கமான தடுப்பூசித் திட்டத்துடன் இளம்பிள்ளைவாத நோயினை அறவே ஒழிக்க ஒரு வழிமுறையாக ஆண்டுதோறும் தீவிர இளம்பிள்ளைவாத சொட்டு மருந்து முகாம்கள் நடத்தப்பட்டு 5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் கூடுதலாக 2 தவணைகள் சொட்டு மருந்து கொடுக்கப்படுகிறது. இந்த ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் தேதி மற்றும் பிப்ரவரி மாதம் 9ஆம் தேதி, முதல் சுற்றில் ஐந்து வயதுக்கு உட்பட்ட 73 இலட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளது. சிறந்த முறையில் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் தடுப்பூசித் திட்டம் மற்றும் தீவிர சொட்டு மருந்து முகாம்கள் மூலமாக இம்மாநிலம் கடந்த மூன்று ஆண்டுகளாக இளம்பிள்ளை வாத நோய் இல்லாத மாநிலமாகத் திகழ்கிறது. தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் தடுப்பூசித் திட்டம் மூலமாக தடுப்பூசிகளினால் தடுக்கக்கூடிய மற்ற நோய்களும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

சென்னை மாநகரில் 2003 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து ஹெப்படைடிஸ் 'பி' தடுப்பூசி வழங்கப்படும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டில் விருதுநகர், இராமநாதபுரம், மதுரை மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கு விரிவாக்கப்படும்.

பள்ளிக் குழந்தைகள் நலத் திட்டம்

இன்றைய பள்ளி மாணவன் நாளைய குடிமகன் என்பதால் அனைத்துப் பள்ளி மாணவர்களிடையே உடல் வலிமை, மன வலிமை, உணர்வுப்பூர்வமான மற்றும் அறிவுப்பூர்வமான வளர்ச்சி பரிபூரணமாக அடைந்திட இத்திட்டம் பெரிதும் உதவுகிறது. இத்திட்டத்தில் இருதயம் சம்பந்தப்பட்ட நோய், கண், பல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. எல்லா வியாழக்கிழமைகளும் பள்ளி சுகாதார தினங்களாகும். சிறப்பு மருத்துவ கவனிப்பு தேவைப்படும் மாணவர்கள் மேல் மற்றும் சிறப்பு சிகிச்சைக்காக உயர் மருத்துவ

நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். ஒவ்வொரு சனிக்கிழமையும் உயர் மருத்துவ மேல் சிகிச்சை நாளாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2003 வரை 70.6 இலட்சம் பள்ளிக் குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டு 36.1 இலட்சம் குழந்தைகள் சிகிச்சை பெற்றுள்ளனர். 2002-2003 ஆம் ஆண்டில் பள்ளிக் குழந்தைகளிடையே காணப்பட்ட நோய்களின் விவரத்தைக் காட்டும் வரைபடம் இணைப்பு 5-ல் உள்ளது.

ஊட்டச் சத்துக் குறைபாடு

தமிழ்நாட்டில் பெண்களிடையே இரத்த சோகை நோய் குறிப்பாக கருவுற்ற தாய்மார்களிடையே அதிக அளவில் உள்ளது. இது பேறுகாலத்தில் சிக்கல் ஏற்படுத்துவதுடன் தாய் மரணம் மற்றும் சிசு மரணம் ஏற்பட வழிவகை செய்கிறது. இரத்த சோகை நோயைத் தடுப்பதற்கு, பேறு காலத்தில் தாய்மார்களுக்கு இரும்புச் சத்து மாத்திரை வழங்கப்படுகிறது. இச்சிக்கலை தீர்ப்பதற்கென ஒவ்வொரு வளர் இளம் பெண்ணுக்கும் இரும்புச் சத்து மாத்திரைகள் வாராந்திர அடிப்படையில் தன்னுதவிக் குழு, அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனப் பெண்கள் மூலமாக வழங்கப்படுகின்றன. இதனால் ஒவ்வொரு வாரமும் 53 இலட்சம் வளர் இளம் பெண்கள் பயனடைகின்றனர்.

ஐந்து வயதிற்குக் குறைவான குழந்தைகளிடம் காணப்படும் வைட்டமின் 'ஏ' குறைபாட்டைத் தடுப்பதற்காக, இரண்டு இலட்சம் சர்வதேச அளவு, வைட்டமின் 'ஏ' வருடத்திற்கு இரண்டு முறை அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

குழந்தைகளின் முறையான வளர்ச்சிக்கு அயோடின் ஒரு தேவையான ஊட்டச் சத்து. முன்கழுத்துக்கழலை நோய் அயோடின் சத்துக் குறைவால் ஏற்படுகிறது. அயோடின் சத்தில்லாத உப்பு வியாபாரம் செய்வதற்கு 2005 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் மானிய விலையில் அயோடின் சத்துக் கலந்த உப்பு பொது விநியோக முறையில் விற்பனை செய்யப்படுகிறது. குழந்தைகளிடையே காணப்படும் அயோடின் சத்துக் குறைவைத் தடுப்பதற்காக அங்கன்வாடி மையங்கள் மூலமாகவும் இந்த உப்பு வழங்கப்படுகிறது.

[2003 ஏப்ரல் 3

தேசியக் கொள்ளை நோய் கண்காணிப்புத் திட்டம்

கொள்ளை நோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான ஏற்பாடுகளைச் செய்ய கொள்ளை நோய்த் தடுப்புக் கண்காணிப்பு அவசியம். திடீரென கொள்ளை நோய்கள் ஏற்படுவதை முன்கூட்டியே அறிந்து தேவையான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள இது உதவுகிறது. தேசிய கொள்ளை நோய் கண்காணிப்புத் திட்டம் முன்மாதிரித் திட்டமாக 1997 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் இத்திட்டம் தருமபுரி, விழுப்புரம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

நோய்களைக் கண்டறிய ஒருங்கிணைந்த கண்காணிப்புத் திட்டம்

உலக வங்கி உதவியுடன் மாநில அளவில் நோய்களின் விவரங்களைக் கண்டறிவதற்காக ஒருங்கிணைந்த கண்காணிப்புத் திட்டம் தமிழ்நாட்டில் தொடங்கப்படவுள்ளது. இது சார்பாக ஒரு முன்னோடி ஆய்வுக் குழு கடந்த பிப்ரவரி 2003-ல் ஆய்வு செய்தது. வரைவு செயலாக்கத் திட்டம் மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மாநில அளவில் நோய் கண்காணிப்பினை தீவிரமாக்கிட மாவட்டம் மற்றும் வட்ட அளவில் உள்ள ஆய்வுக் கூடங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

தொற்று நோய்க் கட்டுப்பாடு

மலேரியா நோய்

மாநிலத்தில் நகர்ப்புறம், கடற்கரையோரம் மற்றும் ஆற்றுப்படுகைகளில் உள்ள பகுதிகளில் மலேரியா நோய் பரவலாக உள்ளது. தமிழகத்தில் மொத்த மலேரியா நிகழ்வுகளில் 70 சதவீதம் நகர்ப்புறங்களில் காணப்படுகிறது. அதிலும் குறிப்பாக சென்னை மிகவும் பாதிக்கப்பட்ட பகுதியாகும்.

சென்னையில் வட சென்னையில்தான் மலேரியா நோய் அதிகம் காணப்படுகிறது. எனவே மலேரியா காய்ச்சலை உண்டாக்கும் ஒட்டுண்ணியை ஒழித்து மலேரியா நோயற்ற சென்னையை உருவாக்க, பொது சுகாதாரத் துறையும், சென்னை மாநகராட்சியும் இணைந்து கடந்த ஆண்டு செப்டம்பர் 15 முதல் டிசம்பர் 15 வரை "மலேரியா இல்லா சென்னை இயக்கம்" நடத்தினர். இதன் காரணமாக 1228 மலேரியா நோயாளிகள் கண்டறியப்பட்டு, பூரண சிகிச்சை அளிக்கப்பட்டனர்.

2003 ஏப்ரல் 3]

மலேரியா நோய் பரப்பும் கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களைக் குறைக்க தடுப்பு முறைகளை மக்கள் கடைப்பிடிக்கும்படி அறிவுறுத்தப்பட்டனர்.

யானைக்கால் நோய்

தமிழகத்தில் 1957 ஆம் ஆண்டு முதல் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. யானைக்கால் நோய் ஒழிப்பில் அண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தால் "ஒட்டுமொத்த டி.இ.சி." சிகிச்சை முறை மூலம் வருடத்திற்கு ஒரு டி.இ.சி. தொகுப்பு வீதம் ஐந்து ஆண்டுகளுக்குத் தொடர்ந்து உட்கொண்டால் யானைக்கால் நோயை ஒழிக்க முடியும். இந்த நோயினை ஒழிப்பதற்கு மார்ச் 2003-ல் யானைக்கால் நோய் பரவியுள்ள 13 மாவட்டங்களில் 23 கோடி மக்களுக்கு டி.இ.சி. ஒட்டுமொத்த சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்

தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் 1954-55 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தொழுநோய் தடுப்புத் திட்டத்தில் தமிழ்நாடு பாராட்டத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. 1983 ஆம் ஆண்டு இருந்த நோயின் தன்மை 10,000 மக்கள்தொகைக்கு 118 என்ற நிலை தற்போது படிப்படியாக குறைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் முழுமையான தொழுநோயற்ற நிலையை உருவாக்கிட முன்னேறி வருகிறது. எதிர்வரும் ஆண்டுகளில் பத்தாயிரம் மக்கள்தொகைக்கு ஒருவருக்கும் குறைவான இலக்கினை அடைந்துவிட முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொழுநோயை முற்றிலும் ஒழிப்பதற்காக எம்எல்இசி. நான்காவது சுற்று, சமுதாயத்தில் மறைந்திருக்கும் நோய் நிகழ்வுகளை கண்டுபிடிப்பதற்கும், குறிப்பாக நகர்ப்புறங்களில் உள்ளவர்களைக் கண்டறிவதற்கும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் தொடங்கப்பட்டுள்ளது.

வயிற்றுப்போக்கு

தீவிர வயிற்றுப்போக்கு மற்றும் சந்தேகத்திற்குரிய காலரா போன்ற நீரினால் உண்டாகும் நோய்கள் பரவலாக தமிழ்நாட்டில் உள்ளன. 2002 ஆம் ஆண்டில் முன் தடுப்பு நடவடிக்கையாக 2,232 காலரா தடுப்பு ஊசிகள் போடப்பட்டுள்ளன. மேலும் 60,507 குடிநீர் நிலைகள் குளோரினேசன் செய்யப்பட்டன. தீவிர வயிற்றுப்போக்கு ஏற்பட்டவர்களுக்கு ஓ.ஆர்.எஸ். பயன்படுத்தும் விழிப்புணர்வு நம் மக்களிடையே சுகாதாரக் கல்வி மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 3

நீர் மற்றும் உணவுப் பாதுகாப்பு

சென்னை மற்றும் கோயம்புத்தூரில் நீர் பகுப்பாய்வுக் கூடங்கள் நிறுவப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீரில் தூய்மைக் கேட்டை கண்டறிய நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. பிப்ரவரி 2003 முடிய 22,671 நீர் மாதிரிகள் இந்த இரு ஆய்வுக் கூடங்களில் ஆய்வு செய்யப்பட்டன. காற்றின் தரத்தை அறியும் பொருட்டு காற்றிலுள்ள மாசு தொடர்பான கணக்கெடுப்பும் இந்த ஆய்வுக் கூடங்களில் மேற்கொள்ளப்படுகிறது.

உணவுப் பாதுகாப்புக்கு இச்செயலாக்கத் திட்டத்தில் முக்கிய இடம் கொடுக்கப்பட வேண்டியுள்ளது. இந்நோக்கத்திற்காக 1954 ஆம் ஆண்டின் உணவுக் கலப்பட தடைச் சட்டம் மற்றும் 1955 ஆம் ஆண்டின் தமிழ்நாடு உணவுக் கலப்படத் தடை விதிகள் ஆகியவை நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

உணவு மாதிரிகள், 7 உணவுப் பகுப்பாய்வுக் கூடங்களில் ஆய்வு செய்யப்படுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் 2,737 மாதிரிகள் எடுக்கப்பட்டு அதில் 530 உணவு மாதிரிகள் கலப்படம் என்று கண்டறியப்பட்டுள்ளன. மேற்படி கலப்படத்தின் சதவீதம் 19.36 ஆகும். 244 வழக்குகள் நீதிமன்றங்களில் தொடரப்பட்டுள்ளன. இவ்வருடத்தில் 58 வழக்குகள் நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளன. மேற்படி 11 வழக்குகளில் அபராதமும், மீதி 47 வழக்குகளில் அபராதத்துடன் சிறை தண்டனையும் வழங்கப்பட்டுள்ளன.

சமுதாய நலனைக் கருத்தில் கொண்டு தமிழகத்தில் 19-11-2001 முதல் மெல்லும் புகையிலை, குட்கா, பான்மசாலா மற்றும் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும் பொருட்களை விற்பனை செய்திட 5 வருடங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொது இடங்களில் புகைபிடித்தல் மற்றும் துப்புதலுக்குத் தடை

பொது இடங்களில் புகை பிடிப்பதற்கும் துப்புவதற்கும் தடைசெய்யும் சட்டம் இயற்றப்பட்டு குடியரசுத்தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டு **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ் விதிகள் விரைவில் இயற்றப்படவுள்ளன.

2003 ஏப்ரல் 3]

பிறப்பு இறப்புப் பதிவு

பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டம் 1969-ன்படி அனைத்து பிறப்பு இறப்புகளும் கட்டாயமாக பதிவு செய்தல் வேண்டும். தமிழ்நாட்டில் பிறப்புப் பதிவு 95 சதவிகிதமாகவும் இறப்புப் பதிவு 80 விழுக்காடாகவும் பதிவாகியுள்ளன. மாநிலத்தில் அனைத்து பிறப்பு, இறப்புகளையும் பதிவு செய்வது நமது நோக்கமாகும். தேசிய அளவிலான பலநோக்கு அடையாள அட்டை வழங்கும் திட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டம் திருவாடனை வட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்குரிய பணியாளர்களுக்கு விழிப்புணர்வுப் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

பொது சுகாதாரப் பயிற்சி மற்றும் தொடர்கல்வி

மருத்துவ அலுவலர்களும் களப்பணியாளர்களும் ஒவ்வொரு திட்டத்திலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினை அறிந்துகொள்ளும் வகையில் பல்வேறு பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. எழும்பூர், பூந்தமல்லி, மதுரை, சேலம், விழுப்புரம், காந்திகிராமம் மற்றும் திருவரங்குளம் ஆகிய இடங்களில் வட்டாரப் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. முறையான நீண்டநாள் பயிற்சிகள், 5 பல்நோக்கு சுகாதாரப்பணியாளர் (பெண்கள்) பயிற்சிப் பள்ளிகளிலும் ஒரு பல்நோக்கு சுகாதார மேற்பார்வையாளர்கள் (பெண்கள்) பயிற்சிப்பள்ளியிலும் நடத்தப்படுகின்றன. மேலும் புற்றுநோய் நிறுவனம், ஸ்பேஸ்டிக் சொசைட்டி போன்ற புகழ்பெற்ற நிறுவனங்களும் பயிற்சி அளிப்பதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

2003-2004 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

1. ரூ.30 இலட்சம் மொத்த செலவில் 600 துணை சுகாதார மையங்களுக்கு மின்வசதி செய்து கொடுத்தல்.
2. சேலம் மற்றும் மதுரையில் ரூ. 49.4 இலட்சம் மொத்த செலவில் ஒரு கணினிப் பயிற்சி மையம் நிறுவுதல்.
3. ஹெப்படைடிஸ்-பி தடுப்பூசி வழங்கும் திட்டம் மேலும் 4 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்துதல்.
4. பள்ளி செல்லும் சிறார்களுக்காக தனியார் பல் மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்து தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவப் பிரிவினை அமைத்தல்.

[2003 ஏப்ரல் 3

அத்தியாயம்-6

குடும்ப நலத் திட்டம்

மக்கள்தொகை பெருக்கத்தை நிலைப்படுத்தும் நடவடிக்கைகளும் மற்றும் பொது சுகாதார நடவடிக்கைகளும் ஒருமித்து, செம்மையாக அமலாக்கப்படும்போது, மக்களின் சமூக, பொருளாதார முன்னேற்றம் குறிப்பிடும்படி உயர்ந்திடும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

தேசிய குடும்ப நலத் திட்டம் 1956 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் மக்கள் தாமாகவே விரும்பி ஏற்றுக்கொள்ளும் திட்டமாக செயல்பட்டு வருகிறது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன் தாய்சேய் நலத்தை மேம்படுத்தி அதன் மூலம் மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் குடும்ப நலத் திட்டம் மக்கள் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. "சமுதாயத் தேவைகளின் மதிப்பீட்டு அணுகுமுறையை" பின்பற்றி குடும்ப நலத் திட்டங்கள் தமிழ்நாட்டில் தற்போது செயல்படுத்தப்படுகின்றன.

குடும்ப நலத் திட்ட செயல்திறன்

மைய அரசால் 2000 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பதிவு அமைப்பின் அடிப்படையில் தமிழகத்தின் பிறப்பு மற்றும் நோய் முதலிய சமுதாய நிலை புள்ளிவிவரங்கள் பின்வருமாறு:-

பிறப்பு விகிதம்	19.3/1000 மக்கள்தொகைக்கு
இறப்பு விகிதம்	7.9/1000 மக்கள்தொகைக்கு
சிசு மரண விகிதம்	51/1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு
மகப்பேறு தாய்மார்கள் இறப்பு விகிதம்	1.3/1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு
இயற்கை வளர்ச்சி விகிதம்	1.14 விழுக்காடு

2003 ஏப்ரல் 3]

இலக்குகள்

பத்தாம் ஐந்தாண்டு திட்டக் கால இறுதியில் (2007-ல்) எய்த வேண்டிய குடும்ப நலத் திட்ட இலக்குகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1.	சிசு மரண விகிதம்	30/1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு
2.	பிறப்பு விகிதம்	15/1000 மக்கள்தொகை
3.	மகப்பேறு தாய்மார்கள் இறப்பு விகிதம்	<1/1000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு
4.	மொத்த கருத்தரிப்பு விகிதம்	1.7
5.	கணவன் மனைவி பாதுகாப்பு விகிதம்	65 விழுக்காடு
6.	உயர் பிறப்பு வரிசை குறைப்பு	10 விழுக்காடு
7.	கருத்தடை முறையில் ஆண்வர்க்க பங்கேற்பு	10 விழுக்காடு

குடும்ப நலத் திட்ட செயல்திறன்

2002-2003 ஆம் ஆண்டில் எய்திய குடும்ப நலத் திட்ட செயல்திறன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

வ. எண்	குடும்ப நலத் திட்ட முறைகள்	செயல்திறன் (எண்ணிக்கையில்)
1.	குடும்ப நல அறுவை சிகிச்சை	4,00,944
2.	கருத்தடை வளையம்	4,11,778
3.	வாய்வழி மாத்திரை உபயோகிப்போர்	1,49,935
4.	ஆணுறை உபயோகிப்போர்	1,90,489

மாநிலத்தில் 2002-2003 ஆம் ஆண்டில் மொத்த குடும்ப நல அறுவை சிகிச்சைகளில், 57 விழுக்காடு அரசு மருத்துவமனைகளிலும், 10 விழுக்காடு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிலும், 25 விழுக்காடு அங்கீகரிக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகளிலும், 3 விழுக்காடு உள்ளாட்சி அமைப்பு மருத்துவமனைகளிலும், மீதமுள்ளவை அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளிலும் நடைபெற்றன.

[2003 ஏப்ரல் 3

குடும்ப நல அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் தாய்மார்களுக்கான காப்பீட்டுறுதித் திட்டம்

தமிழ்நாட்டில் குடும்ப நல அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் தாய்மார்களுக்காக காப்பீட்டுறுதித் திட்டம் என்ற ஒரு சிறப்புத் திட்டம் பிப்ரவரி 2001 முதல் சோதனை முறையில் ஓராண்டுக் காலத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் குடும்ப நல அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் தாய்மார்களில் எவரேனும் அரசு, உள்ளாட்சி நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் மருத்துவமனைகள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ நிலையங்களில் உயிரிழக்க நேரிட்டால் ரூபாய் 2 இலட்சம் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும். மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் 30 நாட்களுக்குள் இறக்க நேரிட்டால் ரூ.25,000/- காப்பீட்டுத் தொகை வழங்கப்படும். இத்தொகை மத்திய அரசு வழங்கும் இழப்பீட்டுத் தொகையுடன் சேர்த்து வழங்கப்படும். இத்திட்டம் தேசிய காப்பீட்டுறுதிக் கழகத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தமிழக அரசு இத்திட்டத்தை 30-4-2003 வரை மேலும் நீட்டித்து ஆணை வழங்கியுள்ளது.

கவனத்துக்குரியவையும் அணுகுமுறைகளும்

இந்திய நாட்டின் ஏனைய மாநிலங்களை ஒப்பிடும்போது நம் மாநிலத்தில் பிறப்பு மற்றும் நோய் தொடர்பான சமுதாய புள்ளி விவரங்கள் மிகவும் சிறப்பாக உள்ளன. எனினும் கவனத்தில் கொள்ள வேண்டிய சில முக்கிய பொருள்கள் இன்னும் தொடர்கின்றன.

1. இரண்டிற்கு மேற்பட்ட குழந்தைகள் பிறப்பு விகிதம் தற்போதும் அதிகமாக (21.6) நிலவி வருவதால் பிறப்பு விகிதத்தில் (19.2) தேக்க நிலை உருவாகியுள்ளது. பிறப்பிற்கு இடையே இடைவெளி விடுதல் மற்றும் குடும்ப நல அறுவை சிகிச்சை ஆகிய குடும்ப நலத் திட்ட வழிமுறைகளின் தேவை இன்னும் 13 விழுக்காடு நிறைவேற்றப்படாமல் இருப்பது ஆய்வில் தெரிய வருகிறது.

2. சிசு மரண விகிதம் 1000 பிறப்பிற்கு 51 என்ற நிலையில் தேக்கமடைந்துள்ளது. பிறந்த ஒரு மாத காலத்திற்குள் இறக்கும் குழந்தைகளின் நிகழ்வுகள் சிசு மரணத்தில் 75 விழுக்காடாக உள்ளது. இந்த அளவை குறைக்காவிடின் 1000-க்கு 30 சிசு மரண விகிதம் என்ற நம்முடைய இலக்கினை எய்திட இயலாது.

2003 ஏப்ரல் 3]

3. பேறுகால மரணம் 1000 பிறந்த குழந்தைக்கு 1.3 என்ற நிலை தொடர்ந்து கவலை தரக்கூடியதாக உள்ளது. தமிழகத்தில் கருத்தரிக்கும் வயதுடைய மகளிரில் பெரும்பாலானோர் இரத்த சோகையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பேறுகால மரணத்திற்கு இது ஒரு முக்கிய காரணமாகும்.

குழந்தைகள் பிறப்பு மற்றும் சிசு மரண விகிதத்தில் உள்ள தேக்க நிலையைப் போக்கிடவும், பேறுகால மரணத்தினை எதிர்பார்க்கும் அளவிற்குக் குறைத்திடவும் கீழ்வரும் அணுகுமுறைகள் பின்பற்றப்படும்:

1. பேறுகால மற்றும் குழந்தைகள் நலப் பணிகளை அளித்திட அரசு மருத்துவ அமைப்புகளில் உள்ள கட்டமைப்பு வசதிகள் உயர்த்தப்படும்.

2. தெரிந்தெடுக்கப்பட்ட மருத்துவ நிறுவனங்களில் அவசர பேறுகால வ்சதிகள் ஏற்படுத்துவதுடன் அந்நிகழ்வுகளுக்கு போக்குவரத்து வசதிகளும் உருவாக்கித் தரப்படும்.

3. குறிப்பாக போதிய அளவு மருத்துவ வசதிகள் இல்லாத பகுதிகளில் தனியார் தொண்டு நிறுவனங்களின் பங்கினை ஊக்குவித்து அவசர பேறுகால மற்றும் குடும்ப நலத் திட்டச் சேவைகள் அளிக்கப்படும்.

4. சுய உதவிக் குழுக்கள் போன்ற சமுதாய அமைப்புகள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தகுதிவாய்ந்த தம்பதியினரிடம் குடும்ப கட்டுப்பாட்டுத் திட்டத்தினை ஏற்றுக்கொள்வதற்கான மனமாற்றம் ஏற்படுத்தப்படும்.

5. வளர் இளம் பெண்கள் மற்றும் கருவுற்ற தாய்மார்களின் ஊட்டச் சத்து நிலை உயர்த்தப்படும்.

6. மாவட்ட ஆட்சியர் தலைமையில், பல்வேறு துறைகளின் ஒத்துழைப்புடன் மாவட்டத்தில் குடும்ப நலத் திட்டம் திறம்பட செயலாக்கப்படும்.

2003-2004 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டம்

அனைத்து மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள அவசர மகப்பேறு மற்றும் பிறந்த குழந்தைகள் பாதுகாப்புப் பிரிவிற்கு ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கருவிகள் வழங்கப்படும்.

[2003 ஏப்ரல் 3

அத்தியாயம்-7

மருந்து கட்டுப்பாடு நிர்வாகம்

மருந்துகள், அழகு சாதனப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி, விநியோகம், விற்பனை ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கென கீழ்க்காணும் சட்ட விதிமுறைகளை திறம்பட அமலாக்கம் செய்வதற்காக மருந்துக் கட்டுப்பாடு இயக்ககம் நிறுவப்பட்டுள்ளது.

(அ) 1940 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் ஒப்பனைப் பொருட்கள் சட்டம் மற்றும் 1945 ஆம் ஆண்டு விதிகள்.

(ஆ) 1995 ஆம் ஆண்டு மருந்துகள் விலைக்கட்டுப்பாட்டு ஆணை.

(இ) 1954 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் மாயாஜால நிவாரணங்கள் (மறுக்கத்தக்க விளம்பரங்கள்) சட்டம்.

(ஈ) 1985 ஆம் ஆண்டு போதை மருந்துகள் மற்றும் மன மயக்கம் தரும் பொருட்கள் சட்டம்.

ஆங்கில முறை, ஆயுர்வேதம், சித்தா, யுனானி, ஓமியோபதி மருந்துகள், ஒப்பனைப் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிக்கவும், விற்பனை செய்யவும் தேவையான உரிமங்கள் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகளை மருந்துக் கட்டுப்பாடு இயக்குநர் மேற்கொள்கிறார். மத்திய உரிமம் வழங்கும் குழுமத்துடன் இணைந்து தமிழ்நாட்டில் இரத்த சேமிப்பு வங்கிகளுக்கு உரிமம் வழங்கும் பணியினையும் இவர் ஆற்றுகிறார்.

போலி மருந்துகள் மற்றும் தரமற்ற மருந்துகள் குறித்து தென்மாவட்டங்களிலிருந்து வரும் புகார்களை ஆய்வு செய்து நடவடிக்கைகள் எடுக்க, மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு நடமாடும் புலனாய்வுக் குழுவும், சென்னை பகுதியிலிருந்து வரும் புகார்களை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க இயக்குநர் அலுவலகத்தில் ஒரு சட்டம் மற்றும் புலனாய்வுக் குழுவும் செயல்படுகின்றன. இதுதவிர, சென்னையிலுள்ள 'புலனாய்வுப் பிரிவு, சட்டம் தொடர்பான பணிகளையும், சிறப்பு ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகிறது.

இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ், முழு திறன் கொண்ட ஒரு மருந்து ஆய்வுக் கூடம் இயங்கி வருகிறது. அரசு மற்றும் தனியார்

2003 ஏப்ரல் 3]

மருத்துவமனைகள், உற்பத்தி நிலையங்கள் மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் ஆகிய இடங்களிலிருந்து மருந்து ஆய்வாளர்களால் சோதனைக்காக எடுக்கப்பட்ட மருந்துப் பொருட்கள், இந்த ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்யப்படுகின்றன.

2003-2004 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

1. மருந்துப் பரிசோதனைக் கூடத்திற்கு ரூ.9.25 இலட்சம் மதிப்பீட்டில் கருவிகள் வழங்குதல்.

2. மருந்துக் கட்டுப்பாடு இயக்ககத்திற்கு ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் கணினி முதலியவை வழங்குதல்.

அத்தியாயம்-8

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி

நல்ல ஆதாரங்களுடன் கூடிய அறிவியல் அடிப்படையிலான இந்திய மருத்துவ முறைகளில் இந்தியா தொன்மையான வளமான மரபைப் பெற்றிருக்கிறது. நம்முடைய முன்னோர்களின் அறிவியல் பூர்வமான சான்றுகளின் அடிப்படையில் உருவான சித்த மருத்துவ முறை தமிழ்நாட்டிற்குச் சொந்தமான இந்திய மருத்துவ முறையாக வளம் பெற்றுத்திகழ்கிறது. இன்னும்கூட தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்கள் இந்திய மருத்துவ முறைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். மேலும் இம்மருத்துவ முறைகளைப் பயன்படுத்துவோர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. பக்க விளைவுகள் இல்லாமல் பல்வேறு நோய்களைக் குணப்படுத்தும் சிறந்த செயல்திறனை கொண்டது என்றும் எளிய மக்கள் வாங்கக்கூடிய விலைகளில் உள்ளது என்றும் இந்திய மருத்துவம் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மாற்று மருத்துவ முறைகளைப் பயன்படுத்துவதில் உலகம் முழுவதும் உள்ள மக்களின் ஆர்வம் பெருகி வருகிறது என்பது உண்மையாகும். இதனால் புதிய சந்தர்ப்பங்களையும், சவால்களையும் எதிர்கொள்ள வேண்டிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது உருவாகிவரும் புதிய சந்தர்ப்பங்களையும், சவால்களையும் முழுமையாக சந்திப்பதற்கு தமிழக அரசு விழிப்புடன் எதிர்நோக்கி உள்ளது. இந்திய மருத்துவ முறையினை

[2003 ஏப்ரல் 3

ஊக்கப்படுத்துவதற்கு இவ்வரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மக்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதில் இந்திய மருத்துவ முறைகள் முழுமையான அளவில் மக்களைச் சென்றடைய தகுந்த சூழ்நிலையை உருவாக்குவதே அடிப்படை முயற்சியாகும். நடப்பாண்டில் 39 வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளில் இந்திய மருத்துவப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேலும், 2002-2003 ஆம் ஆண்டில் 50 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய மருத்துவப் பிரிவுகளைத் தொடங்குவதற்கு அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதோடு மட்டுமல்லாமல் இந்த அரசு அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இந்திய மருத்துவப் பிரிவுகளை படிப்படியாகத் தொடங்குவதற்கு உத்தேசித்துள்ளது.

இந்திய மருத்துவ முறைகளை மேம்படுத்துவதற்கான செயல் திட்டங்கள்

இந்திய மருத்துவ முறைகள் மேலும் மேம்படுத்தப்பட வேண்டும். அதனுடைய பயன்கள் மக்களுக்குச் சென்றடைய இந்திய மருத்துவத்தைப் பற்றிய நம்பகத் தன்மையை அதிகரிக்க வேண்டும். அரசு மருத்துவ நிறுவனங்களில் ஏனைய மருத்துவ முறைகளுக்கு இணையாக இந்திய மருத்துவ முறைகள் செயல்படுத்தப்பட வேண்டும். இம்முறைகள் நவீன மருத்துவத்திற்கு நல்ல துணையாக அமைந்து சாதாரண மனிதனுக்கும் ஆரோக்கிய வாழ்வினை வழங்க வேண்டும். இதுவே அரசினுடைய அடிப்படையான அணுகுமுறை ஆகும்.

இதன் தொடர் நடவடிக்கையாக அரசு பல்நோக்குக் கொள்கையுடன் கீழ்க்கண்ட இனங்களில் கவனம் செலுத்தி வருகிறது (அ) மருத்துவக் கல்வி (ஆ) ஆராய்ச்சி (இ) மாவட்டம், வட்டம், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அளவில் மக்களுக்கு இந்திய முறை மருந்துகள் கிடைக்கச் செய்தல் (ஈ) நல்ல தரக் கட்டுப்பாடு விதிகளுக்கு ஏற்ப மூலிகை மருந்துகளின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் உற்பத்தி செய்தல்.

மருத்துவக் கல்வி

இரு வகை அணுகுமுறைகள் பின்பற்றப்படுகின்றன. இந்திய முறை மருத்துவக் கல்லூரிகளை அரசே முன்வந்து நிறுவி அவற்றைச் செயல்படுத்தி வருகிறது. மேலும் நிர்ணயிக்கப்பட்டுள்ள தர நிர்ணய விதிமுறைகளை நிறைவு செய்யும் தனியார் கல்லூரிகளுக்கும்

2003 ஏப்ரல் 3]

அனுமதியளிக்கப்படுகிறது. அரசு மருத்துவக் கல்லூரிகளில் 236 மாணவர்களும், தனியார் கல்லூரிகளில் 790 மாணவர்களும் ஒரு வருடத்தில் சேர்க்கப்படுகின்றனர். அரசு மருத்துவக் கல்லூரிகளில் மட்டும் முதுநிலை மருத்துவப் படிப்பில் 80 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். இந்த நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் படிப்புப் பிரிவுகள் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:—

நிறுவனத்தின் தன்மை	சித்தா	ஆயுர் வேதா	யுனானி	ஹோமியோபதி	இயற்கை மற்றும் யோகா	கூடுதல்
இளநிலை பட்டப்படிப்பு						
அரசு	150	-	26	50	10	236
தனியார்	90	150	-	400	150	790
முதுநிலை பட்டப்படிப்பு						
அரசு	80	-	-	-	-	80
தனியார்	-	-	-	-	-	-
இயன்முறை மருத்துவம்						
அரசு	-	-	-	-	-	-
தனியார்	40	-	-	-	-	-

ஆராய்ச்சி

அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இத்துறை கூட்டு பரிவர்த்தனை ஒப்பந்தம் முன்னரே ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இதன்மூலம் மருந்துகளின் நோய் நீக்கும் தன்மைகளையும் அதன் மூலப்பொருட்களின் கூட்டுத் தன்மைகளையும் வெளிப்படையாக சோதனையின் முடிவில் அறிய நேரிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள இந்திய மருத்துவ முறைகள் அனைத்திலும் உள்ள ஆற்றலை வெளிக்கொணர இத்துறையின் செயல்பாடுகளில் ஒத்திசைவு கொண்ட பல்கலைக்கழகங்களுடன் கூட்டுப் பரிவர்த்தனை ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்படும்.

மருத்துவ சிகிச்சை வசதிகள்

இந்திய மருத்துவத் துறையில் தற்போது 632 நிலையங்கள் பொது மக்களுக்கு மருத்துவ வசதிகளை அளித்து வருகின்றன. அந்நிலையங்களில் சித்த மருத்துவ வசதிகளுக்காக 965 படுக்கை வசதிகள் உள்ளன.

1997 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை இந்திய மருத்துவ முறையில் பயனடைந்த நோயாளிகளின் எண்ணிக்கையை விளக்கும் வரைபடம் இணைப்பு 6-ல் உள்ளது. 1997ஆம் ஆண்டு நோயாளிகளின் எண்ணிக்கையை ஒப்பிடும்போது 2002 ஆம் ஆண்டில் 75% உயர்ந்துள்ளது.

இலவச மருத்துவ முகாம்கள்

இந்திய மருத்துவ முறையை மக்களிடையே பரப்புவதற்காக இவ்வரசு மாவட்டங்களில் நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் இலவச மருத்துவ முகாம்களை அங்குள்ள ஏழை நோயாளிகள் பயனடையும் வண்ணம் நடத்தி வருகிறது. அம்முகாமில் ஆர்டிஐ. / எஸ்டிஐ. போன்ற நோயாளிகளும் பயன்பெற்று வருகின்றனர். அம்முகாம்களில் நோயாளிகளுக்கு இலவசமாக மருந்துகள் அளிக்கப்படுகின்றன. அருகிலுள்ள சித்த மருத்துவப் பிரிவுகளுக்குச் சென்று தொடர் சிகிச்சை பெற கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். 2002-03 ஆம் ஆண்டில் 757 இலவச சித்த மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 2,94,962 நோயாளிகள் பயன்பெற்று உள்ளனர். இந்திய மருத்துவ முறை மக்களை பெருமளவில் சென்றடைவதற்கு இந்த முகாம்கள் பெரிதும் பயனளிக்கும்.

தேசிய சித்த மருத்துவ நிறுவனம்

தமிழ்நாடு அரசு தேசிய சித்த மருத்துவ நிறுவனம் ஒன்றினை சென்னை தாம்பரத்தில் அமைப்பதற்கான விரைவான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறது. மைய அரசு ரூ.4 கோடியினை இத்திட்டத்திற்காக வழங்கியுள்ளது. கட்டுமானப் பணிகள் மத்திய பொதுப் பணித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் அமைப்பதற்கான மூலதனச் செலவுகளை மாநில அரசும், மைய அரசும் 40:60 என்ற வீத அடிப்படையில் பகிர்ந்து கொள்ளும். மாநில அரசு தனது பங்கின் ஒரு பகுதியாக 14.78 ஏக்கர் நிலத்தை இலவசமாக வழங்கி உள்ளது.

மருத்துவ மூலிகை வாரியம்

மருத்துவ மூலிகைகளைப் பாதுகாக்கவும், நிலையாக உபயோகப்படுத்தவும், பயிரிடவும், அதனை ஏற்றுமதி செய்வதற்குமான பணிகளை மேம்படுத்த தமிழ்நாடு அரசு ஒரு மருத்துவ மூலிகை வாரியத்தினை உருவாக்கியுள்ளது.

இல்லங்களில் இந்திய மருத்துவ முறை சிகிச்சை முன்னோடித் திட்டம்

சிறிய நோய்களுக்கு இல்லங்களிலேயே சிகிச்சை பெற வசதியளிக்கும் முன்னோடித் திட்டம் ஒன்றினை தேனி மாவட்டத்தில் செயல்படுத்த மைய அரசு ரூ.8.03 இலட்சம் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கிராமப்புற மக்களுக்கு குறைந்தபட்சம் மூலிகை மருந்துகள், பயிற்சி பெற்ற கிராம சுகாதார செவிலியர்கள் மூலம் இலவசமாக வழங்கப்படும். இத்திட்டத்திற்கான மருந்துகளை 'டாம்ப்கால்' நிறுவனம் விநியோகம் செய்யும்.

உலக அளவிலான மாநாடு

பல்வேறு மருத்துவ முறைகளைச் சார்ந்த நிபுணர்களை ஒரே மேடையில் கொண்டுவரும் நோக்கத்துடன், 21 ஆம் நூற்றாண்டில் இந்திய முறை மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவத்தின் பங்கு என்ற தலைப்பிலான உலக அளவிலான மாநாடு சென்னையில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. நிலையான நல்வாழ்வுக்கு இக்கருத்துப் பரிமாற்றம் வழிவகை செய்யும் என்பதில் மாற்றுக் கருத்து ஏதும் இல்லை. 1,200 பேராளர்கள் பங்கேற்றனர். 300 அறிவியல் ஆய்வுக் கட்டுரைகள் பெறப்பட்டன.

டாம்ப்கால்

இக்கழகத்தில் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.50 இலட்சங்கள். தற்போதைய செலுத்தப்பட்ட மூலதனமான ரூ.20.75 இலட்சங்கள் தமிழ்நாடு அரசினால் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டு முதல் ஆதாயப் பங்கை அரசிற்குச் செலுத்த ஆரம்பித்துள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் 12.5 வீதத்தில் ரூ.2.59 இலட்சம் பங்கீட்டுத் தொகையாக அரசுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

டாம்ப்கால், 2000-2001 ஆம் ஆண்டில் ரூ. 37.52 இலட்சம் இலாபமும், 2001-2002 ஆம் ஆண்டில் ரூ. 46.19 இலட்சம் இலாபமும் ஈட்டியுள்ளது.

2003-2004 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

1. 25 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.66.11 இலட்சம் மதிப்பீட்டில் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதிப் பிரிவுகள் தொடங்குதல்.

2. சென்னை அறிஞர் அண்ணா அரசு இந்திய முறை மருத்துவமனையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் பிரிவுக்கென கட்டடம் ரூ.20 இலட்சத்தில் கட்டுதல்.

அத்தியாயம்-9

டேனிடா தமிழ்நாடு பகுதி நல்வாழ்வுத் திட்டம்

டேனிடா தமிழ்நாடு பகுதி நல்வாழ்வுத் திட்டம், மைய அரசு ஆதரவு பெற்று வெளிநாட்டு நிதி உதவியுடன் அமலாக்கப்படும் திட்டமாகும். 1996 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் மூன்றாம் கட்ட இத்திட்டப் பணிகள் தருமபுரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் பெரும்பாலான செயலாக்கங்களை உள்ளடக்கியது ஆகும். மேலும் இத்திட்டத்தின் சில செயல்பாடுகள், பழைய திட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல். கடலூர் மற்றும் விழுப்புரம் ஆகியவற்றிற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அதோடு மட்டுமல்லாது மாநில அளவில் பயிற்சி அளித்தல், மருந்து வழங்குதல் போன்ற பணிகளும் இத்திட்டத்தில் அடங்கும். திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.59.10 கோடி. இடைக்கால ஆய்வின்படி பரிந்துரை செய்யப்பட்டதன் அடிப்படையில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.70.76 கோடியாக மாற்றியமைக்கப்பட்டது.

புதிய திட்ட மாவட்டங்களில் கட்டுமானப் பணிகளுக்கான ஒப்புதல் பெறப்பட்ட மொத்தம் 368 சமுதாய ஆதரவு பெற்ற சுகாதார துணை மையங்களில் 352 மையங்களுக்கான கட்டடங்கள் கட்டப்பட்டு செயல்படுகின்றன. திட்டமிட்டபடி 113 ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 5 துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் மற்றும் 18 மண்டல பயிற்சி மையங்களில் 'கட்டமைப்பு வசதிகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

தருமபுரி மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் தெரு நாடகங்கள் மூலம் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

துணை சுகாதார நிலையங்களுக்கான பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் எளிமையாக்கப்பட்டுள்ளன. சுகாதார நிர்வாக தகவல் தொடர்பு அமைப்பினை உயர்த்திட, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

மைய அரசும் டேனிஷ் அரசும் இத்திட்டத்தினை டிசம்பர் திங்கள் 2003 வரை நீட்டித்துள்ளது.

அத்தியாயம்-10

பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம்

பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் 1997-98 ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகளுக்கு கீழ்க்கண்ட இரண்டு அம்சங்களை உள்ளடக்கி செயல்படுத்தப்பட்டு வருகின்றது:—

1. மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் துணைத் திட்டமாக ரூ.23.14 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்துதல்.

2. மாநிலம் முழுவதும் மீதமுள்ள அனைத்து மாவட்டங்களில் பேறுசார் திட்டத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

துணைத் திட்டத்தின் செயலாக்கங்கள்

கட்டுமானப் பணிகள் மற்றும் உபகரணங்கள்

நகர சுகாதார மையங்கள் மற்றும் துணை சுகாதார மையங்கள் கட்டுதல், துணை சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார மையங்களில் சிறிய கட்டுமானப் பணிகள் ஆகிய பணிகள் ரூ.565.65 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன. ரூ.155 இலட்சம் மதிப்பீட்டில் நகர சுகாதார மையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கு பேறுகால, குழந்தைகள் நல மற்றும் அறுவை சிகிச்சை அரங்கங்களுக்குத் தேவையான கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு ரூ.108 இலட்சம் செலவில் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுகாதார நிர்வாக தகவல் அமைப்பு

மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் ஏனைய திட்ட மாவட்ட அலுவலகங்களுக்கும் மற்றும் தொடர்புடைய இயக்ககங்களுக்கும் ரூ.105 இலட்சம் செலவில் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து சுகாதாரப் பணியாளர்களுக்கும் ரூ.10 இலட்சம் செலவில் கணினிப் பயிற்சி அளிக்கப்படும்.

தகவல் கல்வி மற்றும் தொடர்பு

தேனி மாவட்டத்தில் ரூ.24 இலட்சம் செலவில் தெரு நாடகங்கள் மூலம் சமுதாய பங்கேற்பு ஏற்படுத்தப்பட்டது.

ரூ.13.08 இலட்சம் செலவில் அகில இந்திய வானொலி மூலம் சுகாதார தகவல்கள் ஒலிபரப்பப்பட்டன.

தேனி மாவட்டத்தில் தன்னார்வ நிறுவனங்களின் உதவியுடன் ரூ.6.5 இலட்சம் செலவில் அவசர சிகிச்சை தேவைப்படும் பேறுகால நிகழ்வுகள் மற்றும் விபத்துக்குள்ளானோருக்கு உடனடி மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கென வயர்லெஸ் வசதியுடன் கூடிய அவசரகால போக்குவரத்து வசதிகள் செய்து தரப்படுகின்றன.

தேசிய அங்கம்

1. மைய அரசினால் முதல் தவணையாக வழங்கப்பட்ட ரூ.402.30 இலட்சத்தில் மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பெரிய அளவிலான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. துணை சுகாதார மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.343 இலட்சம் இரண்டாம் தவணையாக அளிக்கப்படும்.
2. ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார மையங்களில் ரூ.220 இலட்சம் செலவில் சிறிய கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
3. துணை சுகாதார மையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு வழங்குவதற்கென ரூ.800 இலட்சம் மதிப்பீட்டில் மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ

சேவைக் கழகத்தினால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் ரூ.125 இலட்சம் செலவில் பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத் திட்ட மருந்துகள் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

4. மருத்துவமனைகளில் நடத்தப்படும் டியூபெக்டமி மற்றும் சிசேரியன் போன்ற அவசர அறுவை சிகிச்சைகளுக்கும் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடத்தப்படும் டியூபெக்டமி அறுவை சிகிச்சைக்கும் தேவைப்படும் மயக்க மருத்துவர் மற்றும் பேறுசார் மருத்துவர்களை தனியார் துறையிலிருந்து மதிப்பூதிய அடிப்படையில் பணியில் அமர்த்தப்படுகின்றனர். ஆர்.டி.ஐ மற்றும் எஸ்.டி.ஐ. (RTI/STI) மருந்தகங்கள் 70 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிறுவப்பட்டுள்ளன. நாள் முழுவதும் பேறுகால மருத்துவ வசதியினை அளித்திட ஒப்பந்த அடிப்படையில் மூன்று செவிலியர்கள், ஓட்டுநர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பயிற்சிகள்

மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கு பயிற்சிகள் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளன. இதுவரை பயிற்சிக்கென ரூ.693 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீட்டின்கீழ் திருவண்ணாமலை, விழுப்புரம், சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் பெரம்பலூர் மாவட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்ட விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ரூ.15.84 இலட்சத்தில் கிராமப்புறங்களில் முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

2003-2004 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

1. சமுதாயத்திற்கும் அரசுக்கும் பாலமாக செயல்பட வளர் இளம் பெண்களைத் தெரிவு செய்து அவர்தம் திறமையை வளர்த்திடுவதற்கான திட்டம் ரூ.73 இலட்சத்தில் மேற்கொள்ளப்படும்.

2. ரூ.5.68 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பெண் சிசு கொலை நிகழ்வதற்கு அதிக அளவில் வாய்ப்புடைய குடும்பத்தினருக்கு அதனைத் தவிர்த்திட கலந்தாய்வுகள் நடத்தப்படும்.
3. சுகாதார ஊட்டச் சத்துப் பணியாளர்கள் மற்றும் சமுதாய மகளிர் அமைப்புகள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து விழிப்புணர்வு முகாமகள் ரூ.24.87 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.
4. ரூ.16.76 இலட்சம் செலவில் கிராமப்புற அளவில் முகாம்கள் நடத்தப்பட்டு பேறுசார் மற்றும் குழந்தை நலப் பணிகள் வலுப்படுத்தப்படும்.

அத்தியாயம் 11

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

எச்.ஐ.வி./ எய்ட்ஸ் என்பது சமுதாயத்தின் எல்லா அங்கங்களையும் உள்ளடக்கிய ஒரு பிரச்சினையாகும். இப்பிரச்சினையைத் தீர்க்க பல்முனை நடவடிக்கைகள் தேவைப்படுகிறது. தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் 1994 ஆம் ஆண்டு எச்.ஐ.வி./எய்ட்ஸைத் தடுப்பதற்கான ஒரு சிறந்த நோக்கத்தோடு தொடங்கப்பட்டது. எச்.ஐ.வி./ எய்ட்ஸ் தடுப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் இச்சங்கம் ஒரு சிறந்த முன்னோடியாக உள்ளது. எச்.ஐ.வி./எய்ட்ஸ் தடுப்பு இச்சங்கத்தின் ஒரு முக்கியமான நோக்கமாக தொடர்ந்தாலும் எச்.ஐ.வி./எய்ட்ஸ் உடன் வாழ்பவர்களின் நலனில் தேவையான கவனத்தை செலுத்துவதோடு அவர்களுக்கு மருத்துவ உதவி மற்றும் சிகிச்சை அளிக்கவும், அவர்களின் மனித உரிமையைப் பாதுகாக்கவும் இச்சங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

கொள்ளை நோயியல்

2001 ஆம் ஆண்டில் எச்.ஐ.வி. கண்டறியும் நிலையங்கள் 17 ஆக இருந்தது. 2002 ஆம் ஆண்டில் 24-ஆக உயர்ந்துள்ளது. புள்ளி விவரங்களின்படி தமிழ்நாட்டில் கருவுற்ற தாய்மார்களிடையே எச்.ஐ.வி.யின் தாக்கம், 2001 ஆம் ஆண்டில் 1.1 சதவீதமாக இருந்தது. 2002 ஆம் ஆண்டில் இது 0.87 சதவீதமாகக் குறைந்துள்ளது. இருந்தபோதிலும் நோய்க்கு உள்ளாகும் வாய்ப்பு அதிகமுள்ள மக்களிடையே இந்நோய் அளவு விகிதம் தொடர்ந்து அதிகமாக உள்ளதை இப்புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

தகவல் கல்வி தொடர்பு

ஆரம்ப நிலையில் எச்.ஐ.வி./எய்ட்ஸ் தடுப்பதில் தகவல் கல்வி தொடர்பின் பங்கு ஒரு முக்கியமான அம்சமாகும். சமுதாயத்தின் எல்லா பிரிவினரிடமும் இந்நோய் பற்றிய விழிப்புணர்வு அதிக அளவில் உள்ளது. ஆனால் விழிப்புணர்வு மட்டுமே நமக்குத் தேவையான எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய முடியாது. இந்த விழிப்புணர்வு மக்களிடையே நடத்தை மாற்றத்தை கொண்டு வரும்படி செய்யப்பட வேண்டும். அதற்குத் தேவையான தகவல்கள் தொடர்ந்து திரும்பத் திரும்ப அளிக்கப்பட வேண்டும். பொதுவான தகவல் கல்வி தொடர்பு முகாம்களைத் தவிர இச்சங்கம் தனிநபர் தொடர்பின் மூலமாக தேவையான நடத்தை மாற்றங்களை அதிக பாதிப்பிற்கு உள்ளான மக்களிடையே எடுத்துச் செல்ல அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. அதேபோன்று, எச்.ஐ.வி./எய்ட்ஸ் உடன் வாழ்பவர்களுடைய மனித உரிமை மற்றும் மற்ற வேறுபாடுகளைக் களைவதற்கான நடவடிக்கைகளையும் தகவல் கல்வி தொடர்பு மூலமாக எடுக்கப்பட்டு வருகிறது.

தொண்டு நிறுவனங்கள்

எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதில் தொண்டு நிறுவனங்கள் ஒரு மிக முக்கியமான பங்காற்றுகின்றன. தற்போது, 112 திட்டங்களை இத்தொண்டு நிறுவனங்களின் மூலமாக தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் செயல்படுத்தி வருகிறது.

பால்வினை நோய்கள் மற்றும் பிறப்புறுப்பு நோய் பிரிவுகள்

பால்வினை நோய் தொற்றுள்ளவர்களுக்கு எச்.ஐ.வி./எய்ட்ஸ் பரவும் வாய்ப்பு மிகவும் அதிகம். ஆகையால், பொதுமக்களிடையே பால்வினை நோய் பரவுவதைத் தடுப்பது. எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோய் பரவுவதைத் தடுப்பதற்கு மிகவும் இன்றியமையாததாகும். தமிழகத்தில் 57 பால்வினை நோய் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இந்த பால்வினை நோய் பிரிவுகளுக்கு இச்சங்கம் மருந்து மற்றும் தேவையான கட்டமைப்பு வசதிகளை அளித்து வருகிறது.

ஆணுறை வினியோகம்

பாதுகாப்பற்ற உடலுறவினால் ஏற்படும் எச்.ஐ.வி./எய்ட்ஸ் மற்றும் இதர பால்வினை நோய்களைத் தடுப்பதற்காக விலைமாதர்கள்.

ஓட்டுநர்கள் மற்றும் ஏனையோருக்கு ஆணுறைகள் வினியோகிக்கப்படுகின்றன. இம்மாநிலத்தில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் ஆணுறைகள் கிடைக்கும்படி செய்ய முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள்

எச்.ஐ.வி. பரவுவதைத் தடுப்பதிலும், எச்.ஐ.வி. உடன் வாழ்வோருக்கு ஆதரவு அளிப்பதிலும், தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. தற்போது, அரசு மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் 42 தன்னார்வ ஆலோசனை மற்றும் பரிசோதனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்கள் மக்களிடம், அவர்களுடைய எச்.ஐ.வி. நிலையை இரகசியமாக அளிக்கவும், அவர்களுக்கு ஆலோசனை, மருத்துவ உதவி மற்றும் மேல் சிகிச்சைக்கான பரிந்துரை அளிப்பதற்கும் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

இரத்தப் பாதுகாப்பு

இரத்தம் மற்றும் இரத்தம் சார்ந்த பொருள்கள் மூலமாக எச்.ஐ.வி./எய்ட்ஸ் பரவுகிறது. ஆகையால், பாதுகாப்பான இரத்தம் மற்றும் பரிசோதிக்கப்பட்ட இரத்தத்தை அளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு இரத்த மாற்றுக் குழுமம், மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுடன் சேர்ந்து இரத்த வங்கிகள் பயன்படுவதை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. இவ்வாறு எடுத்துவரும் தொடர் முயற்சிகளினால் தன்னார்வத்துடன் இரத்தம் அளிப்பவர்களிடம் இருந்து எடுக்கப்படும் இரத்தத்தின் அளவு 2001 ஆம் ஆண்டில் 50.40 சதவீதமாக இருந்தது, 2002 ஆம் ஆண்டில் 59.40 சதவீதமாக உயர்ந்துள்ளது.

தாய் சேய் மேவா திட்டம்

15 வயதிற்குள் உள்ள குழந்தைகளுக்கு எச்.ஐ.வி. பரவுவதற்கு ஒரு முக்கிய காரணம் எச்.ஐ.வி./எய்ட்ஸ் உள்ள தாயிடமிருந்து பிறக்கும் குழந்தைக்கு பரவுவதே ஆகும். இதற்கான திட்டம் தாய் சேய் மேவா திட்டம் என்று அழைக்கப்படுகிறது. தாய்க்கும் சேய்க்கும் வைரஸ் கிருமிக்கு எதிரான மருந்து அளிப்பதன் மூலம் தொற்றுள்ள தாயிடமிருந்து குழந்தைக்கு எச்.ஐ.வி. பரவுவதை சிறப்பாகக் குறைக்க

முடியும். இத்திட்டம் தற்போது தமிழகத்தில் 47 மருத்துவமனைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நிலையங்கள், அட்லாண்டா

அரசு நெஞ்சக நோய் மருத்துவமனை எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயால் துன்பப்படும் நோயாளிகளின் தேவையை அதிக அளவில் பூர்த்தி செய்து வருகிறது. அமெரிக்காவில் உள்ள நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நிலையங்கள் (CDC) அட்லாண்டா அரசு நெஞ்சக நோய் மருத்துவமனை நிலையத்தை எச்.ஐ.வி./எய்ட்ஸ் தொடர்பான நோய்களுக்கான சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிக்கான மண்டல நிலையமாக உயர்த்த முன்வந்துள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் அமெரிக்காவில் உள்ள நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நிலையங்கள், அட்லாண்டா உடன் அரசு கையொப்பமிட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி ரூ.4.7 கோடியில் பரிசோதனை நிலைய முன்னேற்றத்திற்கும், தகவல் தொழில்நுட்பத்தை உயர்த்துவதற்கும், கூடுதல் பயிற்சிக்கான வசதிகளை அளிப்பதற்கும் செலவிடப்படும்.

அன்பும் ஆதரவும்

எச்.ஐ.வி./எய்ட்ஸ் உடன் வாழ்பவர்களின் தேவையைக் கண்டறிவதற்காகவும், பொதுவாக நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும் மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்குத் தொடர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இச்சங்கம் நோய் தொற்றுக்கான மருந்துகளை வாங்குவதற்கான நிதி உதவியை அளித்து வருகிறது. இதைத் தவிர, எச்.ஐ.வி.யுடன் வாழ்பவர்களுக்கு அன்பும், ஆதரவும் அளிப்பதற்காக தனியார் மருத்துவமனைகளுக்கு ஆதரவு அளிக்கப்பட்டு வருகிறது. எச்.ஐ.வி./எய்ட்ஸ் உடன் வாழ்பவர்களுக்காக தொடங்கப்பட்டுள்ள சங்கத்திற்கு அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், அவர்களுக்கு மனரீதியான சமூக ஆதரவு அளிப்பதற்காகவும் இச்சங்கம் செயல்பட்டு வருகிறது.

சமுதாய நல நிலையம்

எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயாளிகள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தாருக்கு அன்பும், ஆதரவும் அளிப்பதற்காக வேலூர் மற்றும் கோயம்புத்தூரில் சமுதாய நல நிலையங்களை தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் ஏற்படுத்தியுள்ளது. அதே போன்று, திருநெல்வேலி, திருச்சி மற்றும் நாமக்கல் மாவட்டங்களிலும் விரைவில் சமுதாய

நல நிலையங்கள் தன்னார்வ நிறுவனங்கள் மூலம் ஏற்படுத்தப்பட்டவுள்ளது.

யு.என்.டி.பி. உதவியுடன் திட்டம்

தொற்றுள்ளவர்களுக்கு ஏற்ற சுற்றுப்புறம் மற்றும் அவர்களுக்கான உரிமை அளிப்பதற்காக யு.என்.டி.பி. உதவியுடன் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பின் மூலமாக ரூ.80.77 இலட்சத்தில் ஒரு திட்டம் செயலாக்கப்படவுள்ளது.

2003-2004 ஆம் ஆண்டுக்கான நிதி

2003-2004 ஆம் ஆண்டில் ரூ.15.00 கோடி நிதிக்கான திட்டத்தை தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனம், இந்திய அரசு, தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கு அளித்துள்ளது.

அத்தியாயம் - 12

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

நிர்வாக அமைப்பு

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்படி 01-07-1994-ல் நிறுவப்பட்டது.

இக்கழகம் இயக்குநர் குழுவால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை செயலாளர் இக்கழகத்தின் தலைவராக உள்ளார். இக்கழகத்தின் அன்றாட நடவடிக்கைகளை நிர்வாக இயக்குநர் கவனித்துக்கொள்கிறார்.

செயல்பாடுகள்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் சீரமைக்கப்பட்ட நடைமுறையினைப் பின்பற்றி தரமான மருந்துகள், அறுவை சிகிச்சைக்குத் தேவையான பொருள்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து அக்கழகத்தின் 24 சேமிப்புக் கிடங்குகள் வழியாக தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் அவை கிடைப்பதை உறுதி செய்கிறது.

தமிழகத்தில் 35 அரசு மருத்துவமனைகளில் சி.டி. ஸ்கேன் கருவிகளையும், மற்றும் சென்னை பொது மருத்துவமனை மற்றும் மதுரை இராஜாஜி மருத்துவமனை ஒவ்வொன்றிலும் ஒரு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவியையும் இம்மருத்துவக் கழகம் நிறுவி குறைந்த கட்டணத்தில் பொதுமக்களுக்கு சேவை செய்து வருகிறது.

மருந்துகள் கொள்முதல்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் 270 வகை மருந்துகள், 73 வகை அறுவை சிகிச்சை பொருட்கள் மற்றும் அதற்கான 113 வகை தையல் பொருட்கள் ஆகியவற்றை திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில், சிறந்த மருந்து தயாரிப்பாளரிடமிருந்து கொள்முதல் செய்கிறது. ஒவ்வொரு மருந்துக் கிடங்கிற்கும் தேவைப்படும் மருந்துகள், மருந்து விநியோகங்கள் ஆகியவை கணினி வலை முறையின்கீழ் கண்காணிக்கப்படுகிறது.

தர நிர்ணயக் கட்டுப்பாடு

தரம்வாய்ந்த மருந்துகளை வழங்கும்பொருட்டு தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தில் தர நிர்ணயக் கட்டுப்பாடு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. தர நிர்ணயக் கட்டுப்பாடு பிரிவு மருந்து நிறுவனங்கள் வழங்கும் மருந்துகளிலிருந்து மாதிரி எடுத்து சிறந்த சோதனைக் கூடங்களில் பகுப்பாய்வு செய்வதன்மூலம் மருந்துகளின் தரத்தை உறுதி செய்கிறது. சோதனை செய்யப்பட்ட, தரமான மருந்துகள் மட்டுமே மருத்துவமனைகளுக்கு வழங்கப்படுகின்றன.

விநியோகம்

துறைத் தலைவரால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதன் அடிப்படையில் இக்கழகத்தால் பற்று வரவு புத்தகம் ஒவ்வொரு மருத்துவமனைக்கும் வழங்கப்படுகிறது. இந்த பற்று வரவு புத்தகம் மூலம், மருத்துவமனைகள், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கிடங்கிலிருந்து மருந்துகளை பெற்றுக்கொள்ளலாம்.

முழு உடல் பரிசோதனைத் திட்டம்

சென்னை அரசு பொது மருத்துவமனையில் நடைபெற்றுவரும் முழு உடல் பரிசோதனைத் திட்டத்தின் நிதிக் கட்டுப்பாடு 01-04-2001 முதல் இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது. இக்கழகம் இத்திட்டத்தைச் செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

[2003 ஏப்ரல் 3

ஜி.ஐ. பிளீடு மற்றும் ஹெப்டோபிலியரி மையம்

ஐ.எஸ்.ஓ. 9002 சான்றளிக்கப்பட்ட ஜி.ஐ. பிளீடு மற்றும் ஹெப்டோ பிலியரி மையம் (சிறப்பு வார்டு), சென்னை, ஸ்டான்லி மருத்துவமனையில் இரைப்பை குடல் சார்ந்த அறுவை சிகிச்சைத் துறையின்கீழ் ஒரு தனிப்பட்ட பிரிவாக செயல்பட்டு வருகிறது. இம்மையத்தின் வருவாயிலிருந்து இம்மையத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளும் இக்கழகத்தால் செய்யப்பட்டு வருகின்றன.

பிற செயல்பாடுகள்

1. அரசின் ஏனைய துறைகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நிறுவனங்களால் நடத்தப்படும் மருத்துவமனைகளுக்கும் தேவையான மருந்துகளை வாங்கி வழங்குதல்.

2. ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் மண்டல நோய் கண்டறியும் மையங்கள் தொடர்பான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்.

3. சென்னை மகப்பேறு மருத்துவ நிறுவனம் மற்றும் தாய் சேய் நல மருத்துவமனையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் பிரிவினைப் பராமரித்தல்.

4. மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான இணைய தளத்தைப் பராமரித்தல்.

5. அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் உள்ள கருவிகளைப் பராமரிக்கும் பணியினை இக்கழகம் ஏற்க உள்ளது.

2003 ஏப்ரல் 3]

அத்தியாயம் - 13

தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை

தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை 1981 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ள பழுதாகும் ஊர்திகளின் எண்ணிக்கையைக் குறைவாக வைத்திருப்பதே இத்துறையின் நோக்கமாகும்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து இயக்ககங்களைச் சேர்ந்த மொத்த ஊர்திகளின் எண்ணிக்கை 2,877.

செயல்பாடுகள்

சென்னை, வேலூர், சேலம், கோயம்பத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 7 மண்டல பணிமனைகள் செயல்படுகின்றன. இதைத் தவிர 9 மாவட்ட தலைமைப் பணிமனைகள் மற்றும் 27 நடமாடும் பணிமனைகள் இயங்குகின்றன. மேலும் சென்னையில் ஒரு மறுசீர் பிரிவு மற்றும் மைய பழுது நீக்கப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

1981-ல் மொத்த வாகனங்களில் நல்ல முறையில் இயங்கி வந்த வாகனங்களின் விழுக்காடு 72.6 ஆக இருந்தது, 2002ஆம் ஆண்டில் 96 விழுக்காடாக படிப்படியாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்கீழ் இயங்கும் பல்வேறு இயக்ககங்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்ற புதிய ஊர்திகள் வாங்கும் பணியையும் இத்துறை மேற்கொள்கிறது.

தமிழக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர் மற்றும் மைய அரசின் தொழிற் பழகுநர் பயிற்சிக் குழுமத்தின் இயக்குநர், தரமணி ஆகியோரால் அனுப்பப்படும் தொழிற்பயிற்சி சான்றிதழ் பெற்றவர்கள், பொறியியல் பட்டம் பெற்றவர்கள் மற்றும் பொறியியல் பட்டயம் பெற்றவர்கள் ஆகியோருக்கு, தொழில் பழகுநர் பயிற்சி இத்துறையினால் அளிக்கப்படுகிறது.

இணைப்பு 1


ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு நாளில் சராசரி புறநோயாளிகள்
2000–2001, 2001–2002 மற்றும் 2002–2003
150
130
110
90
70
50
30
10
ஏப்ரல் 63.7 77.46 91.84
மே 73.7 86.9 98.11
ஜூன் 72.7 83.7 99.02
ஜூலை 81.5 85.1 111.58
ஆகஸ்ட் 88.4 94 109.46
செப்டம்பர் 83.6 94.6 108.08
அக்டோபர் 85.5 108 114.87
நவம்பர் 83.1 109.8 123.39
டிசம்பர் 82.1 99.9 115.5
ஜனவரி 79.06 89.3 105.25
பிப்ரவரி 78.3 89.5 100.6
2000–2001
2001–2002
2002–2003

இணைப்பு 2


ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு மாதத்திற்கான சராசரி உள் நோயாளிகள்
2000–2001, 2001–2002 மற்றும் 2002–2003
18
16
14
12
10
8
6
4
2
0
ஏப்ரல் 4.46 7.1 11.4
மே 5.35 9.42 12.19
ஜூன் 5.87 8.15 13.9
ஜூலை 6.3 7.22 15.12
ஆகஸ்ட் 5.65 8.81 13.02
செப்டம்பர் 5.39 8.78 13.15
அக்டோபர் 5.24 9.16 12.57
நவம்பர் 5.29 9.02 13.99
டிசம்பர் 4.38 8.01 12.13
ஜனவரி 5 8.01 12.13
பிப்ரவரி 5.44 8.38 11.28
2000–2001
2001–2002
2002–2003

இணைப்பு 3



சிறப்பு மருத்துவ முகாம் - கண்டறியப்பட்ட நோய்கள்
2002–2003
நீரிழிவு நோய்
இருதய நோய்/ இரத்தக் கொதிப்பு
புற்றுநோய்
வயது முதிர்வு நோய்கள்
மற்றவை
41815
40071
4284
178834
520387
நடத்தப்பட்ட மருத்துவ முகாம்கள் = 385
பயன் பெற்றோர் எண்ணிக்கை
ஆண்கள் = 345946
பெண்கள் = 452496
மொத்தம் = 798442

இணைப்பு 4



ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெற்ற பிரசவங்கள்
2000–2001, 2001–2002 மற்றும் 2002–2003
8000
7000
6000
5000
4000
3000
2000
1000
0
ஏப்ரல் 47712 4484 6217
மே 4826 4826 6286
ஜூன் 4823 4931 6007
ஜூலை 4581 5204 6309
ஆகஸ்ட் 4155 5212 6170
செப்டம்பர் 4228 5368 6293
அக்டோபர் 4344 5842 6482
நவம்பர் 4266 5852 6395
டிசம்பர் 4266 5806 6347
ஜனவரி 4097 5527 5813
பிப்ரவரி 3714 5019 5186
2000-2001
2001-2003
2002-2003





தமிழ்நாடு ... 18453 நூலகம்